பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுமா ஓமந்தையில்? பக். 08

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c

தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 142 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 03, சனிக்கிழமை 16.04.2016


முச்சந்தி முரளி



அப்ப என்ன தரப்போறியள் அதையாவது சொல்லுங்கோ...

# மாநிலம், சமஷ்டிக்கு இங்கு இடமேயில்லை



## முதலமைச்சர் விக்கியின் கருத்துக்கு எதிராகவே பொது எதிரணி செயற்படும் என்கிறார் வாசுதேவ

கொழும்பு, ஏப்ரல் 16

மாநிலம் மற்றும் சமஷ்டி என்ற சொற்களுக்கு இலங்கையில் இடமில்லை. ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வுத் திட்டம் தொடர்பில் பேசுவதையே பொது எதிரணி ஆதரிக்கும்.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் கருத்துக்களுக்கு எதிராகவே பொது எதிரணியின் செயற்பாடு அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையில் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில் வினவிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் மக்கள் வடக்கு மாகாணத்தில் மாத்திரமே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று மூவின மக்களும் வாழ்கின்றனர். அதேபோல், கொழும்பு மற்றும் மலையகத்திலும் தமிழ் மக்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர்.

எனவே, விக்னேஸ்வரன் கூறுவதுபோல் எவ்வாறு இலங்கையை இரண்டு மாநிலங்களாகப் பிரிக்க முடியும்.

சமஷ்டி மற்றும் மாநிலம் என்பவை இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்குப் பொருந்தும். அவ்வாறு இலங்கையிலும் செய்யத்

பக். 23

## மே 2 முதல் வற் வரி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

பெறுமதிசேர் வரி (வற் வரி) அடுத்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 15 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

இது பற்றிய அறிவிப்பை நேற்று நிதி அமைச்சு

பக். 23

# தமிழர் காணிகளை ராணுவம் விரைந்து விடுவிக்கவேண்டும்

## வலியுறுத்துகின்றது பிரிட்டன்

கொழும்பு, ஏப். 16

வடபகுதியில் பாதுகாப்புத் தரப்பினர் கைப்பற்றியுள்ள தமிழ் மக்களின் காணிகளை விரைந்து விடுவிக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளது பிரிட்டன்.

இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை இந்த அரசு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருந்தாலும், இன்னும் அதிகளவிலான காணிகளை பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது என்று பிரிட்டனின் வெளிவிவகார அலுவலக இணை அமைச்சர் ஹயூகோ ஸுவையர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இன்னமும் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ளதாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

பக். 23



# அமெரிக்காவின் குற்றச்சாட்டு; பதில் வழங்குமாம் இராணுவம்

கொழும்பு, ஏப். 16

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், பதிலளிக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால், நாடுகள் தொடர்பிலான மனித உரிமைகள் - 2015 வெளியிடப்பட்டிருந்தது. இதில் இலங்கையில் இன்னமும் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள் - சித்திரவதைகள் தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பாதுகாப்புத் தரப்பினர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பதிலளிக்

பக். 23

# படிப்படியாகக் குறைகிறது குடாநாட்டின் வெப்பநிலை

## மாத இறுதியில் மழைக்கான வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்.மாவட்டத்தில் வெப்பநிலை படிப்படியாகக் குறைவடையத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களத்தினர், இந்த மாத இறுதியில் மழைக்கான வாய்ப்பு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களாக யாழ்.குடாநாட்டை வெப்பம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. இந்த வெப்பம் கடந்த சில தினங்களாக உச்சத்தை அடைந்திருந்தது. இதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உச்சபட்சமாக 36 பாகை செல்சியஸ் வெப்பநிலை வாசிப்பு பெறப்பட்

பக். 23

# திருகோணமலை மாணவரின் படுகொலைக்கு நீதி வேண்டும்

## அமெரிக்காவில் கவனவீர்ப்பு




கொழும்பு, ஏப். 16

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு அதிரடிப்படையினரால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட ரஜிகர் மனோகரன் உட்பட 5 தமிழ் மாணவர்களின் சாவுக்கு நியாயம் வழங்குமாறு, இலங்கை அரசை வலியுறுத்தி அமெரிக்காவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 5 மாணவர்கள் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். அந்த மாணவர்கள் கொண்டு வந்த கைக்குண்டு வெடித்ததாலேயே அவர்கள் கொல்லப்பட்டதாக, அப்போதைய மகிந்த அரசு தெரிவித்திருந்தது. இருப்பினும் கொல்லப்பட்ட மாணவர்களது ஒளிப்படங்கள் வெளிவந்த பின்னர்,

பக். 23

## கைதாகிய போராளியின் தாயார் முறையீடு

யாழ்ப்பாணம், ஏப். 16

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்களால், நுணாவிலில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளியின் தாயார், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நுணாவில் பகுதியில் வைத்து இராசதுரை ஜெயந்தன் (வயது-31) என்ற முன்னாள் போராளி, பயங்கரவாத தடுப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்களால், வெள்ளை வானில் கொண்டு செல்லப்பட்டிருந்தார். அவரைக் கைதுசெய்து கொண்டு சென்றதற்கான ஆவணங்கள் எவையும் உறவினர்களிடம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறானதொரு நிலையிலேயே, கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட

பக். 23

# சுவிஸில் அடைக்கலம் கோரும் இலங்கையர்கள்

## ஆட்சி மாற்றத்தின் பின்பும் இது தொடர்வதாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 16

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 15 மாதங்களாகியுள்ள நிலையிலும், தற்போதும் சுவிஸுக்கு அடைக்கலம் கோரி இலங்கையர்கள் விண்ணப்பிப்பதாக, அந்த நாட்டின் குடியேற்றச் செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அதிகளவிலானோர், சுவிற்சர்லாந்துக்கு அடைக்கலம் கோரி விண்ணப்பித்திருந்தனர். தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும் அடைக்கலம் கோரி விண்ணப்பிக்கின்றபோதும், அந்த எண்ணிக்கை குறைவடைந்திருக்கின்றது.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம், அடைக்கலம் கோரி 146 இலங்கையர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில்

பக். 25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிரச்சினை குறித்து ஆராய 5 அரச அதிபர்களுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16
வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான கலந்துரையாடலுக்கு வடக்கு மாகாணத்தின் ஐந்து அரச அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக எதிர் வரும் திங்கட்கிழமை, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை கொழும்புக்கு ஜனாதிபதி அழைத்துள்ளார். இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொள்ளவுள்ளார்.

வடக்கில் பாதுகாப்புத் தரப்பினரின் வசமுள்ள காணிகளின் விவரங்கள், அத்துடன் காணி தொடர்பான ஏனைய விவரங்களும் மாவட்ட அரச அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவை தொடர்பிலேயே இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் உரையாற்றும்போது, காணிகள் தொடர்பான விவரங்களைத் தனக்கு வழங்குமாறு உறுப்பினர்களைக் கோரியிருந்தார்.

அத்துடன், சில அரச அதிகாரிகள் காணிகள் தொடர்பில் வழங்கியுள்ள தகவல்கள் தவறானவை என்றும், எனவே தான் உறுப்பினர்களிடமிருந்து சரியான விவரங்களைக் கோரியிருந்ததாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பின் பின்னர், வடக்கில் காணி விடுவிப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-ஐ-5-101)

## வவுனியாவில் குழு மோதலில் நால்வர் காயம்; ஓட்டோ சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 16
வவுனியா இராசேந்திரகுளம் ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் 4 பேர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் வியாழக்கிழமை, இராசேந்திரகுளம் ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் ஒன்றாக இருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அந்தவேளை, அங்கு ஓட்டோவில் வந்த 4 பேரடங்கிய குழுவினர் அவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுத் தாக்குதல் நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் வந்தவர்கள் இரும்புப் பைப், பொல்லு என்பவற்றைக் கொண்டு வந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் திடீர்த் தாக்குதல் காரணமாக 4 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சில மணி நேரம் வரை இந்தத் தாக்குதல் நீடித்துள்ளது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மோதலின்போது, ஓட்டோவும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பாலகிருஷ்ணன் துசாந்தன் (வயது-22), சிவராசா ஜெயதீபன் (வயது-25), யோகராசா பார்த்தீபன் (வயது-28), யோகராசா சுதர்சன் (வயது-24) ஆகியோர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் யோகராசா பார்த்தீபன் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் அண்மைக் காலமாகக் குழுக்களிடையே மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. (த-5)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆயலத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் புதுவருட தினத்தன்று இடம்பெற்றது.விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பொழிந்தார். (த-ஐ)

## பண்டத்தரிப்பில் இன்று சித்திரைப் புதுவருட விழா

வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் சரவணபவன் அறக் கட்டளையும் இணைந்து நடத்தும் சித்திரைப் புதுவருட விழா இன்று சனிக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன், சிறப்பு விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவும், கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் காலை 6.00 மணிக்கு ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டம், சிறுவர் முதல் முதியோர் வரைக்குமான விளையாட்டுப் போட்டிகளும் மாலை நிகழ்வுகளாக பிற்பகல் 3.30 மணிக்குக் கிராமிய நடனம், பரிசளிப்பு மற்றும் தாயகத்தின் தலைசிறந்த இசைக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (வ)

## ஆவரங்காலில் அதிகரித்த மயிர்க்கொட்டி புழுக்கள்

அச்சுவேலி,ஏப்.16
அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் மயிர்க்கொட்டிப் புழுக்களின் தொல்லை பொது மக்களைப் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்குவதாகப் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வேலிகள் வளவுகளில் மரபு வழியாக நடுகை செய்யப்பட்டிருக்கும் பூவரச மரங்கள் மற்றும் முருங்கை, செவ்வரத்தை மரங்களின் இலைகளை விரும்பி உண்ணும் மயிர்க்கொட்டிப் புழுக்கள் கடும் வெப்பநிலையினால் மரங்களில் தங்கி இருக்காமல் இறங்கி வீடுகள் மற்றும் வீட்டின் சுவர்களில் பெருமளவில் ஊர்ந்து திரிகின்றன.

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு மயிர்க்கொட்டிப் புழுக்களின் பெருக்கம் அதிகரித்து உள்ளது. மயிர்க் கொட்டிகள் உடலில் பட்டுச் சொறிவு, எரிச்சலை உண்டாக்குவதோடு குழந்தைகள், சிறுவர்களைப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கி விடுகின்றன.

அத்துடன் உணவு வகைகளில் புழுவின் மயிர்கள் கலந்துவிடுவதாலும், நஞ்சுத்தன்மை உள்ள இந்தப் புழு உணவில் கலந்து விடுவதாலும் பல்வேறு நோய்த் தாக்கம் மற்றும் உடல் உபாதைகள் ஏற்படலாம் எனப் பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே மயிர்கொட்டிப் புழுக்களை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார பகுதியினர் பொருத்தமான வழிமுறைகளை வழங்கி உதவ வேண்டும் என பொது மக்கள் கோருகின்றனர். (த-ஐ-11)



[illegible] விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. விநாயகப் பெருமான் தேருக்கு எழுந்தருளி, வலம் வந்து அடியார்களுக்குக் காட்சியளித்தார். (த-ஐ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொதுநோக்கு மண்டபம் மூங்கிலாறில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மூங்கிலாறு கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் திறந்து வைத்ததுடன், புலம்பெயர்ந்த நபர் ஒருவரினால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் போரில் அவயவங்களை இழந்த பெற்றோர்களுடைய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்வு நேற்று மாலை 4 மணியவில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

புலம்பெயர்ந்த எங்களுடைய மக்கள் இங்குள்ள மக்கள் மீது மிகுந்த அக்கறையாக உள்ளார்கள். போரினால் பாதிக்கப்பட்ட எங்களுடைய பிள்ளைகள் கல்வி வளர்ச்சியில் முன்னேற வேண்டும் என்பதில் அவர்கள் அக்கறையாக இருக்கின்றனர். நாங்கள் உண்மையில் பெரியதொரு இழப்பைச் சந்தித்துள்ளோம். அது நிரந்தரப் பின்னடைவல்ல. அது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் எங்களுடைய பிள்ளைகள் கல்வி வளர்ச்சியில் சாதனைகள் படைக்க வேண்டும். அதன் மூலம் எங்களுடைய சமுதாயத்தில் மதிக்கப்படுபவர்களாக - கல்விமான்களாக தமிழை வளர்க்கக் கூடிய இளைஞர், யுவதிகளாக உருவாக வேண்டும் என்று நான் ஆசைப்படுகின்றேன் - என்றார். (த-5-ரி7)


# மக்கள் ஆலோசனையுடனேயே இறுதித் தீர்வு முன்வைக்கப்படும்

## யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஏப். 16
எமது மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். அதேபோல் ஏற்றுக் கொள்ள முடியாத தீர்வை ஏற்கப் போவதும் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அத்துடன், தயாரிக்கப்படும் இறுதித் தீர்வு, மக்களிடம் முன்வைக்கப்பட்டு, ஆலோசனை பெறப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று நாள் பயணமாக யாழ்ப்பாணம் வந்துள்ள இரா.சம்பந் தன், நேற்றைய தினம் மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பல்கலைக்கழக சமூகத்தினர், மருத்துவர்கள் போன்றோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இந்த ஆண்டு ஏற்படுத்தவுள்ள அரசமைப்புத் தொடர்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ,

எமது மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம் . அதேபோல் ஏற்றுக் கொள்ள முடியாத தீர்வை ஒருபோதுமே ஏற்கமாட்டோம். அத்துடன், இந்த நாட்டில் பல சந்தர்ப்பங்களை இழந்துள்ளோம். இவ்வாறு இழந்தது சுதந்திரத்துக்கு முன், பின் என்பதோடு, ஆயுதப் போராட்ட காலத்திலும் இழந்துள்ளோம். ஜே.ஆர். காலத்தில் 1978 ஆம் ஆண்டு ஆட்சியில் 3இல் இரண்டு பெரும்பான்மை இருந்தது.

ஆனால் சந்திரிகா அரசில் இருக்கவில்லை. அதன் பின்பு தற்போது 38 ஆண்டுகளுக்குப் பின்பு இந்தப் பெரும் பான்மை உண்டு. இவ்வாறு பெரும்பான்மை உண்டு என்பதற்காக, தரப்படும் ஒரு தீர்வை ஏற்கப்போவதில்லை: இதனையும் மனதில் வைத்து, எமது மக்களின் தேவை - அபிலாஷை - உணர்வு மிக்க தீர்வாக அமையவேண்டும் .

இதற்குப் பொருத்தமான கருத் துக்கள் ஆலோசனைகள் சகல தரப்பிடம் இருந்தும் பெறப்படும். அனைவரும் தமது கருத்தைச் சமர்ப்பிக்க முடியும். இவ்வாறு வரும் கருத்து மூலம் தயாரிக்கப்படும் தீர்வு மக்கள் முன்வைக்கப்பட்டு, ஆலோசனை பெறப்படும். அதன் பின்பு ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக அரசியல் தீர்வு அமைய பாடுபடுவோம் - என்றார். (த-வ-101)

## கோப்பாயில் வீடு புகுந்து கும்பலொன்று அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 16
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகில் உள்ள கிழுவான் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு ஒன்று கடந்த புதன்கிழமை இனந்தெரியாத கும்பலால் தாக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், இரண்டு மோட்டார் சைக்கிள்களில் கூரிய ஆயுதங்களுடன் வந்த நான்கு பேர் கொண்ட கும்பலே தாக்குதல் நடத்தியுள்ளது.

வீட்டின் முன்கதவைக் கோடரியால் கொத்திச் சேதப்படுத்திய துடன், வீட்டு வாயிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் எண்ணெய்த் தாங்கி மற்றும் கண்ணாடி என்பவற்றை கோடரியால் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த ஒருவர் கூக்குரலிட்டுச் சத்தம் எழுப்பியதும் இனந்தெரியாத குழுவினர் தப்பியோடி உள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான வீடு ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் ஒருவருக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (த-ரி5)

## பசிலைச் சந்திக்கின்றனர் இராணுவ அதிகாரிகள்

கொழும்பு, ஏப்.16
இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் சிலர் முன்னாள் அமைச்சரும், முன்னாள் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்சவைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பத்தரமுல்லவில் உள்ள பசில் ராஜபக்ச வின் இல்லத்தில், இன்றைய தினம் இந்தச் சந்திப்பு நடக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. (த-ஐ-5)

**வீடு/ காணி தேவை**

ஆகக்குறைந்தது 2 பரப்புக்காணி கொக்குவில், பிறவுண் றோட், நாவலர் றோட், சுண்டிகுளி ஆகிய பகுதிகளில் உடனடியாக தேவை. வீடாகவோ/காணியாகவோ இருந்தாலும் விரும்பத்தக்கது.
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 இற்குள் தொடர்பு கொள்ளவும்.
077 661 8190, 077 684 8399

தெல்லிப்பழை
**துர்க்காபுரம் மகளிர் இல்லம்**
34 ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
**பரிசளிப்பு விழாவும்**

காலம்:- 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை நேரம்:- பிற்பகல் 3.00மணி
இடம்:- ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், அன்னபூரணி மண்டபம்.

தலைவர்:-
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

பிரதம விருந்தினர்
உயர்திரு. சிவஞானம் ஜெயசங்கர் அவர்கள்
(பணிப்பாளர், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்கிலங்கை)

சிறப்பு விருந்தினர்
வைத்திய நிபுணர் கேதீஸ்வரி சிவசிதம்பரம் அவர்கள்
(கதிரியக்கத்துறை, யாழ். போதனா வைத்தியசாலை)


கௌரவவிருந்தினர்
Dr.சிவநந்தினி உதயகுமார் அவர்கள்
(சிரேஷ்டவிரிவுரையாளர், உடற்கூற்றியல் துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

தலைமையுரை:-
செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

வாழ்த்துரை:- திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள்
(அதிபர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்)

நிர்வாகசபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## சவாரிப் போட்டி ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம், ஏப். 16
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், விளையாட்டுத் திணைக்களம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் இணைந்து நாளை, சரசாலை மாட்டுவண் டிச் சவாரித் திடலில் நடத்த விருந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி மறு அறிவித்தல் வரும் வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

இதே வேளை 19 ஆம் திகதி, மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருந்த விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 18.04.2016
Batch 2 : 20.04.2016
Batch 3 : 23.04.2016
Batch 4 : 25 04 2016

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550

Hotlines
077 036 5728
0777585913, 0777222422, 071429935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடக் கொண்டாட்டத்தில் வாள்வெட்டு; ஐந்து பேர் காயம்

கொழும்பு, ஏப்.16

புதுவருட கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் காரணமாக ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

மாத்தளை மாவட்டம், கலேவெலையில் இருந்து குருநாகல் வரும் பிரதான வீதியில் பம்பாவை கிராமம் அமைந்துள்ளது. இங்கு புதுவருட தினத்தை முன்னிட்டு ஊர் மக்கள் ஒன்றிணைந்து பல்வேறு கொண்டாட்ட நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு நடைபெற்ற புதுவருடக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவமொன்றின் காரணமாக ஐவர் படுகாயமடைந்துள்ளனர். பிரதேசவாசிகளின் துணையுடன் காயமடைந்த வர்கள் தம்புள்ளை மருத்து வமனையில் சேர்க்கப்பட்டு சிசிச்சை அளிக்கப்பட்டுவருவதாகப்பொலிஸார் தெரிவித் துள்ளனர். வாள் வெட்டுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (த-ஐ-5)

# மகிந்த புதிய கட்சி அமைத்தால் சு.க.-ஐ.தே.க. பொதுச்சின்னத்தில்

கொழும்பு, ஏப்.16

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணி தனிக் கட்சியில் போட்டியிடுமாயின், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பொதுச் சின்னத்தில் போட்டியிடக்கூடும் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வாழ்த்துத் தெரிவிக்க அவரது இல்லத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு அவர்கள் மகிந்த ராஜபக்சவிடம் மேலும் காலம் தாழ்த்தாது புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க வேண்டும் எனவும், அதற்கு சரியான தருணம் பிறந்துள்ளது எனவும் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியாக வலியுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், மகிந்த ராஜபக்ச பொது எதிரணி உறுப்பினர்களை உள்ளடக்கி புதிய கட்சியொன்றை உருவாக்கி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்குத் தயாராகும் பட்சத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பொதுச் சின்னத்தில் போட்டியிடக்கூடும் எனத் தெரிவிக் கப்படுகின்றது. (த-ஐ-5)

# பிரிட்டனில் இலங்கையர்களின் பங்களிப்புக்கு கமரூன் பாராட்டு

பிரிட்டனில் இலங்கையர்களின் பங்களிப்பு குறித்து பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் புகழாரம் சூட்டியுள்ளார். பிரிட்டனில் வாழ்ந்து வரும் தமிழ் -சிங்கள இலங்கையர்களின் அளப்பரிய சேவை பாராட்டுக்குரியது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்களாகவும், தொழில் தருநர்களாகவும், பாடசாலை ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும் இன்னும் பல தொழில் துறைகளிலும், சேவைகளிலும் இலங்கைச் சமூகத்தினர் பிரிட்டனில் ஆற்றி வரும் சேவை போற்றத்தக்கது. இலங்கை யில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முழு அளவில் ஒத்து ழைப்பு வழங்கப்படும் என்று பிரதமர் கமரூன் தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

நெல்லியடியில் வசிக்கும் வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கு 35- 50 வயதுக்குட்பட்ட பெண் பராமரிப்பாளர் (முழுநேரம்) தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**021 226 2417**

**யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி பழைய மாணவர் சங்கம் பொதுக் கூட்ட அறிவித்தல்**

**தலைவர்** : திருமதி நாச்சியார் செல்வநாயகம் M.A

**காலம்**: 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்**: காலை 9.00 மணி

**இடம்** : சிவபாதசுந்தரம் மாநாட்டு மண்டபம்

பிரேரணைகள் ஏதும் இருப்பின் 23.04.2016 சனிக்கிழமைக்கு முன்பாக செயலாளரிற்கு கிடைக்கப் பெறுமாறு அனுப்பி வைக்கவும்.

அங்கத்தவராக சேர விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்பாக செயலாளரிடம் விண்ணப்ப படிவத்தை பெற்று மீளச்சமர்ப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**இராசநாயகம் ஸ்ரீரங்கன்- செயலாளர்**

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்**

**வட்டாரம்: 07**
**ஆதன இலக்கம்: 110A (புதிய இலக்கம்)**
**சங்கரப்பிள்ளை வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு: J/ 139 மானிப்பாய்.**

வட்டாரம் 07. சங்கரப்பிள்ளை வீதி. ஆதனஇலக்கம் 110A (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக் கோடடை இறை "விளாங்குளி" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 6.56 கொண்ட) இவ்வாதனமானது சுதுமலை தெற்கு. மானிப்பாயைச் சேர்ந்த மனோரஞ்சன் ஸ்ரீபத்மநாதன் இவர்களால் அறுதி உறுதி மூலம் லோட்டன் வீதி. மானிப்பாய்யைச் சேர்ந்த குமாரசாமி குணரத்தினம் பெண் மனோன்மணி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் அவர்களால் எழுதப்பட்ட 6099 ஆம் இலக்க 2004 06.04 ஆம் திகதிய அறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.மு.இராசையா அவர்களால் வரையப்பட்ட 1440 ஆம் இலக்க 2013.10.01 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "விளாங்குளி" நிலப்பரப்பு 03 குளி 06.56 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள் களுக்குள் எழுத்து மூலம் அறியத்தரு மாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குமாரசாமி குணரத்தினம் பெண் மனோன்மணி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(ஜே.372) (13.18.17)

# இலங்கையிலேயே அதிக விடுமுறைகள்

கொழும்பு, ஏப்.16

ஆசிய நாடுகளில், இலங் கையிலேயே வருடம் ஒன் றுக்கு அதிக விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. வருடம் ஒன்றுக்கு வழங்கப்படும் 25 பொது விடுமுறைகள் காரண மாகப் பொருளாதாரம் பாதிக் கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள் ளதாகப் பொருளாதார நிபு ணர்கள் கருத்து வெளியிட் டுள்ளனர்.

இலங்கையில் கடந்த காலத் தில் இடம்பெற்ற போரினால் பல பில்லியன் டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் நாட்டின் பொருளா தாரம் பாரிய பாதிப்பை எதிர் நோக்கியுள்ளதாகவும் அவர் கள் தெரிவித்துள்ளனர்.

இதனை நிவர்த்திப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் நாட்டில் வழங்கப்படும் பொது விடு முறைகள் பெரும் தடையாக அமைவதாகப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

ஆசிய நாடுகளில், இலங்கை யிலேயே வருடம் ஒன்றுக்கு அதிக விடுமுறைகள் வழங் கப்படுகின்றன. சிங்கப்பூரில் 13 நாள்களும், ஜப்பானில் 17 நாள்களும், இந்தோனேசி யாவில் 19 நாள்களும், தாய் லாந்தில் 20 நாள்களும் பொது விடுமுறைகள் வழங் கப்படுகின்றன.

அத்துடன், அமெரிக்காவில் 9 நாள்களும் ஆஸ்திரேலி யாவில் 10 நாள்களும் பொது விடுமுறைகளாக உள்ளன.

எனினும், இலங் கையில் பல்லின இணங்களை இலக்கு வைத்து இந்த விடு முறை கள் ஒதுக் கப்படுகின்றன. பௌத் தர்கள் புனித நாளா கக் கருதும் பௌர் ணமி தினங்களும் பொது விடுமுறை களாக வருடத்தில் 12 நாள்கள் வழங் கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

45 வயதுக்கு மேற்பட்டவர்கள் (கிறிஸ்தவர்கள் விரும்பத்தக்கது).
077 511 5819, 077 1345548

**புறொயிலர் தேவை**

உங்கள் இடத்தில் வந்து உடன் காசுக்கு கொள்முதல் செய்யப்படும். (J 360) (14,17,18)

**தொடர்பு: 077 618 0675**

**வீடு வாடகைக்குத் தேவை**

K.K.S வீதி கொக்குவில் , தாவடி அண்மித்த பகுதிகளில் தேவை.

**077 929 5674**

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசபை மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்**

**வட்டாரம்: 04**
**ஆதன இலக்கம்: 71 (புதிய இலக்கம்)**
**யாழ். மானிப்பாய் வீதி, (பந்தியடி ஒழுங்கை)**
**கிராமசேவையாளர் பிரிவு: J/ 132 ஆனைக்கோட்டை**

வட்டாரம் 04 யாழ்- மானிப்பாய் வீதி (பந்தியடி ஒழுங்கை) ஆதன இலக்கம் 71 (புதிய இலக்கம்)இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை "சுடுகாட்டுப் பிட்டியும் அணிஞ்சில்காடும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 8.26 கொண்ட) இவ்வாதனமானது யாழ்ப்பாணம். ஆனைக் கோட்டையைச் சேர்ந்த குருசுமுத்து மிக்கேலும் பெண் ஞானம்மா ஆகிய இவர்களால் அதே இடத்தை சேர்ந்த பாவிலுமடுத்தீன் அருளானந்தம் பெண் திரேசம்மா என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி.இராசேந்திரன் அவர்களால் எழுதப்பட்ட 9090 ஆம் இலக்க 1970.12.07 ஆம் திகதிய சீதன உறுதிப்படி தமக்கு சொந்தம் என தெரியப் படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.எம்.செல்வராஜா அவர்களால் வரையப்பட்ட MS/ 35/2016 இலக்க 2016.03.16 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "சுடு காட்டுப்பிட்டியும் அணிஞ்சில் காடும்" நிலப்பரப்பு 1 குளி 8.26 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங் களுடன் 14 நாள் களுக்குள் எழுத்து மூலம் அறியத்தரு மாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பாவிலுமடுத்தீன் அருளானந்தம் பெண் திரேசம்மா என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு, பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(ஜே.371) (13.18)

## போதையில் வாகனம் செலுத்திய 818 பேர் கடந்த 5 நாள்களில் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.16

கடந்த 5 நாள்களில் மட்டும் குடிபோதையில் வாகனம் செலுத்திய 818 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குடிபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கண்காணிப்பதற்காக - கைது செய்வதற்காகப் பொலிஸார் விசேட நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் கடந்த 10 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் புதுவருடப் பிறப்பு வரையிலான காலப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 818 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் புதுவருடப்பிறப்புடனான 24 மணி நேரத்தில் மாத்திரம் 130 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (த-ஐ-5)

## புத்தாண்டு கால விபத்துகளால் 682 பேர் வைத்தியசாலைகளில்

கொழும்பு, ஏப்.16

சித்திரைப் புத்தாண்டுப் பண்டிகைக் காலங்களில் ஏற்பட்ட விபத்துக்கள் காரணமாக 682 நபர்கள் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தை விட இந்த வருடம் 2 சதவீதத்தால் விபத்துக்கள் குறைவடைந்துள்ளதெனக் கொழும்பு வைத்தியசாலையின் பிரதான தாதியர் பயிற்றுவிப்பாளரான புஸ்பா ரம்யா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களிலும் மிகவும் கவனமாகப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-ஐ-5)

**வீடு வாடகைக்கு**

தளபாடங்களுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு விடப்படும். நல்லூர் யாழ் பல்கலைக்கழகம். நொதேர்ன் வைத்தியசாலைக்கு மத்தியில் மணற்தறை ஒழுங்கையில்

**077 792 3721, 076 664 5638**

**IELTS UK KU Education**
MBA(London) Qualified Trainer Call: 07773028
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (A,G&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1
K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம். கிளிநொச்சி. வவுனியா போன்ற இடங்களில் கட்டட நிர்மாண வேலைகள் செய்வதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- ★ மேசன்
- ★ தச்சு வேலை செய்பவர்
- ★ வெல்டிங் வேலை செய்பவர்
- ★ அலுமினியம் பொருத்துநர்
- ★ மின் இணைப்பாளர்
- ★ கூலியாள்கள்.

கிழமை/ மாத அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 021 221 3663, 077 712 0945

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகள் அபிவிருத்தி செய்யப்படுவது அவசியம்

## வங்கி முகாமையாளர் கருத்து

யாழ்ப்பாணம், ஏப்.16

மனித வாழ்க்கையில் மிகவும் உன்னதமாக விளங்கும் பருவம் முன்பள்ளிப் பருவமாகும். இன்று எமது பிரதேசத்தில் முன்பள்ளிகள் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளன என்று யாழ். பீப்பிள்ஸ் லீசிங் வங்கி முகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா தெரிவித்தார்.

பெற்றோர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு அறிவுறுத்தல் நிகழ்வு அண்மையில் திருநெல்வேலி முன்பள்ளியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்பதற்கிணங்க இன்று பிள்ளைகளாக இருப்பவர்களின் ஆரோக்கியத்திலும், கல்வியிலும் அக்கறை செலுத்த வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

ஆரோக்கியமான வருங்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடியதான சமுதாயமொன்றை உருவாக்குவதற்கு நாம் முன்பள்ளிக் கல்வியில் அக்கறை செலுத்துதல் வேண்டும்.

இந்த முன்பள்ளியில் மக்கள் வங்கிபீப்பிள்ஸ் லீசிங் நிறுவனம் ஒரு நூலகத்தைத் திறக்க அனுசரணை வழங்கியுள்ளது.

பெற்றோர்களும் முன்பள்ளிக் கல்வி தொடர்பான நூல்களை வாசித்தல் மிக அவசியமாகும். இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு இந்த முன்பள்ளியில் நூலகக் கலாசாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

பிறப்பிலிருந்தே வளரும் போது சிறார்கள் கற்க ஆரம்பித்து விடுகின்றனர். சிறார்களின் மூளையானது கர்ப்பப்பையிலேயே விருத்தியடையத் தொடங்குவதுடன், தாயின் ஆரோக்கிய நிலையும் வெளிச்சூழலும் முக்கிய காரணியாகவுள்ளன.

கர்ப்ப காலத்திலேயே பிள்ளைப் பராமரிப்பு ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. முன்பள்ளிப்பிள்ளை கற்றலுக்கு முன்பள்ளியில் பூரணமாக விருத்தியடைந்த பின்னரே முறையான பாடசாலைக் கல்வி ஆரம்பிக்கப்படவேண்டும்.

இதில் பெற்றோர்களுடைய பங்கு மிக முக்கியமானது. பிள்ளை ஒன்றின் எதிர்கால விருத்தியில் முதல் ஐந்து வருடங்களும் தீர்க்கமான காலமாகும். இக்காலத்தில் அந்தப் பிள்ளையின் ஆளுமை விருத்திக்குக் கற்றல் அனுபவங்கள் அடிப்படையாகும்.

எனவே எமது அனைத்து வளங்களையும் முன்பள்ளிக் கல்வி அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும். கல்வித் துறையினரும் ஏனைய சகல துறையினரும் இந்தத் துறையில் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டும். இதற்கமையவே எமது நிறுவனம் தற்போது முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தியில் பல உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது எனக் கூறினார்

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரி கே.கௌதமனால் பெற்றோர்களுடைய கடமைகள் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகள், இன்று சிறார்கள் எவ்வாறு துஷ்பிரயோகப் படுத்தப்படுகின்றார்கள், இதனை எவ்வாறு தடுப்பது என்ற வகையில் செயலமர்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (த-ஐ-29-ரி)

# குடிதண்ணீரைக் குளிப்பதற்கு பயன்படுத்துகின்றனர் மீனவர்

யாழ்ப்பாணம்,ஏப்.16

பயணிகள் வசதி கருதி கண்ணகையம்மன் இறங்கு துறையில் தண்ணீர்த் தாங்கி வைத்து வழங்கப்படும் குடிதண்ணீரைத் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள், குளிப்பதற்கும் முகம் கழுவுவதற்கும் பயன்படுத்துவதால் பயணிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே மீனவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்மென்று பயணிகள் கோரியுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் எழுவைதீவு, அனலைதீவு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதி கருதி கண்ணகையம்மன் இறங்கு துறையில் பிரதேச சபையினால் தண்ணீர் தாங்கி வைத்துக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அயல் பிரதேசங்களிலிருந்து ஊர்காவற்றுறைப் பிரதேசத்துக்கு வந்து தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பயணிகளுக்காக வைக்கப்படுகின்ற குடிதண்ணீரைக் குளிப்பதற்கும், முகம் கழுவுவதற்கும் பயன்படுத்தி வருகின்றார்கள். இதனால் குடிதண்ணீர் முடிவடைவதனால் பயணிகள் பாதிக்கப்படுகின்றனர்.

அயல்பிரதேச மீனவர்களினால் ஏற்படும் இந்தப் பிரச்சினை குறித்து ஊர்காவற்றுறை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பாதிக்கப்பட்டுள்ள மக்கள், மீனவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியுள்ளனர். (த-ஐ-115)

# விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி,ஏப்.16

ஒழுங்கையிலிருந்து வீதிக்குள் நுழைந்த மோட்டார் சைக்கிளை வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு மோட்டார் சைக்கிள்களிலும் பயணித்த இளம்பெண் உட்பட மூவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மீசாலையில் இடம்பெற்றது.

மீசாலை மேற்கிலிருந்து மாமன் முறையான ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு ஒழுங்கை வழியாக வந்த இளம்பெண் திடீரென பிரதான வீதிக்குள் நுழைந்தபோது, வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவரும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-ஐ-9)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
22 . 04 . 1935



ஆண்டவன் அடியில்
17 . 03 . 2016

திருமதி
**இராசம்மா கயிலாயபிள்ளை**

அன்பாக வரவேற்று
அடுக்கடுக்காய்ப் பல கதை பேசி
எங்களை இவ் உலகில் - வாழ
வழி செய்த எமது அன்பு அம்மா
நாள்கள் 31 அல்ல ஆண்டுகள் - பல
சென்றாலும் ஆறாது எம் துயரம்....
மாறாது உம் நினைவு ......

கடந்த 17.03.2016 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (16.04.2016) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச் றோட், மீசாலை மேற்கு, மீசாலை.
T.P: 077 5244093

குடும்பத்தினர்.

(C/22343) (10.17)

## மரண அறிவித்தல்

**கதிர்காமு வயிரப்பிள்ளை**

தோற்றம்
12 . 01 . 1932



மறைவு
09 . 04 . 2016

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கு வாணி தொலைத்தொடர்பு நிலைய முன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு வயிரப்பிள்ளை 09.04.2016 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற வடிவாம்பிகையின் அன்புக் கணவரும் மஞ்சுளா(பிரான்ஸ்), தேவிகா (பிரான்ஸ்), மேனகா(ஜேர்மனி), நவீனா ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தன் (பிரான்ஸ்), கோணேஸ்வரன்(பிரான்ஸ்), அம்பிகைபாகன்(ஜேர்மனி), சிறீகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரான்ஸில் வசிக்கும் கிறிஸ்தியான், லூர்தன், விக்ரோறியா, அலெக்ஸ்சந்திரா ஜேர்மனியில் வசிக்கும் அபிக்குணா - அபிசாலினி, அபிசர்மிலி, இலங்கையில் வசிக்கும் மதுஷா, கபிஸ்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அன்னபவனம் "
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

004921668550899/ 004921661241870/770260211


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **மயில்வாகனம்**

**சிவசுப்பிரமணியம்** (சிவம்)

மலர்வு 11.10.1938 — சிவப்பேறு 17.03.2016

கடந்த 17.03.2016 இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் அமரர் மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.04.2016) சனிக்கிழமை முற்பகல் 11.20 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள்**

சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.
077 668 2032, 077 6847592

# நெஞ்சகலா நினைவினிலே....

**37 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் சிவகுரு பாலசிங்கம்**

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், முன்னாள் உபதலைவர் - சாவகச்சேரி நகரசபை)

தோற்றம் 10.10.1910 — மறைவு 04.12.1979

**10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் அன்னபூரணம் பாலசிங்கம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

தோற்றம் 25.09.1918 — மறைவு 07.05.2006

திதி: வளர்பிறை தசமி (16.04.2016)

ஆயிரமாயிரம் உறவுகள் வந்தாலென்ன அவையெல்லாம்
அம்மா அப்பா என்ற உறவுக்கு ஈடாகுமா?
இதயத்தில் இறையாகி, உள்ளத்தில் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டியாக தெய்வத்துள் தெய்வமாகிய - எங்கள்
அன்புத் தெய்வங்களே!
உங்கள் ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.

'பாலகிரி'
கல்லடிலேன், சாவகச்சேரி. (ஜே.335) (13.18)

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**ஐ.பாலசுப்பிரமணியம் (மணி ஐயா)**



வியாபாரிமூலையைப் பிறப்பிடமாக கொண்டவரும் கந்தரோடையை வசிப்பிடமாக கொண்டவரும் ஆகிய ஐயாத்துரை குருக்கள் பாலசுப்பிரமணியம் (மணி ஐயா) நேற்று (15.04.2016) வெள்ளிக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை குருக்கள்-சொர்ணம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்க ஐயர்- இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்க குருக்கள் (முன்னாள் கோட்டுவாசல் அம்மன் கோயில் பிரதம குரு, பருத்தித்துறை), சோமசுந்தர ஐயர் (முன்னாள் சக்தி நூல் நிலைய உரிமையாளர், மட்டக்களப்பு), சண்முகரத்தின குருக்கள் (வியாபாரி மூலை) மற்றும் கந்ததாச சர்மா (இந்தியா), தியாகராஜ சர்மா (சம்பந்தர்- கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமேஸ்வர சர்மாவின் (கந்தரோடை அருளானந்த பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தா) அன்பு மைத்துனரும், மனோகரன் (லண்டன்), மனோகரி (நியூசிலாந்து), மனோரஞ்சனி, மனோரஞ்சன் (திருகோணமலை ரஞ்சன் ஐயா) மனோகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2016) சனிக்கிழமை காலை அருளானந்த பிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் முற் பகல் 10 மணியளவில் சங்கம்புலவு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அருளானந்த பிள்ளையார் கோயில் வீதி,**
**கந்தரோடை, சுன்னாகம்.**
**0777567404** (C/22392) (10,17)

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர், சகோதரர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி



குரும்பசிட்டி
திருமதி
**ஆனந்தலட்சுமி அம்மா வேலாயுதக்குருக்கள்**

14.04.2016 அன்றுஇறையடி சேர்ந்த அம்மா அவர்களின் பிரிவுத் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின் றோம்.

**பொ. வைத்திலிங்கம் குடும்பத்தினர். குரும்பசிட்டி.**

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தசாமி மரியவிதுர்சன்**

மண்ணில் 05.06.1999 — விண்ணில் 16.04.2009

நான் என் தகப்பனுக்கு பிரியமான
குமாரனும் என் தாய்கு மிகவும் அருமையான
ஒரே பிள்ளையுமானவன்
ஆனந்தமாய் துள்ளித்திரியும் காலத்தில்
ஆதாரமில்லாமல் தவிக்க விட்டாய்
ஏழு வருடங்களாக நீ இல்லாமலே
வாழ்ந்துவிட்டோம்

கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(V.C.அருகில்) (J.373) (13.17.18)

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
**கந்தசாமி -குடும்பத்தினர்.**

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தங்கராசா ரமணன்**

ஆண்டுகள் ஒன்பது சென்றிடினும்
மறைந்திடுமோ உன் நினைவுகள்
பரிதவிக்குதையா எம் நெஞ்சம்
உன் புன் சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்

**குடும்பத்தினர்.**

தோற்றம் 11.03.1972 — மறைவு 26.04.2007

**தங்க நிலா ,வதிரி**

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**சுரேந்திரநாதன் வரப்பிரகாசம்**

தோற்றம் 14.09.1952 — மறைவு 20.03.2016

கடந்த 20.03.2016 சிவபதமடைந்த அமரர் சு.வரப்பிரகாசம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 17.04.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு சாட்டி புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அதனைத்தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் 19.04.2016 செவ்வாய்க்கிழமை நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசியூடாக அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், மலர் வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் யாழ். போதனா வைத்தியசாலை 10 ஆம் வாட் வைத்திய அதிகாரிகள், தாதிகள், சிற்றூழியர்கள், வெளிநோயாளர் பிரிவு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**குறிப்பு:** இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை வடக்கு,
வேலணை.

**குடும்பத்தினர்.**

## 10 கிராம் கஞ்சாவுடன் இளைஞன் கைது

அரியாலைப் பகுதியில் 10கிராம் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாண குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதானவர் கிளிநொச்சி, திருவையாறுப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் எனப் பொலிஸார் கூறினர். பொம்மைவெளிப் பகுதியில் இவரது தாயாரின்குடும்பம்உள்ளது. இவரது சகோதரன்ஒருவருக்கேஇவர் மேற்படி கஞ்சாவைக் கொண்டுவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவரது குடும்பம் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுக் கடந்த காலத்தில் நீதிமன்றங்களினால் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (த-106-107)

## நூல் அறிமுக விழா

அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மு.சி.கந்தையா எழுதிய 'சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்' நூல் அறிமுக விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றிய தலைவர்செல்விதசஜிலா தலைமையில்நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் அறிமுகஉரையை அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கமும் நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கமும் ஆற்றவுள்ளனர். நூல் அறிமுகத்தைத் தொடர்ந்து முதற்பிரதியைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் பெற்றுக் கொள்வார்.

கருத்துரைகளை மலையக சமூக ஆய்வு அபிவிருத்தி மையத்தைச் சேர்ந்த வே. இந்திரச்செல்வன்மற்றும்ஜெயக்குமார்ஆகியோரும் சிறப்புரையை 'இன்றைய மலையகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்' என்ற தொனிப்பொருளில் அருட்தந்தை மா. சக்தி வேலும் ஆற்றுவர். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ரயில் கடவை காவலர்கள் வேதனத்தை உயர்த்தக் கோரிக்கை

## 7 ஆயிரத்து 500 ரூபா மட்டுமே இப்போது சம்பளம்

யாழ்ப்பாணம், ஏப்.16
யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றும் ரயில் கடவைக் காவலர்கள் தமது வேதனத்தை அதிகரித்து வழங்குமாறு ரயில்வே பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வட பகுதிக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரைக்கும் பொலிஸாரால் 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ரயில்வே கடவைக் காவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதிக்குக் கடவைக் காவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

> "தற்போது உயர்ந்துள்ள விலை வாசியில் ஜீவனோபாயத்தை நடத்தத் தாம் பெரிதும் சிரமப்படுகின்றோம் என் றும், தமது மாதாந்த வேதனத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்."

இவர்களுக்கு இதுவரை 7 ஆயிரத்து 500 ரூபா மட்டும் வேதனமாக வழங்கப்படு கின்றது. இந்தக் கொடுப்பனவும் ஒழுங்காக வழங்கப்படு வதில்லை என்று கடவைக் காவலர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது உயர்ந்துள்ள விலை வாசியில் ஜீவனோபாயத்தை நடத்தத் தாம் பெரிதும் சிரமப்படுகின்றோம் என்றும், தமது மாதாந்த வேதனத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். இல்லையெனில் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்றும் அவர் கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் பல கடவைகளில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை ஒலி எழுப்பும் கருவி மற்றும் சமிக்ஞை விளக்குகள் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். (து-ற-ரி5-9)

### சரஸ்வதி சிலை திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஏப் 16
கைதடி வடக்கு நவபுரம் எருதிடல் அ.த.க. பாடசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கைதடி வடக்கைச் சேர்ந்த முருகன் - குழந்தையம்மா தம்பதியரின் நினைவாக அவர்களது உறவினர்களால் நிர் மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலையை வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நாடா வெட்டி திறந்து வைத்தார். (ற-ஐ-9)

### புத்தாண்டை முன்னிட்டு முதியோருக்கு உடைகள்

யாழ்ப்பாணம், ஏப்.15
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கான உடுபுடைவைகளை வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாணசமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் கலந்து கொண்டு முதியோர்களுக்கு புத்தாடைகளை வழங்கினார். சேலை, கவுண், சாரம், வேட்டி, சேட் என்பன முதியோர்களுக்கு வழங்கப்பட்டன. (து-ற-17)

## பல இலட்சம் ரூபா பெறுமதியான உருளை பயன்பாடின்றி மரநிழலில்

### பயன்படுத்த நடவடிக்கை எடுக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.16
பொருத்தமான சாரதி இல்லாமையாலும், வாடகைக்கு எடுக்க எவரும் முன்வராமையாலும் பிரதேச சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கக்கூடிய பல லட்சம் ரூபா பெறுமதியான வீதிகளுக்குப் பயன்படுத்தப்படும் உருளை பல மாதங்களாகப் பாவனையின்றி மரநிழலில் விடப்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள மக்கள் உருளையைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு செயலாளரைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் வருமானத்தைக் கருத்திற் கொண்டு கடந்த சில வருடங்களுக்கு முன் அரசினால் வீதிக்குப் பயன்படுத்தப்படும் பெரிய உருளை அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

சில மாதங்கள் பிரதேச சபையினால்பயன்படுத்தப்பட்டு வந்த இந்த உருளை பழுதடைந்த நிலையில் பல மாதங்களாகப் பயன்படுத்தப்படாமல் பிரதேச வளாகத்தில் விடப்பட்டிருந்தது.

நாளாந்தம் பல லட்சம் ரூபா வருமானத்தைப் பிரதேச சபைக்கு ஈட்டிக் கொடுக்கும் உருளை திருத்தப்படாமல் முடங்கிக் கிடப்பது குறித்து மாதாந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டிய முன்னாள் தவிசாளர் ஜெபநேசன் இதை விரைவாகத் திருத்தியமைக்குமாறு சபையைக் கோரியிருந்தார்.

இவரின் கோரிக்கையைத் தொடர்ந்து பல லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட உருளை பொருத்தமான சாரதி இல்லாமையாலும், வீதி வேலைகளுக்கு வாடகைக்கு எடுக்க எவரும் முன்வராமையாலும் பாவனையின்றி மரநிழலின் கீழ் ஒதுக்குப் புறமாக விடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதேச சபையின் கீழுள்ள பல வீதிகள் தற்பொழுது பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் உருளையை வாடகைக்கு அமர்த்த ஒப்பந்தகாரர் எவரும் முன்வரவில்லை என்பது குறிப்பித்தக்கது. (து-ஐ-115)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

சாவகச்சேரி, ஏப்.16
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு விடுதிகளுக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்லும் இரண்டு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. புலம்பெயர் நாட்டிலிருந்து வந்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் நேற்று சக்கர நாற்காலிகளை வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

அண்மையில் புலம் பெயர் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த மீசாலையைச் சேர்ந்த குடும்பத்தினர் வைத்தியசாலை சிறுவர் விடுதிக்கு பல்வேறு பொருள்களை வழங்கியிருந்தனர். (து-ற-ஐ-9)

## சாவகச்சேரி நகர சபைக்கென ஒரு தொகுதி குப்பைத் தொட்டி

### வழங்கியது வணிகர் மன்றம்

சாவகச்சேரி, ஏப்.16
சாவகச்சேரி நகரசபையின் தூய்மையான நகரத் திட்டத்தை ஊக்குவிக்க சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் ஒரு தொகுதி குப்பைத் தொட்டிகளை சாவகச்சேரி நகர சபைக்கு வழங்கியுள்ளனர்.

மன்றத் தலைவர் ந.சிவபாலன் தலைமையில் மன்ற உறுப்பினர்கள் நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசனிடம் குப்பைத் தொட்டிகளை கையளித்துள்ளனர்.

இவை நகர்ப்பகுதியில் உள்ள வணிக நிலையங்களை அண்டிய பகுதிகளில் வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நகரசபையினால் உக்கும் பொருள்கள், உக்காத பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள் போன்றவை போடுவதற்காக பிளாஸ்ரிக் தொட்டிகள் நகரின் பல இடங்களில் வைக்கப்பட் டுள்ளன.

முன்னர்வணிகநிலையங்களை அண்டிய வீதியோரங்களில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டிகள் பல சேதமடைந்து காணப்படுவதால் அந்த இடங்களில் வணிகர் மன்றத்தால் வழங்கப்பட்ட தகரத்திலான தொட்டிகள் வைக்கப்படவுள்ளன எனவும் நகரசபையினர் தெரிவித்தனர். (து-ற-ஐ-9)

## சித்திரைப் பௌர்ணமி, ஆடி அமாவாசை தினங்களில் ஊழியர்களுக்கு விடுமுறை

### சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் தீர்மானம்

சாவகச்சேரி,ஏப்.16
சித்திரைப் பௌர்ணமி மற்றும் ஆடி அமாவாசை தினங்களில் அனைத்து வணிக நிலையங்களையும் மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குவதென சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற நிர்வாகத்தினரால் புத்தாண்டு தினத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் ஞாயிறு விடுமுறை தினங்களில் அத்தியாவசிய வணிக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைக்கவேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சித்திரைப் பௌர்ணமி மற்றும் ஆடி அமாவாசை தினங்களில் பகல் 12.00 மணி வரை வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வணிக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் விடுத்த வேண் டுகோளையடுத்து அனைத்து வணிகர்களும் ஊழியர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதால் இந்த வருடம் தொடக்கம் சித்திரைப் பௌர்ணமி மற்றும் ஆடி அமாவாசை தினங்களில் வணிக நிலையங்களை மூடுவதென வணிகர் மன்ற நிர்வாகத்தினர் ஏகோபித்த குரலில் தீர்மானித்துள்ளனர் என மன்றத் தலைவர் ந.சிவபாலன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வணிக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் பொருட்டு அன்றைய தினம் வணிக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார். (து-ஐ-9)

## புத்தாண்டு வாணவெடி தென்னையில் சிக்கித் தீ

யாழ்ப்பாணம்,ஏப்.16
புது வருடக் கொண்டாட்டத்துக்கு நேற்று முன்தினம் இரவு வேளை கொளுத்திய வாணவெடி தென்னையில் சிக்கித் தீப்பற்றியது. இதனையடுத்து மாநகரசபை தீயணைப்பு வாகனம் மூலம் தீ அணைக்கப்பட்டது.

கொக்குவில் பொற்பதி வீதியில் புதுவருடக் கொண்டாட்டத்துக்காக கொளுத்தப்பட்ட வாண வெடி ஒன்று அருகில் நின்ற தென்னையில் சிக்கித் தீப் பற்றியது.

தற்போது நிலவும் அதிக வெப்ப நிலை காரணமாகத் தென்னையில் தீ விரைவாகப் பரவியது.

இதனால் உடனடியாக மாநகரசபை தீயணைப்புச் சேவைக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து மாநகர தீயணைப்பு வாகனம் மூலம் தீ முழுமையாக அணைக்கப்பட்டது. (து-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுமா ஓமந்தையில்?

## வடக்கு முதலமைச்சர் சம்மதித்தபோதும் அமைச்சின் அறிவித்தல் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.16

பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு கிராமிய பொருளாதார அமைச்சர் சம்மதித்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளபோதும், அதற்குரிய எந்தவொரு அறிவித்தலும் கிராமிய பொருளாதார அமைச்சிலிருந்து வவுனியா மாவட்டச் செயலகத்துக்குக் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

“தாண்டிக்குளத் திலுள்ள விவசாய விதை உற்பத்தி நிலையத்துக்குச் சொந்தமான காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்குவதற்கு வவுனியா மாவட்டத்தில் அரச அதிபர் தலைமையில், வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் முடிவு எட்டப்பட்டிருந்தது.”

வரவு – செலவுத் திட்டத்தில், வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்குரிய காணியைத் தெரிவு செய்வதில் தற்போது இழுபறி நிலைமை இருந்து வருகின்றது.

வவுனியா நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தினுள் இதற்குரிய காணியை அடையாளப்படுத்தி வழங்குமாறு கிராமிய பொருளாதார அமைச்சு கோரியிருந்தது. தாண்டிக்குளத்திலுள்ள விவசாய விதை உற்பத்தி நிலையத்துக்குச் சொந்தமான காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்குவதற்கு வவுனியா மாவட்டத்தில் அரச அதிபர் தலைமையில், வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் முடிவு எட்டப்பட்டிருந்தது.

ஆனாலும் இந்தக் காணியை வழங்குவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சம்மதிக்கவில்லை. இதனால் இந்தத் திட்டம் வடக்கு மாகாணத்தை விடுத்து வேறு மாகாணத்துக்குச் செல்லும் அபாயநிலை காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர், முதலமைச்சரைக் கடந்த 7 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினர். இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசனுடன் பேசியதாகவும், நகரிலிருந்து 2 கிலோ மீற்றரினுள் தான் காணி வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி, நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஓமந்தையில் அமைப்பதற்கு சம்மதித்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு, இது தொடர்பில் எந்தக் கடிதமும் – அறிவுறுத்தலும் கிராமிய பொருளாதார அமைச்சினால் வழங்கப்படவில்லை. மாறாக, இன்னும் ஒரு வார கால அவகாசம் வழங்கி, அதற்குள் தாண்டிக்குளம் காணிக்குரிய அனுமதியைப் பெற்றுத் தருமாறும் இல்லாவிடின், வேறு மாகாணத்துக்கு இந்தத் திட்டம் மாற்றப்படும் என்ற அறிவுறுத்தலே, மாவட்டச் செயலகத்துக்கு கிராமிய பொருளாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்ட விவசாய அமைப்புக்கள் தாண்டிக்குளம் காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்குமாறு கோரி முதலமைச்சரிடம் மனுக் கையளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5-101)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் கைது

முல்லைத்தீவு, ஏப்.16

நாயாறு கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் ஒளி பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட இரு மீனவர்களை தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் வழக்கு விசாரணையை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

நாயாற்றுக் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடிக்கின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற் றொழில் நீரியல் வளத்துறையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கடற்படையினரின் துணையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு மணி யளவில் உதவிப் பணிப்பாளர் தலைமையில் சென்ற அதிகாரிகள் அங்கு சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரு மீனவர்களைக் கைது செய்தனர்.

சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான வள்ளம் உட்பட மீன்பிடி உபகரணங்களைக்கைப்பற்றிய அதிகாரிகள் இரு மீனவர்களையும் கைது செய்து முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

அதன்போது அவர்களை சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த பதில் நீதிவான், அதிகாரிகளால் கைப்பற் றப்பட்ட வள்ளங்களையும், மீன்பிடி உபகரணங்களையும் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட் டார். (த-ற-115)



கடும்வெப்பத்தால் தண்ணீர் தாகத்தைப் போக்க வவுனியா நகரில் சாயி சேவா நிலையத்தினர் தண்ணீர்ப் பந்தல் அமைத்து மோர் விநியோகித்து வருகின்றனர். இதனைப் பலர் தினமும் அருந்திவருவதைக் காண முடிகிறது. (த-ஐ-402)

## பொதுக் கூட்டம்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது என்று பாடசாலையின் அதிபர் செ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார். அந்தக் கூட்டத்தில் கல்லூரியின் அனைத்து பழைய மாணவ, மாணவிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். கூட்டம் முற் பகல் 10 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் இடம்பெறவுள்ளது – என்று அவர் குறிப்பிட்டார். (த-ற)

## ஓமந்தையில் சிறுத்தை வாகனம் மோதிச் சாவு

வவுனியா,ஏப்.16

வவுனியா, ஓமந்தை ஏ-9 வீதியில் சிறுத்தைக் குட்டியொன்றை வேகமாக வந்த வாகனமொன்று மோதியதில் அவ்விடத்திலேயே அது இறந்துள்ளது.

நேற்று காலை ஓமந்தை மேற்குப் பகுதியில் காட்டுக்குள் அது இருந்து கிழக்குப் பகுதிக் காட்டுக்குச் செல்ல ஏ-9 வீதியைக் கடக்க முயன்றுள்ளது சிறுத்தைக்குட்டி . இதன்போது யாழ் நோக்கி வேகமாக வந்த வாகனமொன்று அதனை மோதியது.

இதனையடுத்து அவ்விடத்துக்கு வந்த தாய்ச் சிறுத்தை சிறிது நேரம் கண்ணீர் வடித்துச் சென்றதாகவும், சிறுத்தைகள் காட்டை விட்டு வெளியேறி ஏ-9 வீதிக்கு வந்தமையைக் கண்ட பயணிகள் அச்சமடைந்தனர் எனவும் கூறப்பட்டது.

இவ்வாறு சிறுத்தைகள், யானைகள் காட்டைவிட்டு ஊர்மனைக்குள் புகுவது குறித்து வவுனியா மாவட்ட வன வளத் திணைக்களத்தினர் அக்கறையுடன் செயற்பட்டுப் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (த-ஐ-402)

## தேவிபுரத்தில் வியாழனன்று கத்திமுனையில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப்.16

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் கிராமத்தில் கத்தி முனையில் துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்று 48 மணி நேரம் கடந்துள்ள நிலையிலும் கொள்ளையர்கள் எவரும் நேற்று மாலை வரை கைது செய்யப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் கிராமத்தில் புதுவருடப்பிறப்பான நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் 40 ஆயிரம் ரூபா பணம், அலைபேசி, சங்கிலி, காப்பு என்பன கொள்ளையர்களால் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் தகவல் தெரிவிக்கையில்,

ஒரு மணியளவில் வீட்டின் வெளியே நாய் பலமாகக் குரைத்தது. இதனால் வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வெளியில் சென்று பார்த்தபோது, 4 பேர் முகத்தை மூடியபடி நின்றிருந்தனர். அவர்களில் ஒருவர் கொட்டன் வைத்திருந்தார். எஞ்சியோர் கையில் கத்தி வைத்திருந்தனர்.

அவர்கள் கத்தி முனையில் அச்சுறுத்தி வீட்டினுள் என்னைக் கொண்டு சென்றனர். ஏனையோரையும் சத்தம் போடவேண்டாம் என்று அச்சுறுத்தினர். சுமார் அரைமணி நேரம்



வீட்டில் தங்கி நின்று சல்லடை போட்டுத் தேடினர். இதன்போது 40 ஆயிரம் ரூபா பணம், சங்கிலி, காப்பு என்பவற்றை அவர்கள் கொள்ளையிட்டனர். இறுதியில் எமது அலைபேசியையும் பறித்துக் கொண்டு வீட்டினுள் எம்மை வைத்துப் பூட்டி விட்டு அவர்கள் சென்று விட்டனர். அவர்கள் வெளியேறிய பின்னர் ஜன்னலினூடான வெளியில் குதித்துக் கதவைத் திறந்தோம். அதன் பின்னர் அருகிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று தொலைபேசியூடாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தோம் என்றார்.

இதேவேளை, கொள்ளையர்கள் நீண்ட நேரம் நடமாடியிருக்கலாம். அந்தப் பகுதியில் நின்றிருக்கக் கூடும் என்று அயலவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். ஏனெனில் நாய்கள் நீண்ட நேரமாகவே குரைத்துக் கொண்டிருந்தாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று மாலை வரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-ஐ-5-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் விடுதலை; மனச்சாட்சியுடன் நடவுங்கள்

## அரசியல் தரப்புக்களிடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.16
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அனைத்து தமிழ் அரசியல் தரப்புக்களும் மனச்சாட்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குண சீலன் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சிறைச்சாலைக்குச் சென்ற மாகாணசபை உறுப்பினர், கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

> பல வருடங்களாக எமது தமிழ் அரசியல் கைதிகள் உரிய விசாரணைகள் இன்றித் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து மனச்சாட்சியுள்ள அனைத்து தமிழ் தரப்புக்களும் உரிய நடவடிக்கையை மேற்கோண்டு, அவர்களை அவர்களது குடும்பங்களுடன் இணைத்து நல்லாட்சியை ஏற்படுத்தவேண்டும்.

அவர் மேலும் கூறுகையில்,
தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இங்கு இரு அரசியல் கைதிகள் எவ்வித விசாரனைகளும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகச் சக அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.
நல்லாட்சி அரசின் இந்தக் கால கட்டத்தில் குறித்த அரசியல் கைதிகளின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அதனை விடுத்துப் பல வருடங்களாக எமது தமிழ் அரசியல் கைதிகள் உரிய விசாரணைகள் இன்றித் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து மனச்சாட்சியுள்ள அனைத்து தமிழ் தரப்புக்களும் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு, அவர்களை அவர்களது குடும்பங்களுடன் இணைத்து நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-5-56)

## வீட்டுச்சுவர் இடிந்து வீழ்ந்து மாணவனின் கால் சிதைவு

சாவகச்சேரி,ஏப்.16
வீட்டுச் சுவர்கள் இடித்து வீழ்த்துவதைப் பார்த்துக் கொண்டிருந்த 15 வயதுப் பாடசாலை மாணவனின் காலில் மறுபக்கச் சுவர் உடைந்து வீழ்ந்ததில் கால் சிதைவடைந்துள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.
வீடு புனரமைப்பதற்காக வீட்டுச் சுவர்கள் நேற்று இடித்து உடைக்கப்பட்டபோது இந்த இடர் இடம்பெற்றது. கால் சிதைவடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
இதேவேளை நேற்றுக் காலை 15 அடி உயரமான தென்னையில் இளநீர் பிடுங்க ஏறிய 10 வயது மாணவன் தவறி வீழ்ந்ததில் கை முறிந்தது.
இந்தச் சம்பவம் வரணி இயற்றாலையில் இடம்பெற்றது.
வலது கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த-ஐ-9)

## வலிவடக்கில் விடுவிக்கப்பட்ட ரேணுகேஸ்வரர் ஆலயம் சேதம்

யாழ்ப்பாணம்,ஏப்.16
வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கீரிமலை, நகுலேஸ்வரம் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட 6.1 ஏக்கர் காணியில் அமைந்திருந்த ரேணுகேஸ்வரர் ஆலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.
மேலும் இந்த ஆலயத்துக்குச் சொந்தமான ரேணுகா ஆச்சிரமும் முற்றாகக் கடற்படையினரால் அழிக்கப்பட்டுள்ளது.
கடந்த 26 வருடங்களாகக் கடற்படையினரின் வசம் இருந்த 17 பேரின் 6.1 ஏக்கர் காணி உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டிருந்தது. இதில் 7 வீடுகள் தற்போது நல்ல நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-107)

## இலங்கை -இந்திய பிடியில் தமிழ் மன்னன் சங்கிலியன்

யாழ்ப்பாணம், ஏப்.16
யாழ்ப்பாணத்தைக் கடைசியாக ஆண்ட தமிழ் மன்னனான சங்கிலியன், இலங்கை - இந்தியத் தேசியக் கொடிகளால் சிறைப் படுத்தப்பட்டுள்ளான்.
இந்தியாவின் சட்டமேதை என வர்ணிக்கப்படும் மருத்துவர் அம்பேத்கர் நினைவாகக் கிட்டு பூங்காவில் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பட்டிமன்றம் இடம்பெற்றிருந்தது.
இந்தப் பட்டிமன்ற நிகழ்வுக்காகக் கிட்டுப் பூங்கா வளாகம் இந்திய - இலங்கைத் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இதன்போது அங்கு அமைந்திருந்த சங்கிலியன் சிலையைச் சுற்றியும் இலங்கை - இந்திய தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. (த-ஐ-101)



## 42 குடும்பங்களுக்கு வளலாயில் மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஏப்.16
மீள்குடியேற்றம் செய்து வைக்கப்பட்ட வளலாய் வடக்குப் பகுதியில் மீள்குடியமர்ந்த 68 குடும்பங்களில் அரை வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெற்ற 42 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகச் செயலகத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. கடந்த வருடம் மார்ச் மாதம் 25ஆம் திகதி வளலாய் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து உத்தியோகபூர்வமாகக் கோப்பாய் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.
தொடர்ந்து இந்தப் பகுதியில் 68 மீனவக் குடும்பங்கள் நிரந்தரமாக மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்களில் 42 குடும்பங்களுக்கே மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதியாக உள்ள ஏனைய குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியமுடிகிறது. (த-ஐ-107)

## மருதனார்மடம் சந்தையில் தொடர்கிறது கழிவு அறவீடு

யாழ்ப்பாணம்,ஏப்.16
வலி.தெற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட மருதனார்மடம் சந்தையில், விவசாயிகளால் விற்பனைக்குக் கொண்டு வரும் உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வியாபாரிகளால் 10 வீதக் கழிவு அறவிடப்படும் நடைமுறை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருவதாக, விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
இவ்வாறான கழிவு நடைமுறை தொடர்வது தொடர்பில் தனக்கு எதுவிதமான முறைப்பாடுகளும் விவசாயிகளிடமிருந்து கிடைக்கவில்லை என்று வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் சுதர்சன் குறிப்பிட்டார்.
விவசாயிகளால் சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டுவரும் நிலக்கீழ் விவசாய உற்பத்திப் பொருள்களில் மண்ணுடன் எடுத்துவரும் கிழங்கு தவிர்ந்த ஏனைய பொருள்களுக்கு வியாபாரிகளால் கழிவுகள் கோரப்படக்கூடாது என்று வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தது.
விற்பனைக்குக் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்களுக்குத் தொடர்ந்தும் 10 வீதக் கழிவு அறவிடப்படுவதால் தாம் பெரிதும் நட்டம் அடைவதாகவும், இதனால் கஷ்டப்பட்டு விவசாயம் செய்தும் அதன் உரிய பயனை அனுபவிக்க முடியாமல் உள்ளதாகவும் விவசாயிகள் கவலை அடைகின்றனர்.
வடக்கு மாகாணத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் 10 வீதக் கழிவுடன் பொருள்களை வாங்குவது முக்கிய பிரச்சினையாக இனங்காணப் பட்டிருந்தது.
இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாகச் சந்தைகளில் கழிவு வழங்கப்படும் முறைமை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் உடனடியாக நீக்கப்படும் என்று வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட உரையில் தெரிவித்திருந்தார்.
விவசாய அமைச்சரினால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தும் அது நடை முறைப்படுத்தப்படாமலேயே இருந்தது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அதனை மீளவும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்குரிய அறிவுறுத்தல்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்தன.
மீளவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதும், தொடர்ந்தும் விவசாயிகளிடம் கழிவு பெற்றுக் கொள்ளும் நடைமுறை தொடர்கின்றது. மருதனார்மடம் சந்தையில் இந்த நடைமுறை தொடர்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
விவசாயிகளின் குற்றச்சாட்டுத் தொடர்பில் பதிலளித்த பிரதேச சபைச் செயலாளர், தனக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (த-ஐ-5-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நல்லிணக்கத்தை அமெரிக்க அரசு ஊக்குவிக்கும்

## உதவிச் செயலர் மாலினோவ்ஸ்கி தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.16
இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் நீதியை அமெரிக்கா ஊக்குவிக்கும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்காக உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

“நாடுகளின் மனித உரிமைகள் நடைமுறைகள் - 2015'' அறிக்கை வோசிங்டனில் வெளியிடப்பட்ட பின்னரே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இணை அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட கூட்டுத் தீர்மானத்துக்கு அமைய, இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் நீதியை அமெரிக்கா ஊக்குவிக்கும் என்று ரொம் மாலி னோவ்ஸ்கி குறிப்பிட்டார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நாடுகளின் மனித உரிமைகள் நடைமுறைகள்-2015 அறிக்கையை, ரொம் மாலினோவ்ஸ்கி தலைமையிலான ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கானபணியகமே தயாரித்திருந்தது.

உதவி இராஜாங்கச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி கடந்த ஆண்டில் இலங்கைக்குப் பலமுறை பயணங்களை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)



## தனுஷ்கோடிக் கரையில் இலங்கைப் படகு மீட்பு

சென்னை, ஏப். 16
இலங்கையில் இருந்து சென்றதாகக் கருதப்படும் ஒரு படகை நேற்று அதிகாலையில் தனுஸ்கோடியில் தமிழக கரையோரப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கையில் இருந்து சென்றதாகக் கருதப்படும் குறித்த படகு, நீர்கொழும்புப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் படகில் இருவர்பயணித்ததாகவும் தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், குறித்த படகில் 25 குதிரைவலுக் கொண்ட இயந்திரம் பொருத்தப்பட்டிருந்துள்ளது.

எனினும் படகு மீட்கப்பட்டுள்ளபோதிலும், படகில் பயணித்த இருவரும் தலைமறைவாகியுள்ளதனால், அவர்களைதமிழக கரையோரப்பொலிஸார்தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-ஐ-101)

## மாமியாரைப் பார்க்க கோத்தா திடீரென பறந்தார் அமெரிக்கா

கொழும்பு, ஏப். 16
மாமியாரைப் பார்ப்பதற்காக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்பாக எதிர்வரும் 18 ஆம் திகதி முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே கோத்தபாய அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 179 பேர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை தொடர்பில், விசாரணைகள் நடத்தப்படுகின்றது. இது தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே அவர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். கோத்தபாயவின் மனைவியின் தாயாரின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளமையாலேயே அவர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார் என்றும் எதிர்வரும் மே மாதமே இலங்கைக்குத் திரும்பி வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போதைய அரசியல் மோதல்களில் தலையிடாமல் அமைதியாகுமாறு கோத்தபாய ராஜபக்சவின் ஆலோசகர்கள் அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதற்கமைய சிறிது காலம் நாட்டை விட்டுச் செல்லுமாறும் கோத்தபாயவுக்கு அறிவுறுத்தியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

(த-ற-5)

## கூட்டு எதிரணியின் மேதின கூட்டத்தில் சு.க. முக்கியஸ்தர் பங்கேற்பார்

கொழும்பு, ஏப்.16
காலியில் நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்ட பிரதான ஏற்பாடாளர்களில் ஒருவர், கிருலப்பனையில் கூட்டு எதிர்க் கட்சி நடத்த உள்ள மேதினக் கூட்டத்தில் பங்கேற்பார் என்று மகிந்த ஆதரவு அணிநாடாளுமன்றஉறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமது பெயர் ஏற்பாட்டுக் குழுவில் உள்ளடக்கப்பட்ட போதிலும், தாம் கூட்டு எதிர்க் கட்சியின் கூட்டத்திலேயே பங்கேற்பதாகச் சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் உறுதியளித்துள்ளதாக குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காலியில் நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்ட ஏற்பாட்டாளர் குழுவில் குமார வெல்கம, பவித்ரா வன்னியாரச்சி, மகிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்டவர்களின் பெயர்களையும் ஜனாதிபதி உள்ளடக்கியிருந்தார் என்று அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

## ரயில் கடவைகளை பொதுமக்கள் அவதானமாகக் கடக்க கோரிக்கை

### ரயில் பாதுகாவலர்கள் பணிப் புறக்கணிப்பால்

கொழும்பு,ஏப்.16
பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் கடமையாற்றி வரும் பாதுகாவலர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பாதுகாப்பற்ற ரயில் பாதைக் கடவைகளைக் கடக்கும்போது அவதானமாகக் கடக்கவேண்டுமென ரயில் வேத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

வழங்கப்படும் சம்பளம் போதுமானதல்ல எனப் பாதுகாப்பாற்ற ரயில் கடவைகளில் பணியாற்றி வரும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும் வரை தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தப்படும் என்று பாதுகாப்பற்ற ரயில் கடவை பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சங்கச் செயலாளர் நிமால் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

உரிய தீர்வுத் திட்டம் வழங்கப்படாவிட்டால் குடும்ப உறுப்பினர்களுடன் போராட்டத்தில் குதிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தப் போராட்டம் குறித்து ரயில் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், நிதானமாக ரயிலைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளதாகவும் ரயில் திணைக்கள போக்குவரத்து அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து பொலிஸாருக்கும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(த-ஐ-5)

## தேசிய விவசாயச் சபையை அமைப்பதற்கு நடவடிக்கை

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.16
விவசாய சமூகத்தின் கருத்துக்கள், முன்மொழிவுகளைப் பெற்று அவர்களின் நேரடிப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நாடளுமன்றத்தில் நிறை வேற்றப்படும் ஒரு முன்மொழிவுக்கேற்ப புதிய தேசிய விவசாய சபையை அமைப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற விவசாய மாநாடு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அனைத்து மாவட்டங்களினதும் விவசாய அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தச் சபை அமைக்கப்படும். திறைசேரி, விவசாய, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சுகளின் அதிகாரிகளினதும் பங்குபற்றுகையுடன் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடும். சபையில் நெல் கொள்வனவு, உரமானியம், உபகரணங்கள் கொள்வனவு மற்றும் சந்தைப் படுத்தல் போன்ற எல்லா விடயங்கள் குறித்தும் எடுக்கப் படும் தீர்மானங்களை வேறு எவரும் மாற்ற முடியாது. அந்தத் தீர்மானங்கள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக சட்ட மாக்கப்படும்.

இந்த வருடம் முதல் ஒவ்வொரு வருடமும் நிலையாக நடைமுறைப்படுத்தப்படும் வகையில் தேசிய விவசாயிகள் தினம் பிரகடனப்படுத்தப்படும். விவசாய சமூகத்தின் உரிமைகள், சலுகைகள் மற்றும் அவர்களது வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தல் என்பவற்றுக்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுடன் கூடியதாக இந்தத் தினம் நடைமுறைப்படுத்தப்படும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய பொருளாதாரத்தையுடைய ஒரு நாடு என்ற வகையில் இந்த நாடு இன்று போல் நாளையும் நிலைத்திருக்கப் போவது விவசாயப் பலத்திலாகும்.

அன்று அரசுக்குள் இருந்து விவசாய சமூகத்தின் உரிமைகள், சலுகைகளுக்காகக் குரல் கொடுத்த நாம், தமது உரிமைகள் சலுகைகள் தொடர்பில விவசாய சமூகம் போராடுவதை ஒருபோதும் நிராகரிக்கப்போவதில்லை. அவர்களது குரலுக்கு செவிசாய்ப்பதேயல்லாமல் அதனை நசுக்குவதற்கு ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது- என்றார். (த-ஐ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜப்பானியக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சியில் இலங்கை

கொழும்பு, ஏப்.16
ஜப்பானியக் கடற்படையும், இலங்கைக் கடற்படை - விமானப்படை மற்றும் கடலோரக் காவல் படையும் இணைந்து, கூட்டுப் பயிற்சி ஒன்றை மேற்கொள்ளவுள்ளன.

தேடுதல் மற்றும் மீட்பு ஒத்திகை என்ற பெயரில் நடத்தப்படவுள்ள இந்தக் கூட்டுப் பயிற்சி அடுத்த மாதம், 10 ஆம் திகதி இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்காக, ஜப்பானிய கடற்படையின் இரண்டு பி-3சி கடல் கண்காணிப்பு விமானங்கள் இலங்கைக்கு வரவுள்ளன.

ஜப்பானியக் கடற்படையின் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகம் வரும் போது நடத்தப்படும் கூட்டு பயிற்சிகள் மூலம், ஜப்பானியக் கடற்படைக்கும், இலங்கைக் கடற்படைக்கும் இடையில் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்துக்கு ஜப்பானியக் கடற்படைப் போர்க் கப்பல்கள் இப்போது தொடர்ச்சியாக வந்து செல்கின்றன.

> ஜப்பானியக் கடற்படையின் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகம் வரும் போது நடத்தப்படும் கூட்டுப் பயிற்சிகள் மூலம், ஜப்பானியக் கடற்படைக்கும், இலங்கைக் கடற்படைக்கும் இடையில் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

சோமாலியக் கடற்பரப்பில் கடற்கொள்ளையில் இருந்து கப்பல்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைக்குச் செல்லும்போதும் அங்கிருந்து நாடு திரும்பும் வழியிலும் ஜப்பானியப் போர்க் கப்பல்கள் கொழும்பு வந்து செல்கின்றன. கடந்த திங்கட்கிழமை இரண்டு ஜப்பானியப் போர்க்கப்பல்கள் கொழும்பு வந்திருந்தன. ஜப்பானியப் போர்க்கப்பல்கள் இலங்கைக்குப் பயணம்மேற்கொள்வது இது 58 ஆவது தடவையாகும். (த-ஐ-5)



# இலங்கைக் கடற்படைக்கு குவாம் தீவில் அமெ. பயிற்சி

கொழும்பு, ஏப்.16
கடற்படையினருக்கு, வடமேற்கு பசுபிக் பெருங்கடலில் உள்ள குவாம் தீவில், அமெரிக்கக் கடற்படையினர் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். பசுபிக் பெருங்கடலில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள குவாம் தீவில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளத்திலேயே, கடற்படையினருக்கு பல்வேறு கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அமெரிக்க கடற்படையின் அதிரடிப்படை சார்பில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குவாம் கடற்படைத் தளத்தில் வைத்து இந்த மாத முதல் வாரத்தில் கடற்படையினருக்கு அமெரிக்கக் கடற்படையின் வெடிபொருள் அகற்றும் நடமாடும் பிரிவினால், பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இந்தப் பயிற்சியின் மற்றொரு கட்டமாக, கடற்படையினருக்கு, நேற்று முன்தினம் குவாம் தீவில் உள்ள அப்ரா துறைமுகத்துக்கு அப்பால் கடலுக்குள் சுழியோடும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போரில் மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானியக் கப்பல் ஒன்றின் சிதைவுகளுக்கு அருகே இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மேம்பட்டுள்ள நிலையில், கடற்படையினருக்கு அமெரிக்கா பயிற்சிகளை வழங்கத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

# பொலிஸ் ஆயுதங்கள் களவு:3 பொலிஸார் பணி நீக்கம்

கொழும்பு, ஏப்.16
மாத்தளை, லக்கல பொலிஸ் நிலையத்தில் இருந்து காணாமற்போன ஆயுதங்கள் தொடர்பில், கடமையில் இருந்த 4 பொலிஸ் அலுவலர்களில் மூவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் லக்கல பொலிஸ் நிலையத்தில் இருந்து ஆயுதங்கள் களவாடப்பட்டிருந்தன. பொலிஸ் நிலைய ஆயுத களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 5 கைத்துப்பாக்கிகள் என்பவற்றை இனந்தெரியாத ஒருவர் களவாடிச் சென்றிருந்தார்.

சம்பவத்தின்போது கடமையில் இருந்த 4 பொலிஸ் அலுவலர்கள் மது அருந்தி இருந்தார்களா? என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அவர்கள் மதுபோதையில் இருக்கவில்லை என்று ஆரம்ப விசாரணையில் இருந்து தெரியவந்தது.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயுதங்கள் களவாடப்பட்டமை இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இடம்பெயர்ந்த மக்களின் அவலத்துக்கு முடிவில்லையா...?

போருக்கு முன்னரும் அதற்குப் பின்னரும், சித்திரவதைகள், பாலியல் வன்புணர்வுகள், மனித உரிமை மீறல்கள் போன்ற மனிதக் கொடுமைகளில் ஈடுபட்டவர்கள், தப்பித்துக் கொள்ளும் நிலைமை தொடர்கிறது.

கடந்த புதன்கிழமை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்த அறிக்கையில், மேற்கண்டவாறு கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் - 2015 என்ற நீண்ட ஆவணத்தில், இந்த நாட்டு அரசின் அசமந்தம் குறித்து மிகக் கடுமையாகச் சாடப்பட்டுள்ளது.

சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுதல், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனுதாபிகள் என்று கருதப்படுவோர் கண்டபடி கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், சித்திரவதை செய்யப்படுதல், பாலியல் மற்றும் பாலின வன்முறைகளில் ஈடுபடுத்தப்படுதல் உட்பட, மிகப்பெரும் எண்ணிக்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை--

இலங்கை ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும், அரசமைப்புக்கான மாற்றங்கள், ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை, இன நல்லிணக்கத்துக்கான செயலகம் ஆரம்பிக்கப்பட்டமை, மற்றும்--

புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கியமை--

கொழும்பு அரசின் குறித்த நகர்வுகள் வரவேற்கவல்லவை என்று அமெரிக்க அரசு, தனது அறிக்கையில் துலாம்பரமாக விளம்பி உள்ளது.

மொத்தத்தில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை, பிரச்சினையின் இரண்டு பக்கங்களையும், அங்கொன்றும் இங்கொன்றுமாக, நேர்நிலை நின்று வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இலங்கை அரசின் சில நகர்வுகளை மிகப்பெரிய அளவில், அமெரிக்க அரசு சிலாகித்துப் பேசியுள்ளமை, பொருத்தம் தானா என்பது அகன்று ஆராயப்பட வேண்டியது.

இடம்பெயர்ந்த (தமிழ்) மக்களின் உரிமைகள் இன்னமும் நிரவப்படாமல் இருப்பது குறித்து, நல்லிணக்க அரசின் தலைமைத்துவங்கள், கீச்சுமாச்சுத் தம்பளம் விளையாட நினைப்பது கண்டிக்கப்பட வேண்டிய பிரதான அலகு!

இலங்கை வாழ் தமிழ் மக்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் கடந்த அறுபது ஆண்டு காலமாக, தமக்குரிய பிரிக்க முடியாத உரிமைகளைக் கூட--

சிங்கள அரசியல் தலைமைகளிடம் இருந்து வெட்டிப் பிரித்தெடுக்க இயலாத நிலைமையே, உச்சி வானத்தைத் தொட்டு நிற்கிறது.

அதனை நாடிய தமிழ் இளைஞர்களின் எழுச்சி, அடுத்துத் தொடுத்து வந்த தென்னிலங்கையின் ஆட்சியாளர்களால்--

மாறி, மாறி அரச பீடத்தில் அமர்ந்து, பேரினவாதத்தை சிங்கள மக்கள் ஊடாகப் பலப்படுத்திய பாவம் தொடர்ந்தது. அதுவே இந்த நாட்டின் மிகப்பெரும் சாபக்கேடு!

அரசு நடத்திய போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் உரிமைகள் பஸ்மம் ஆக்கப்பட்டன--

அதன் விளைவுகள் இந்த நாட்டை சகோதரத்துவம், சமத்துவம் கொண்ட நிலையை மேலுயர்த்த வழி செய்யாது.

தென்னிலங்கையின் அரசுகள்--

அரசியல் தலைவர்கள்--இது குறித்து, மனச்சுத்தியுடன் செயற்படச் சிந்திக்கப் போவது எப்போது?

வெறும் அரச தகிடு தத்தங்கள் உரிய பயன் [illegible] மாட்டாவே...!!



# வடக்கு மாகாண சபையில் நடப்பது என்ன?

சேரலாதன்

வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பினருக்கு இடையிலானபனிப் போர் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. தற்போது பதவி வகிக்கின்ற அமைச்சர்கள் பதவி விலகவேண்டுமென்ற கோரிக்கை இதை வெளிச்சம் போட்டுக் காண்பித்து விட்டது.

### மக்களின் நம்பிக்கை

மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் இருந்தே மாகாண சபை இயங்க ஆரம்பித்ததும் தமது அவலங்களுக்கு எல்லாம் தீர்வு கிடைத்து விடுமென மக்கள் நம்பினார்கள். தேர்தல் பரப்புரைகளின்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளும் அவர்களது நம்பிக்கைக்கு வலுச் சேர்த்தன. தேர்தலில் கூட்டமைப்பு பெற்ற பெரு வெற்றி மக்களை மேலும் உற்சாகமடையச் செய்துவிட்டது. முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையில் நான்கு பேர் இடம்பெற்றனர்.

சுமார் இரண்டரை வருடங்களும் கழிந்து விட்டன. மூன்றாவது ஆளுநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுவிட்டார். இவர்கள் மூவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மாகாண சபையின் அமர்வுகள் ஒழுங்காக இடம்பெற்று வருகின்றன. இங்கு நிறைவேற்றி வைக்கப்பட்ட தீர்மாணங்கள் எண்ணிலடங்காதன. ஆனால், செயலுருவில் இடம் பெற்றவை மிகச் சிலவே என்பதுதான் நோக்குதற்குரியது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தேவைகள் எவ்வளவோ உள்ளன. அவை நிறைவேற்றித் தரப்படவேண்டும் என்ற ஏக்கமும்மக்களிடம்உள்ளது.ஆனால் மாகாண சபையால் அவற்றை நிறைவேற்றி வைப்பதற்கு முடியவில்லை. இன்றளவும் அந்த இயலாத தன்மை நீடித்துக் கொண்டே செல்கின்றது.

இந்த நிலையில் மாகாண சபையில் உள்வீட்டுப்பிரச்சினைகளுக்குக் குறைவில்லை. முதலமைச்சர் தமிழ்மக்கள் பேரவையின் இணைத்தலைவராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டபோது பெரிய பூகம்பமே வெடித்தது. முதலமைச்சருக்கு ஆதரவாக ஒரு சாராரும் எதிராக மறு சாராருமெனப் பெரிய இழுபறி நடந்து தற்போது ஓய்ந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலையில்தான் மாகாண அமைச் சர்கள் ஒட்டு மொத்தமாகப் பதவி விலக வேண்டுமென்ற கோசம் எழுந்து நிற்கின்றது. அதுவும் ஆளும் தரப்பிலிருந்து இந்தக் கோசம் எழுந்தது தான் ஆச்சரியமாக உள்ளது.


> போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைகள் எவ்வளவோ உள்ளன. அவை நிறைவேற்றித் தரப்பட வேண்டும் என்ற ஏக்கமும் மக்களிடம் உள்ளது.

### தமிழர்கள் ஆளத் தெரியாதவர்களா?

தமிழர்கள் ஆளத் தெரியாதவர்கள் என்ற கூற்று மீண்டுமொரு தடவை நிரூபிக்கப்பட்டு விட்டது. அதைவிட மக்களின் நலனில் சிறிதும் அக்கறையில்லாத நிலையில் ஆளும் தரப்பு மாகாண சபை உறுப்பினர்கள் செயற்படுவதும் சந்தேகமின்றித் தெரிகின்றது.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் தமக்குள் பிரிவினையை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தவறுவதில்லை. புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளில் கூட இது முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டம் தோல்வியைத் தழுவியமைக்கு இதுவுமொரு முக்கியமான காரணமாகும். இதனால் எதிர்காலத்தில் மிகப்பெரிய பாதிப்புக்கள் ஏற்படப் போகின்றன. அமைச்சர்களில் நம்பிக்கை இல்லையென்றால் சபையின் அமர்வின்போது அதை உரிய வகையில் எடுத்துக்கூற முடியும். அதைவிட ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் எடுத்துக்கூற முடியும். இதைவிடுத்து கையெழுத்து வேட்டையில் ஈடுபடுவது சரியா என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினரே ஒருமுறை யோசித்துப் பார்க்க வேண்டும். கூட்டமைப்பு என்பது சில அரசியல் கட்சிகளின் கூட்டணியால் அமைக்கப்பட்டது. அமைச்சர்களின் நியமனத்தின்போது கட்சிகளின் அடிப்படையிலேயே தேர்வுகள் இடம்பெற்றன. இதைவிட மாவட்ட ரீதியிலான நியமனங்கள் இடம்பெற்றதும் கவனிக்கத்தக்கது. தற்போது போர் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சரொருவரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுவொரு நியாயமான கோரிக்கை என்றே கொள்ளலாம். ஆனால் ஆரம்பத்தில் இந்த விடயம் ஏன் கவனிக்கப்படவில்லை என்ற கேள்வியும் எழுகின்றது.தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்கு முதலமைச்சர் ஒரு நேர்மையான தீர்வைக் காண வேண்டும். கடந்த காலங்களில் அவர் மீதே சந்தேகங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், அவர் பக்கச் சார்பற்ற விதத்தில் நல்லதொரு முடிவைக் காண வேண்டும். ஏற்கனவே மாகாண சபை மீது மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில், காணப்படுகின்றனர். இதை மேன்மேலும் அதிகரிக்கும் வகையில் காரியங்கள் இடம்பெற்றால் மக்கள் மாகாண சபையை எதிர்காலத்தில் முற்றாகவே நிராகரித்து விடுவார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# விபரீத விளையாட்டு எதற்கு?

நாட்டின் முக்கிய வரலாற்றுப் பிரதேசமாகவும் அரசியலில் பெண்களின் பங்கு குறித்த முக்கியத்துவத்தை ஏனையவர்களுக்கு எடுத்துக் காட்டிய இடமாகவும் எல்லா மக்களையும் சமமாக மதித்து அவர்களுக்கு உரிய மரியாதையை வழங்கும் மண்ணாகவும் சிறப்புக்களை உள்ளடக்கிய பிரதேசமாக விளங்கிய நெடுந்தீவின் பெருமைக்கு மாசு விளைவிக்கும் செயற்பாடுகளை அதிகாரிகள் ஏற்படுத்த முயல்வது கண்டனத்துக்குரிய தாகும். கடந்த காலங்களிலும் சரி பிற்பட்ட காலங்களிலும் சரி நெடுந்தீவைப் பொறுத்த வரை அரச அதிகாரிகளின் பார்வை வித்தியாசமாகவே காணப்படுகின்றது.



> ஓர் அரச உத்தியோகத்தர் குற்றச் செயல்களில் ஈடுபட்டார் எனச் சந்தேகிக்கும் பட்சத்தில் அவரைக் குறிப்பிட்ட பணியில் இருந்து இடை நிறுத்தி உரிய விசாரணைகளை முன்னெடுத்து உகந்த தண்டனை களை வழங்குவதே அதிகாரிகளின் பொறுப்பாகும்

### சமுர்த்தி முகாமையாளருக்கு இடமாற்றம்

பாலியல் வல்லுறவுக் குற்றஞ் சுமத்தப்பட்ட ஒரு சமுர்த்தி முகாமையாளர் கடமைக்காக நெடுந்தீவுக்கு உடனடி மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதாவது ஒரு குற்றவாளி அல்லது குற்றம் சுமத்தப்பட்டவர் நெடுந்தீவுப் பகுதியில் தான் கடமையாற்றத் தகுதியானவர் என்பதை வெளிப்படையாகக் கூறாது செயல் மூலமாக உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. அனேக வருடங்களுக்கு முன்னரும் இது போன்ற நிலைப்பாடு இருந்துள்ளது. சிறைத்தண்டனைகளைப் பெற்ற குற்றவாளிகளை அங்கு அனுப்பி வைக்கும் சம்பவங்கள் இடம் பெற்றதாக முன்னோர்கள் வருத்தம் தெரிவித்ததுண்டு. அதைத் தொடர்ந்து அரச ஊழியர்கள் எவராவது தமது கடமையில் நேர்மையற்றவராகக் காணப்பட்டால் அவர்கள் நெடுந்தீவுக்கு இடமாற்றம் செய்யப்படுவதுண்டு. 'பணிஸ்மென் றான்ஸ்பர்' என்று அதனை நாகரிகமாகச் சொல்லிக் கொள்வார்கள். வினைத்திறன் குறைந்த ஓர் ஆசிரியரை அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரிய நாகேந்திரரிடம் அவரை எங்கே மாற்றுவது அந்த ஊரையும் பழுதாக்கி விடுவாரே என இந்து போட் இராஜரட்ணம் கேட்டபோது, எந்த ஊருக்கும் அனுப்பமுடியாது. அவரை இடைநிறுத்தி விடுங்களேன்; என நாகேந்திரர், பதிலளித்திருந்தார். பின் நாள்களில் இந்தப் பணிஸ்மென் றான்ஸ்பர் என்கிற விடயத்திலும் கிராமசபைத் தலைவர்களாக இருந்த நாகேந்திரர், ம.கணபதிப்பிள்ளை ஆகியோர் தமது கடுமையான எதிர்ப்பை அதிகாரிகளிடம் தெரிவித்து வந்தனர். அது ஏற்கப்பட்டு அது மாதிரியான இடமாற்றங்களும் இடம் பெறாமல் இருந்தது. சிறிய குற்றங்களுக்காக உத்தியோகத்தர்களுக்குத் தண்டனை வழங்கும் இடமாக நெடுந்தீவைத் தேர்ந்தெடுப்பது அந்த ஊரை வஞ்சிப்பதாகவும் அங்குள்ள மக்கள் உலக நடைமுறைகளில் இருந்து மாறுபட்டவர்களாகவும் ஏன் அங்குள்ள மக்களே ஒரு தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட சிறைக்கைதிகளின் பரம்பரையே என்ற தோற்றப்பாட்டையும் ஏற்படுத்த ஏதுவாகிவிடும்.

பாலியல் வன்முறைகள் போன்ற கொடூரமான குற்றவாளிகளுக்கு உரிய இடம், அவர்கள் நடமாட வேண்டிய இடம், நெடுந்தீவு மட்டுமே என்ற கருத்து அரசின் நிலைப்பாடா? அல்லது இது போன்ற வன்முறைகள் நெடுந்தீவுக்கு மட்டுமே உரியது அதனால் நீங்கள் அங்குதான் பணியாற்ற வேண்டும் என்பது நியதிச்சட்டமா? ஓர் அரச உத்தியோகத்தர் குற்றச் செயல்களில் ஈடுபட்டார் எனச் சந்தேகிக்கும் பட்சத்தில் அவரைக் குறிப்பிட்ட பணியில் இருந்து இடை நிறுத்தி உரிய விசாரணைகளை முன்னெடுத்து உகந்த தண்டனைகளை வழங்குவதே அதிகாரிகளின் பொறுப்பாகும்.

### மக்களை அவமதிக்கும் செயற்பாடு

அதைவிடுத்து உனக்கு நெடுந்தீவுதான் சரி என்று அனுப்பிவைப்பது அந்த ஊரையும் அங்குள்ள மக்களையும் அவமதிக்கும் செயலாகும். எத்தனையோ உத்தியோகத்தர்கள் இது போன்ற குற்றச் சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ளனர். இலக்காகும் சாத்தியங்களும் ஏற்படலாம். இவர்களையெல்லாம் நெடுந்தீவுக்கு அனுப்பி வைத்தால் அங்கும் தமது கைவரிசையைக் காட்ட முனைய மாட்டார்கள் என் பது என்ன நிச்சயம். இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு சந்தேகத்தின் பேரில் கைது விசாரணை என்றெல்லாம் இருக்கும் போது நெடுந்தீவுக்கு உடனடி இடமாற்றம் என்றால்? எதற்கு இந்த விபரீத விளையாட்டு?

## பொறுப்புடன் நடந்து கொண்டால் பிரச்சினைகள் இல்லை

புதுவருடப்பிறப்புத் தினத்தன்று காலை வேளையில் சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அரச பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டேன். பஸ்ஸினுள் பயணிகள் அவ்வளவாக இல்லை. இடையில் பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிகளையும் காண முடியவில்லை. மருதனார் மடத்துக்கு வந்தபோதுதான் விடயம் புரிந்தது. அளவெட்டியிலிருந்து–யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்று அங்கிருந்து அப்போதுதான் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. அரச பஸ்ஸின் சாரதி அந்த தனியார் பஸ்ஸைக் கலைத்துச் செல்வதற்கு முயற்சி செய்யவில்லை. அவரும் பஸ் நடத்துநரும் இடையில் காத்திருந்த பயணிகளை ஏற்றிச் செல்வதிலேயே குறியாக இருந்தனர். கோண்டாவில் பகுதியில் ஒரு பயணி வரும்வரை காத்திருந்து அவரையும் ஏற்றிய பின்னரே பஸ் புறப்பட்டுச் சென்றது. நடத்துநரும் சாரதியும் நல்ல புரிந்துணர்வுடன் செயற்பட்டதைக் காண முடிந்தது. வழக்கமாக அரச, தனியார் பஸ்கள் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடுவதையே கண்ட எனக்கு அன்றைய சம்பவம் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

பஸ்சேவை என்பது பயணிகளுக்குரியது. இதில் பயணிகளின் நலன்களே முக்கிய கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இதை அரச மற்றும் தனியார் பஸ் ஊழியர்கள் உணர்ந்து கொண்டால் ஒரு பிரச்சினையும் எழமாட்டாது.

ம.தயாபரன், சுன்னாகம்

## சிறுதானியங்களின் உற்பத்தியில் கவனம் செலுத்துவோம்

அண்மைக்காலமாக சிறுதானியங்களின் விலையில் பெரும் உயர்வு காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் தானியங்களின் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அவற்றுக்கான அதிகரித்த தேவையும் இதற்கான காரணங்களாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் சிறுதானியங்களின் உற்பத்தியில் அதிக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. பெரும்போக அறுவடையின் பின்னர் வயல்களில் சிறுதானியங்களை உற்பத்தி செய்ய முடியும்.

நெல்லுக்குத் தேவையானதைப் போன்று அதிக நீரும் இவற்றுக்குத் தேவைப்படுவதில்லை. உளுந்து,பயறு,கௌபி போன்றவற்றைப் பயிரிடுவதால் வீட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர் மீதியை அதிக விலைக்கு விற்க முடியும். இதனால் குடும்பச் செலவுகளையும் சமாளிக்க முடியும்.

சிலர் இவற்றைப் பயிரிடாமைக்கு நீர்ப்பற்றாக்குறையை ஒரு காரணமாகக் கூறுகின்றனர். ஆனால், இந்தப் பயிர்களுக்கு நீர் அதிகளவில் தேவைப்படாது என்பதோடு வயல்களில் குழாய்க் கிணறுகளை அமைத்துக்கொள்வதன் மூலமாக நீரைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

எமது வீடுகளில் பயன்படாத வெற்றுக் காணிகளிலும் சிறுதானியங்களையும், நிலக்கடலையையும் பயிர் செய்ய முடியும். இதன் மூலமாகச் சிறு தானியங்களைக் கொள்வனவு செய்வதற்கு நாம் செலவிடும் பணத்தைச் சேமிக்க முடியும்.

இனிமேலாவது சிறுதானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் கவனம் செலுத்துவோம்.

வயற்காட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணாறேத் தீவுகளில் பெரிய தீவான ரெனர்பேயில், அடுக்கு மாடிக் குடியிருப்பு முற்றாக இடிந்து வீழ்ந்தது. நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குறைந்தது இருவர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதுடன், 15 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கட்டடம் வீழ்வதற்கு முன்னர் பெரிய வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும், வாயுச் சிலிண்டர் வெடித்திருக்கலாம் என எண்ணியதாகவும் மக்கள் தெரிவித்தனர். (த-ரி4)

# குடும்பமாக வாழ்வதற்கு சிறந்த நாடு டென்மார்க்

## பட்டியலை வெளியிட்டது யுனிசெப்

லண்டன், ஏப்.16

குடும்பமாக வாழச் சிறந்த நாடுகள் என்ற 20 நாடுகளைக் கொண்ட பட்டியல் யுனிசெப் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இதில் டென்மார்க் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. பின்லாந்து, நோர்வே, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடத்தை வகித்துள்ளன. இந்தப் பட்டியல், சிறுவர்களில் திரட்டிய ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான அறிக்கை, வருமானம், சுகாதாரம், கல்வி, செல்வந்த- ஏழை சிறுவர்களுக்கிடையிலான வாழ்க்கையில் உள்ள திருப்திகரத்தன்மை என்பவற்றை அளவுகோலாக வைத்து வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையில், சமத்துவத்தில் ஐக்கிய ராச்சியம் பின்தங்கியுள்ளமை தெரிய வந்துள்ளது. ஆனால் வருமானத்தில் சிறந்த நிலையில் விளங்குகின்றது. ஆனாலும் கல்வி, சுகாதாரம், திருப்திகரமான வாழ்க்கை போன்ற அம்சங்களில் இங்கிலாந்து பின்தங்கியுள்ளது. இதனால் இங்கிலாந்து 14 ஆவது இடத்திலும், ஜேர்மனி, கிறீஸ், ஹங்கேரி நாடுகள் அடுத்தடுத்து வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கல்வியில் காணப்படும் சமத்துவத்தில் 37 நாடுகளில், இங்கிலாந்து 25 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

ஐக்கிய ராச்சியத்தின் யுனிசெப் நிறுவன அதிகாரி தெரிவிக்கையில், சிறுவர்களுக்கான செயற்பாட்டை அதிகரிக்கவேண்டும். சிறுவர்கள் மத்தியில் உள்ள சமத்துவமின்மை அவர்களின் எதிர்காலத்தைக் சிதைக்கும் காரணி. இதற்கு எதிரான செயற்பாட்டை மேற்கொள்ளத் தயாராகவுள்ளோம். சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் அதேவேளை இதனால் எந்தச் சிறு பிள்ளையும் பாதிக்கப்படவில்லை என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். இதற்கான உடனடித் தீர்வை அரசு மேற்கொள்ளும். குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு ஆரோக்கியமான வாழ்வைப் பேணும் உதவிகளை மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் சமத்துவமற்ற சூழல் நிலவும் என அவர் தெரிவித்தார்.

இந்த பட்டியலில் அமெரிக்கா 18 ஆவது இடத்தையும், ஆஸ்திரேலியா 13 இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. சமத்துவமின்மையின் உச்சத்தில் இருக்கும் நாடுகளாக இஸ்ரேல், துருக்கி ஆகியனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (த-ரி4)



# ஆயுதக்குழு அட்டகாசம் 6 பொலிஸார் கொலை

## மேலும் பலர் கடத்தல் பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத், ஏப்.16

பாகிஸ்தானில் ஆயுதக்குழுவினர் 6 பொலிஸாரைக் கொலை செய்ததுடன், 24 பொலிஸார் மற்றும் பொதுமக்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் பஞ்சாப் மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஆயுதக் குழுவினரில் 4 பேர் கொல்லப்பட்டதுடன், 8 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் 7 பொலிஸார் இந்தச் சம்பவத்தில் காயமடைந்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னர் இடம்பெற்ற கடத்தல் சம்பவத்துக்கும் குறித்த குழுவினர் காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சிறிய தீவு போன்ற அமைப்பை உருவாக்கி அவற்றில் கடத்தப்படுபவர்களை மறைத்து வருகின்றனர். இவர்களின் தீவுப் பகுதியைச் சூழ நீரையும், அடர்ந்த காட்டையும் உருவாக்கியுள்ளனர். இதனால் இவற்றினுள் நுழைவது சவாலான விடயம் ஆகும். இந்தக் குழுவின் தலைவர் சோட்டு என அறியப்பட்ட குலாம் ரசூல் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி4)

# 17 வருடத்துக்கு ஒருமுறை மட்டும் வாழ்க்கை வட்டம் கொண்ட பூச்சி

வொஷிங்டன், ஏப்.16

அமெரிக்காவில் வடக்கு-கிழக்குப் பகுதியில் 17 வருடங்களுக்கு ஒருமுறை வாழ்க்கை வட்டமுள்ள பூச்சியின் இனப்பெருக்கம் இந்த வருடத்தில் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பூச்சி இனம்90 களின் காலப்பகுதிக்குப் பின்னர் தற்போது நிலத்தில் இருந்து மீண்டுள்ளது. சில்வண்டு இனத்தைச் சார்ந்த இந்தப் பூச்சி இனத்தின் முட்டை பொரிக்க நில வெப்பநிலை உயர்வாக இருக்க வேண்டும்.

ஒகியோ, நியூயோர்க், பென்சில்வேனியா, மேரிலாண்ட், வேர்ஜினியா ஆகிய பகுதிகளில் பில்லியன் கணக்கான வெட்டுக்கிளிகள் நிலத்தில் இடப்பட்ட முட்டையில் இருந்து பொரித்து வெளிவந்துள்ளன. இவற்றின் வாழ்க்கை வட்டம் ஒன்றில் இருந்து ஒன்றரை மாதம் வரை ஆகும். இதற்கிடையில், குறித்த பூச்சி வளர்ந்து, அதற்கான துணையைக் கண்டடைந்து, இணைந்து, முட்டைகளை இட்டுச் சாகும்.

17 வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் இந்த உயிரின வட்டம் பெருந்தொகையாக இருப்பதால் பொதுமக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

ஒரு ஏக்கருக்கு 1.5 பூச்சிகள் காணப்படும் என அவற்றின் எண்ணிக்கை குத்து மதிப்பாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவை வளர்ந்து துணையைத் தேடும்போது வெளியிடும் சத்தம் காதைப் பிளக்கும் அளவுக்கு இருப்பதால் மக்கள் முன்னேற்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றனர். நில வெப்பநிலை 64 பாகை செல்சியசை அடையும்போது மட்டுமே இணைதலில் ஈடுபட்டு முட்டைகளை இடும். இந்தப் பூச்சியின் அடுத்த வாழ்க்கை வட்டம் 2033 ஆம் ஆண்டு ஆகும். (த-ரி4)



# எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு 5 லட்சம் பூனைகளை வளர்க்கத் திட்டம்

ரோம், ஏப்.16

இத்தாலி நகரான ரோமில் அரசியல் பிரமுகர் அன்ரனியோ றாசி நகரின் எலி களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத் 5 லட்சம் பூனைகளை நகரில் வளர்க்க போவதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தா ஆசியாவில் காணப்படும் எலித் தொல் லைக்குத் தீர்வு பூனைகள் தான் என அவர் மேலும் தெரிவித்தார்.

அவற்றைப் பராமரிப்பது குறித்த திட்டங் கள் கருத்தில் கொள்ளப்பட்டு வருகின் றன. ரோம் நகரம் ஒரு காலத்தில் பூனை வளர்ப்புக்குப் பெயர் போன நகராகும் கடந்த 3 தசாப்பத காலமாக நகரமய மாதலினால் மிருகங்கள் வளர்ப்பு சட்டங்களினால் பூனை, நாய் வளர்ப் மிகவும் வீழ்ச்சியடைந்தது. ரோமில் எலிகளின் எண்ணிக்கை மிகவும் அதி கரித்துள்ளது. ஒரு வீட்டில் கட்டாயம் 2 எலிகள் இருப்பதாகவும், நகரில் 2.6 மில்லியன் வீடுகள் காணப்படுவதாகவும் நகர அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

# ஜப்பான் நில அதிர்வில் 9 பேர் சாவு

டோக்கியோ, ஏப்.16

ஜப்பானில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியால் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என இடர் முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட இந்தப் பூமி அதிர்வில் கட்டடங்கள் சேதமடைந்தன. இடிபாடுகளுக்குள் மக்கள் அகப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையத் தகவலின்படி 6.2 ரிச்டர் அளவுக்கு நடுக்கம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சிறிய அதிர்வுகளும் ஏற்பட்டன.

20 செக்கன்களுக்கு அதிர்வுகள் உணரப்பட்டன எனச் சம்பவ இடத்தில் இருந்தவர் தெரிவித்தார். இடம்பெற்ற நில அதிர்வால் 44 ஆயிரத்து 449 பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். 800 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களின் 50 பேர் கடுமையான காயங்களுக்கு உட்பட்டதாகவும் இடர் முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்தது.

ஜப்பான் வானிலைத் திணைக்களத்தின் நில அதிர்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவிக்கையில், எதிர் வரும் வாரத்தில் மேலும் பல நில அதிர்வுகள் ஏற்படும். இதனால் பல கட்டடங்கள் சேதமடையும். தற்போது ஏற்பட்ட சேதத்தால் ஏற்பட்ட கட்டட வெடிப்புகள் மேலும் ஒரு அதிர்வு ஏற்பட்டால் முற்றுமுழுதாகச் சரியக் கூடிய வாய்ப்புள்ளது. 7 லட்சத்து 50 ஆயிரம் பேர் நில அதிர்வால் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது. தற்போது ஏற்பட்ட நில நடுக்கம் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்த அதிர்வு 10 கிலோமீற்றர் ஆழத்தில் இடம்பெற்றுள்ளது-என்றார்.

இந்த அதிர்வு மேலோட்டமானது. இதனால் புவியின் மேற்பரப்பில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என அமெரிக்க புவியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த அதிர்வில் 19 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. இந்த அதிர்வு கடலுக்கு அடியில் ஏற்படவில்லை என்பதால் சுனாமி ஏற்பட வாய்ப்பில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ook : UTHAYAN.PRINT
r : UTHAYANPRINT



Cardiff
Metropolitan
University




076 928 9784
076 928 9810

Apply Now For May 2016 Intake

BSc (Hons)
Business Management

BSc (Hons)
Software Engineering

Associate College of Cardiff Metropolitan University - UK

INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
ICBT CAMPUS JAFFNA

580, Hospital Rd., Jaffna

021 - 4 777 888

National Business Excellence
2012 | 2013 | 2014 | 2015
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**(உங்களது எண் பலன் எப்படி? என்ற தலைப்பில் நான்காம் எண்காரர்களுக்கான பலன்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன. இன்று 5 ஆம் எண்காரர்களுக்கான பலன்கள் பிரசுரமாகிறது)**

## எண் 5

இந்த எண் அனைவராலும் மிகவும் விரும்பப்படும் எண்ணாகும். அனைத்து எண்களுக்கும் இந்த எண் பொதுவாகஉள்ளது. மிகநன்மையும், அதிர்ஷ்டமும் தருவது இந்த எண்ணாகும். புதனின் ஆதிக்கம் வலுத்து இருப்பவர்களுக்குப் பெருத்த யோகங்களைக்கொடுக்கும். புதனின்எண் இல்லாதவர்களுக்கும் கூட இந்த ஆதிக்கமானது, நல்ல பலன்களைத் தரவல்லது. இதனாலேயே பெரும்பாலான எண் சோதிடர்கள், பெயர் எண் 5 ஆக வரும்படி அமைத்துக் கொடுக்கிறார்கள். மற்ற அதிர்ஷ்ட எண்களான 1, 3, 6, 9 ஆகியவைகள் (அந்தக் குறிப்பிட்ட எண்ணானது) நல்ல அமைப்புடனும், வலுவுடனும் அன்பர்களுக்கு இருந்தால் தான் நன்மை புரியும். இல்லையெனில் தீய பலன்களைக் கண்டிப்பாக கொடுத்துவிடும். உதாரணமாக 3 ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு 24, 33, 42, 51ஆகிய 6 எண்ணின் வர்க்கங்கள் எந்த ஒரு பலனையும் கொடுக்காது. அதுமட்டுமன்றி, அவர்களை நிச்சயம் பல தோல்விகளையும் வேதனைகளையும் ஆழ்த்திவிடும். ஆனால் 5 மட்டும் யாருக்கும் தீமை புரியாது.

சோதிட சாத்திரத்தில் நவக்கிரகங்களில் சந்திரனுக்கு மட்டும் எல்லா இராசி வீடுகளினும் சமமாகவும், நட்பாகவும் (விருச்சிகம் தவிர) சொல்லப்பட்டுள்ளது. அதனால்தான் சந்திரனின் ஆதிக்கம் சாதகத்தில் பொதுவாக எல்லா இராசிகளுக்கும் நன்மையான பலன்களையே கொடுக்கும். கோசார பலன்களும் சந்திரனின் நிலையையே அடிப்படையாகக்கொண்டுள்ளது. ஆனால் எண்கணிதத்தில் 5ஆம் எண்ணே அத்தகைய ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகிய எண் வரிசையில் 5ஆம் எண்ணே மற்ற எண்களுக்கும் நடுவில் அமைந்துள்ளது என்பதே இதன் சிறப்புக்கும், நற்பலன்களுக்கும் காரணம். மற்ற எண்காரர்கள் தங்களது துன்பங்களையும், துயரங்களையும் கண்டு கலங்கும்போது இவர்கள் மட்டும், அவைகளைச் சவால்களாக எடுத்துக் கொள்வார்கள்.

5ஆம் எண்காரர்களின் புத்தி அதாவது அறிவு மிகவும் அற்புதமானது. ஒவ்வொரு நிமிடமும் புதுப்புது யோசனைகள் பிரபஞ்சத்திலிருந்து இவர்களுக்குத் தொடர்ந்து வந்து கொண்டேஇருக்கும். தேவர்களில் அறிவுக்கும், புத்திக்கும், செயற்திறனுக்கும் பெயர் பெற்றவர் விஷ்ணு பகவான் தான். அவரின்முழுக்கடாட்சமும்பொருந்திய எண் இதுதான் (5 எண்). மற்ற எண்காரர்களைக் காப்பதற்காகவே (விஷ்ணுவின் தொழில் மக்களைக் காத்தல் அல்லவா), 5ஆம் எண்ணின் பலம் உதவுகிறது. 9 எண்கள் வரிசையில் எந்த ஒரு கிரகத்தினருக்கும் இல்லாத ஒருகவர்ச்சி (காந்தசக்தி) இந்த 5ஆம் எண் நபர்களுக்கு உண்டு. எனவேதான் இந்த எண்ணைக் காந்த எண் அல்லது ஜனவசியம் நிறைந்த எண் என்று கூறுவார்கள். காந்தமானது, எந்த அளவு இரும்பையும், எளிதாக இழுத்து விடும் தன்மை உடையது. அதேபோன்றே, மக்களைக் கவர்வதில் இவர்களுக்கு நிகர் எவரும் இலர். இவர்களுக்கு அடுத்த நிலையில் தான் 6ஆம் எண்காரர்கள் உள்ளனர். ஏனெனில் அவர்களுக்கும் ஜனவசியம் இயற்கையாக உண்டு.

இவர்களது பேச்சில் கேலியும் (அடுத்தவர்களைப் புண்படுத்தாமல்) கிண்டலும், சிரிப்பும் கலந்திருக்கும். எத்தகைய நபர்களைச் சந்தித்தாலும், தங்களது தனித்தன்மையை அவர்களுக்குச் சீக்கிரம் உணர்த்தி விடுவார்கள். பல வருடகாலம் நண்பர்களாக நீடித்துத் தொடர்பு கொள்ளும் தன்மையும், கவர்ச்சியும், நட்புப் பலமும் இந்த 5 எண்காரர்களுக்கு உண்டு. மேலும் இவர்களுக்கு காரில், ரயிலில், விமானத்தில், அடுத்த ஊரில், அடுத்த நாட்டில் எதிர்பாராத நண்பர்களும், அவர்களின் மூலம் நட்பு மற்றும் பரஸ்பர உதவியும் எளிதில் இவர்களுக்குக் கிடைத்துவிடும். எப்போதும் எடுப்பாகவும், அழகாகவும், ஆடைகளையும், அழகு சாதனங்களையும் அணிந்து கொள்ளும் விருப்பம் கொண்டவர்கள் இவர்கள்.

*(தொடரும்)*

---

# மிருகமாகும் மனிதனால் சீர்குலையும் பெண்களின் வாழ்வு

**கீர்த்தி**

மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடு ஆறாம் அறிவான பகுத்தறிவாகும். மனிதன் தனது பகுத்தறிவால் நாகரிக மாற்றம், கலாசாரம், பண்பாடு என்பவற்றை உருவாக்கிப் பண்பான நாகரிகமாக வாழ்வொன்றை வாழ்ந்து வந்தான். ஆனால் அது இப்பொழுது தலைகீழாக மாறிவருகின்றது.

இன்றைய சூழலில் மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையிலான வேறுபாடு களையப்பட்டு மனிதன் மிருகமாவதை தற்போதைய குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள் மீதான துஷ்பிரயோகம், பலாத்காரம் அவற்றின் பின்னான படுகொலைகள் என்பன பறைசாற்றி நிற்கின்றன.

சிறுவர் மீதான துஷ்பிரயோகங்களை நான்கு வகைப்படுத்தலாம். ஆனால் உடல் ரீதியான பாலியல் துஷ்பிரயோகமே மக்களால் துஷ்பிரயோகமாகப் பார்க்கப்படுகின்றது. இந்தப் பாலியல் ரீதியான துஷ்பிரயோகமானது வெளிநபர்களால் மட்டுமன்றி சொந்தத் தந்தை, சகோதரர்கள், மாமன், பெரியப்பா, தாத்தா போன்ற இரத்த உறவுகளால் மற்றும் நன்கு தெரிந்தவர்கள், அயலவர்கள் எனப் பலராலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இவையே ஒரு பாதகச் செயலாக இருக்கும்போது தகப்பன், சித்தப்பா, பெரியப்பா எனக்கூட்டுச் சேர்ந்து துஷ்பிரயோகம் செய்தல், தாத்தா, அப்பா, மாமா எனக் கூட்டாக இணைந்து துஷ்பிரயோகம் செய்தல் என்பன மிகக் கொடிய செயல்களாகும். இவை ஊடகங்களால் வெளிக்கொணரப்பட்டவை மட்டுமே, இந்தச் செயல்கள் மனிதனுக்கும் மிருகத்துக்குமிடையிலான வேறுபாடுகள் களையப்பட்டு மனிதனும் மிருகமாவதை எடுத்துக் காட்டுகின்றது.




இவ்வாறான தவறான உறவுமுறையால் கர்ப்பமுறும் சிறுமிகள் கருக்கலைப்புச் செய்வதுடன் அதையும் மீறிக் குழந்தையைப் பெற்றெடுத்தால் பச்சிளம் குழந்தைகளைப் பிறந்தவுடனேயே வீசியெறியும் நிலையும் உருவாகின்றது.

இந்தக் காமுகர்கள் சிறுவர்களை, சிறுமிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணம் குழந்தைகளுக்கு தமக்கு என்ன நடக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளத் தெரியாது, அவ்வாறு புரிந்தாலும் ஏனையோருக்கு விளக்கிக் கூறத் தெரியாது. எளிதில் ஏமாற்ற முடியும் என்பவற்றைச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர் இந்தக் காமுகர்கள்.

அண்மையில் கொட்டடிப் பகுதியில் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றவர்கள் 70 ரூபாவைக் கொடுத்துச் சிறுமியை வீட்டுக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளனர். தென்னிலங்கையில் தாத்தா பேத்திக்கு பொக்கற் மணி கொடுத்து விபச்சாரியாகப் பயன்படுத்தியுள்ளார். பின் பொக்கற் மணி கொடுக்காமல் கடன் சொல்லி துஷ்பிரயோகம் செய்து கடனைக் கொடுக்காததால் சிறுமி தாத்தாவுக்கு எழுதிய கடிதம் தாயிடம் பிடிபட்டதால் விடயம் அம்பலமானது.

இதுபோன்ற பல சம்பவங்கள் தினம் தினம் நடைபெற்றாலும் பிள்ளைகளுடைய எதிர்காலம், கௌரவம் என்பவற்றினால் பல சம்பவங்கள் மறைக்கப்பட்டு வெளிவராமல் இருக்கின்றன. இதையும் சாதகமாகப் பயன்படுத்தும் காமுகர்கள் பல சிறுவர்களின் வாழ்வை, எதிர்காலத்தைச் சீரழித்துவிட்டு நல்லவர்களாக, இராமர்களாக வலம் வருகின்றனர்.

மனைவியானாலும் பெண்ணின் விருப்பமின்றி உறவு கொள்வதும் பலாத்காரம் ஆகும். மற்றும் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுமியுடன் சம்மதத்துடனோ, சம்மதமின்றியோ உறவு கொள்வது தண்டனைக்குரிய செயலாகும். சட்டப்படி தவிர்க்கப்பட வேண்டிய உறவுமுறை திருமணத்துக்குள் மச்சான், மச்சாள் முறைத் திருமணம் வந்தாலும் அது இன்று திருமணச் சட்டத்தில் காலகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் மச்சான், மச்சாள் திருமணம் மட்டுமே சட்டத்தால் விதிவிலக்காக்கப்பட்டுள்ளது.

ஆதாம் ஏவாளில் இருந்தே மனிதர்கள் தோன்றினார்கள் எனக்கூறும் கிறிஸ்தவ மதமும், ஆதாம்ஹவ்வா இருந்தே மனிதர்கள் உருவானார்கள் என இஸ்லாம் மதமும், கூறுகின்றன. ஆனால் இந்து மதமானது மனிதர் ஒரு கூட்டமாக உருவானார்கள் என்றுகூறி சகோதர சகோதரி உறவைப் புனிதமாக வைத்திருந்தது. ஆனால் அந்தப் புனிதமான உறவு முறையும் இப்போது சிதைக் கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> வேள்வியைத் தடுக்கக் கூடிய ஒரு தலைமைத்துவம் அண்மையில் தன்னை இனங்காட்டியுள்ளது. உருப்படியான ஒரு கைங்கரியத்தைச் சாதிக்க முனைந்துள்ளது. ஜீவராசிகளிடத்திலே சிவன் நிறைந்திருப்பதனால், ஆலயத்திலே சிவனைக் கத்தியால் பதம் பார்ப்பது எந்த விதத்திலும் நியாயமுமாகாது, தர்மமுமாகாது. நாட்டுக்கு நன்மையோ, வீட்டிற்கு நன்மையோ வேள்வியால் கிடைக்குமென்றால், அல்லது தெய்வமே வந்து சொன்னாலும் கூட அது நீதியாகுமா?

கே.எஸ்.சிவஞானராஜா

# சீவன் சிவன் என்னும் தெளிவு உண்டாகும்

மானிடப் பிறப்பின் தத்துவமே அனுபவித்தற் கோட்பாடாகும். தாயின் கருவில் தோன்றியது முதல், பரகதியடையும் வரை மனிதன் இந்தப் பூவுலகின் தார்ப்பரியங்களை முடிந்தவரை அனுபவித்துவிட்டு விடைபெறுகின்றான். அப்படியிருந்தும் அவன் திருப்தி அடையாமல் அடுத்த பிறப்புக்கும் மிகுதியை விட்டுவிட்டுச் செல்கின்ற அத்திபாரங்களையே எம்மால் பார்க்க முடிகிறது. படலையிலிருந்து சுடலை வரைக்கும் கடலையும் வென்ற கற்பனைகளோடு உடலை வேட்கைப்படுத்தி, உள்ளத்தைப் பாரமாக்கி, அங்கே பெரும் ஆசைப் பெருக்கை ஏற்படுத்தி விடுகின்றோம். இதைக் கட்டுப்படுத்தியே தீர வேண்டும். இல்லாவிடின், தற்போது நடைபெற்று வரும் அநியாயங்களும், அக்கிரமங்களும், அடாவடிகளும், அவதூறுகளுமே இந்த உலகில் மிஞ்சியிருக் கும். இதுதான் இந்தப்பிறப்பின்நோக்கமா? இதை அனு பவிக்கத்தான் வேண்டுமா? இல்லை. இதிலிருந்து விடுபட்டேயாக வேண்டும். விடுபடுவது மிகவும் சுலபமானது. சிவனைச் சீவனோடு இருத்திப் பார்.

எப்படி

"தாம்தன்னை அறிந்தால்சிவ
சாந்தமும் செறியுமே"

நீ, உன்னை யாரென்று உனக்குத் தெரிய வேண்டும், நீ உன்னை உனக்குள் தேட வேண்டும். இது இரண்டையும் நீ இன்றுவரை செய்ததாகத் தெரியவில்லை. நீ மற்றவனைப் பற்றி ஆராய்கிறாயே ஒழிய, உன்னைப் பற்றி எப்போதாவது நீ விமர்சித்திருக்கிறாயா? ஒவ்வொருவருடைய முதுகிலும் எக்கச்செக்கமாக நல்லதையா எழுதிவிட்டிருக்கிறார்கள்! இல்லையே! முதுகு ஒரு மதகு. அது வாழ்க்கையின் கதவு. நாம் வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும். வையகம் இதுதானடா" எனவே நீ உன்னை நிதானப்படுத்த வேண்டும். உனக்குள்ளே ஒரு சீவன் வாழ்கிறது. அது உனக்கு நல்லது செய்யவே காத்திருக்கிறது. நீயோ அதனை இயங்க விடுகிறாயில்லை. அது உன்னை நேர்வழிக்குக் கொண்டுவரப் படாதபாடு படுகிறது. நீயோ சொல்வழி கேட்கிறாயில்லையே. நான் என்ன செய்ய?

மறக்காதே

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை என
முன்னைப்பெரியோர்மொழிந்தனரால்தென்னைபனை
சேரிலங்கை வாழும் சிவநேயச் செல்வர்காள்
தேரீரிச் சீவனே சிவம் (யோகர் சுவாமிகள் கூறியது)
(ஆதாரம் 1951 மலர் 15/7)

ஆவதும் ஒன்றில்லை, அழிவதும் ஒன்றில்லை. பிறர் தம்மிடத்தில் நோவது ஏன்? அவரிடத்து நூதனம் ஒன்றில்லை. எல்லாம் வல்ல தேவாதி தேவனை உள்ளன்போடு வேண்டி நின்றால் சீவனே சிவனாகத் தோன்றும். எல்லா உயிர்களிடத்தும் சிவனைக் காண்பாயானால், நீ ஆவலாதிப்படமாட்டாய். அவசரப்பட மாட்டாய். உன்னை நீ பாரப்படுத்தி ஓடியாடித்திரிய மாட்டாய். நீயே உன்னைப் பெரியவனாக்கமாட்டாய். சமயம் சண்டித்தனம் கொண்டதல்ல.

தன்னையறிந்து விட்டால்
தானமும் தவமும் அதுவே
பொறிவழியே போயலையும்
பொல்லா மனத்தை வென்றால்
அறிவறியாமை எல்லாம்கிளியே
அப்பொழுதே மாய்ந்து விடும்.
கோபம், காமம், மோகமாகிய கூடாத கூட்டங் கூடாதே
நாடாதே என்றுந் தேடாதே

நாமது வெடி! நாமது வெடி!
பார்ப்பது, கேட்பது, எழுதுவது, கதைப்பது, உணர்வது எல்லாமே சிவமயமாக இருந்தால் நீ உண்மையாகவே பதைப்பற்றிருப்பாய். நாம் கடிதம் எழுதும்போது சிவமயம் என எழுதுகின்றோம். எழுதிய கடிதங்கள் ஏதாவது ஒன்றாவது தோல்வி கண்டிருக்கின்றனவா? இல்லையே! சிவ சிவ என்றும், சிவபெருமானே என்றும், அப்பனே என்றும், எம்பெருமானே என்றும் எம்முன்னோர் சீவனைச் சிவமாகக் கண்ட பேறதனை நாம் தொலைத்து விட்ட போக்கினால், சீவனையும், சிவனையும் இரண்டாகவே பார்க்கத் தொடங்கிவிட்டோம். இதனாலே வருத்தங்கள் எம்மிடம் குடிபுகுந்து விட்டன. வக்கிரமே மலிந்து விட்டது.

மருந்து

பேதமையை நீக்கவல்ல மருந்து சிவம்!
ஆசாபாசமதை அகல்விக்கும் மருந்து சிவம்!
அகங்காரமதை அகற்றும் மருந்து சிவம்!

மது, மாது, மாமிசங்களை வெறுத்தொதுக்குவது சிவமெனும் மருந்து! அநாகரிகங்களைத் தூரவிலக்கி, அறவே ஒழிப்பது சிவமெனும் மருந்து! போதைகளைக் கிட்டவே அணுகாமல் துவம்சம் செய்ய வல்லது சிவம்என்னும் மருந்து! மாறாப் பிறவியையும், மாறாத நோயையும் போக்கவல்லது சிவமெனும் மருந்து! நான் என்பதும், நீ என்பதும் வேறல்ல என்பதை ஒன்றுபடுத்துவது சிவமெனும் மருந்து!

குருந்த மரத்தடியில் குருவாக வந்து கும்பிட்ட
மாணிக்கரைத் தீட்சை வைத்து ஆண்ட மருந்து சிவமே!
அப்பருக்குச் சமணர் செய்த ஆபத்துத் தீர்த்து
அப்பூதி அடிகள் தம் பிள்ளைக்கு
உயிர் கொடுத்த மருந்துசிவமே!
மார்க்கண்டேயற்காக மறலியை உதைத்து
மாயா மருந்தை அவனுக்கீந்த மருந்து சிவமே!
அருமருந்தொரு தனிமருந்தினைத் தில்லை
அம்பலத்தில் கண்ட அதே மருந்தை
திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்
பெருங்கோயிலிலும் கண்டு வியந்தேன்.

இந்த மருந்தைக் கண்டு, உண்டு, அனுபவித்த பேறினாலே, சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார் மற்றும் ஏனைய நாயன்மாரும் சீவாத் மாக்களையே பரமாத்மாக்களாக வழிபட்டனர். அதனாலன்றோ காரியம் சித்தியாயிற்று. நாயன்மார் உடலை வருத்தினார்களே யொழிய சீவனையும் சிவனையும் ஒருபோதுமே வருத்தியதேயில்லை. நாம் என்ன செய்கிறோமென்றால், உடலை நோகாமல் கொள்ளாமல் வைத்துக் கொண்டு, உள்ளுடனான சீவனையே வாட்டியெடுக்கின்றோம்.

இது [illegible] இவ்வாறான [illegible] சீற்றத்துக்கு ஆளாகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வி

ஆறறிவு படைத்த மானிட நேயமுள்ள எவருமே, ஓர் உயிர் துடிதுடிப்பதையோ, வதைக்கப்படுவதையோ, அல்லது வெட்டப்படுவதையோ விரும்பமாட்டார்கள். ஒரு காலத்தில் நரபலி கொடுக்கப்பட்டதை இன்று சரியென்று எவராவது கூறுவார்களா?

கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிருந் தொழும்

இன்னுமொரு உயிரின் இரத்தத்தில் பசியாறுபவன் சைவசமயியாக இருக்கவே முடியாது. மாறாகி அவன் தான் செய்தவை அனைத்துமே சரியென்றே வாதாடுவான். மதுவுக்கும், மாதுவுக்கும், போதைக்கும் இலேசாக அடிமையாகிவிடுவான். எப்படியோ சில மாமிச உணவுகள் முரண்பாடான காரியங்களைச் செய்யவே தூண்டும். சிலருக்கு ஒவ்வொருநாளும் மூன்று வேளையும் மாமிச போசனமும், சினேகித வாசனையும் வேண்டியதாய் இருக்கும். இவர்களுக்கு எதைக் கொடுத்தாலும் திருப்திவராது. கண்ட கண்ட குப்பைகள் எல்லாவற்றையும் நாம் உண்ணப்பழகி விட்டோம். ஆதலால் வயிற்றையும் தொப்பையாக்கி குப்பையாக்கிவிட்டோம். எல்லா உயிர்களிலும் சிவம் நிறைந்திருப்பதை உணர்ந்து விட்டால் சிவத்தைத் துன்புறுத்த மாட்டோம். வேள்வியை ஆலயத்தின் பெயரால், இறைவனின் பெயரால் ஒரு போதுமே செய்ய மாட்டோம். வேட்டையாடிச் சாப்பிட்ட வேடுவ்குலமாக இப்போதும் நாம் காட்டுக்குள் வசிப்போமாக இருந்தால், அது ஆராயப்பட்டு, சரியானதொரு முடிவுக்கு வந்துவிடலாம்.

கூசுங் கொலைகள் ஒழித்திடல் இன்பம்
மாசுடை மதுவகை நீக்கிடல் இன்பம்
பூசலும், பகைமையும் போக்கிடல் இன்பம்
தேசத் தொற்றுமை ஓம்பிடல் இன்பம்

எங்கெங்கு எதையெதைச் செய்தாலும் அங்கங்கு ஈசன் இருப்பதைக் கண்டுவிட்டால் உன்னையோ எம்மையோ அறியாமல் ஒருவித பயபக்தியைப் பயிராக்கி விடுவோம். இந்தப் பயபக்தியினாலேதான் எம் சமயம் வாழ்கின்றதென்று கூறலாம். வேள்வியைத் தடுக்கக் கூடிய ஒரு தலைமைத்துவம் அண்மையில் தன்னை இனங்காட்டியுள்ளது. உருப்படியான ஒரு கைங்கரியத்தைச் சாதிக்க முனைந்துள்ளது. ஜீவராசிகளிடத்திலே சிவன் நிறைந்திருப்பதனால், ஆலயத்திலே சிவனைக் கத்தியால் பதம் பார்ப்பது எந்த விதத்திலும் நியாயமுமாகாது. தர்மமுமாகாது. நாட்டிக்கு நன்மையோ, வீட்டிற்கு நன்மையோ வேள்வியால் கிடைக்குமென்றால், அல்லது தெய்வமே வந்து சொன்னாலும் கூட அது நீதியாகுமா?

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்"

வாய் விடாச் சாதியோ, மனிதனோ இரந்து இறப்பதாயின் அந்த மதத்தைச் சிவன் படைத்திருக்க முடியுமா! இல்லை!

## பழமொழிகள்

- கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா?
- கசடறக் கல்லார்க்கு இசை உறல் இல்லை.
- கடலுக்குக் கரை போடுவார் உண்டா?
- கடலைத் தாண்ட ஆசையுண்டு கால்வாயைத் தாண்டக் கால் இல்லை.
- கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது?
- கடல் திடலாகும், திடல் கடலாகும்.
- கடல் மீனுக்கு நீந்தப் பழக்க வேண்டுமா?
- கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
- கடன் இல்லா கஞ்சி கால் வயிறு.
- கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான்; மரம் ஏறிக் கைவிட்டனும் கெட்டான்.
- கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.
- கடிந்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை.
- கடுகதனை நெருப்பானாலும் ஊரைக் கொளுத்திவிடும்.
- கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?

## வரலாற்றில் இன்றைய தினம்

73 - மஸாடா எனும் யூதக் கோட்டை பலமாத கால முற்றுகையின் பின்னர் றோமானியாரிடம் வீழ்ந்ததில் யூதப் புரட்சி முடிவுக்கு வந்தது.

1780 - மண்ஸ்ரர் பல்கலைக்கழகம் ஜேர்மனியில் ஸ்தாபிக்கப்பட்டது.

1853 - பம்பாய், போரி பந்தரிலிருந்து தானேக்கு முதலாவது பயணிகள் ரயில்சேவை தொடங்கப்பட்டது.

1912 - ஆங்கிலக் கால்வாயைக் கடந்து விமானம் ஓட்டிய முதற் பெண்மணியானார் ஹறியற் கியும்பி.

1917 - சுவிற்சர்லாந்திலிருந்து நாடுகடத்தப்பட்ட நிலையில் ரஷ்யாவுக்கு திரும்பினார் விளாடிமிர் லெனின்.

1919 - ஜாலியன் வாலாவில் இந்திய ஆர்ப்பாட்டக் காரர்களை பிரிட்டிஷ் படைகள் 3நாள்களுக்கு முன் படுகொலை செய்ததையடுத்து வழிபாட்டினையும் உண்ணா நோன்பினையும் மோகனதாஸ் காந்தி ஏற்பாடு செய்தார்.

1922 - றப்பல்லோ ஒப்பந்தம் மூலம்ஜேர்மனியும் சோவியத் யூனியனும் ராஜரீக உறவை மீள ஸ்தாபித்தன.

1925 - பல்கேரியாவின் சோபியாவில் புனித நெடல்யா தேவாலயம் மீ தான தாக்குதலில் 150 பேர் சாவு. 500 பேர் காயம்.

1994 - இரண்டாம் உலகமகாயுத்தம்: பெல்கிரேட் மீதான கூட்டுப் படையின் குண்டுத் தாக்குதலில் 1100 பேர் வரை சாவு.

1945 - ஜேர்மன் அகதிகளை ஏற்றிச்சென்ற கோயா கப்பல் சோவியத் நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றால் மூழ்கடிக் கப்பட்டதில் 7000 இற்கு மேற்பட்டோர் சாவு.

1947 - டெக்ஸாஸ் நகர் அனர்த்தம்:டெக்ஸாஸ் நகரில் உள்ள துறைமுகத்தில் சரக்குக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் அது தீப்பற்றி எரிந்ததில் 600 பேர் சாவு.


1953 - இரண்டாம் எலிசபெத் மகா ராணியால் றோயல் யாட் HMY பிரிட்டானியா கப்பல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

1961 - தேசிய ஒலிபரப்பு உரையில் கியூபா தலைவர் பிடல் காஸ்ரோ, தான் ஒரு மாக்ஸிஸ்ற் லெனினிஸ்ற் எனவும் நாட்டில் கம்யூனிஸ்ட் ஆட்சியைப் பின்பற்றப் போவதாகவும் அறிவித்தார்.

1992 - கரினா பி கப்பல் மொசாம்பிக் நாட்டுக்கு அப்பால் தரைதட்டியதில் 60 ஆயிரம் தொன் மசகு எண்ணெய் கசிந்து கடலில் கலந்தது.

2014 - 450 பேருடன் சென்ற எம்.வி.சிவெல் எனும் படகு கவிழ்ந்ததில் தென்கொரிய ஜின்டோ தீவில் 295 பயணிகளும் மாலுமிகளும் சாவடைந்ததுடன் 9பேர் காணமற் போயினர்.

## பசித்தவன் விசுவாசத்தை நம்பலாமா?



கிணறு ஒன்றில் கங்காதத்தன் என்ற கிழத்தவளை ஒன்று வசித்து வந்தது. இந்தத் தவளையை அங்கிருந்த மற்றத் தவளைகள் அடிக்கடி தொல்லைப் படுத்திக் கொண்டிருந்தன.

மற்றத் தவளைகள் கொடுத்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத கிழத்தவளை இராட்டினத் தோண்டி வழியே வெளியே வந்து மற்ற தவளைகளை என்ன செய்யலாம்? என்று யோசித்துக் கொண்டிருந்த போது அந்தக் கிணற்றுக்கு அருகிலிருந்த பாம்புப் புற்று அதன் கண்ணில் பட்டது. நம்மைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் தவளைகளை இந்தப் புற்றிலிருக்கும் பாம்பின் உதவியோடு கொன்று விட்டால் என்ன? என்கிற எண்ணம் வந்தது. மெதுவாகப் பாம்புப் புற்றின் அருகில் சென்று பாம்பை நட்புக்கு அழைத்தது.

உங்களுடைய பரம எதிரியான என்னுடன் நட்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவது ஏன்? என்று கேட்டது அந்த பாம்பு.

என்னுடன் இருக்கும் சில தவளைகள் என்னை தினந்தோறும் துன்புறுத்தி வருகின்றன. என்னால் பொறுக்க முடியவில்லை. அவற்றை அழிக்கத்தான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன். வேண்டாதவர்களை எதிரியைக் கொண்டே அழிக்கலாம் என்று நீதி நூலில் கூட சொல்லியிருக்கிறது என்றது அந்த கிழத்தவளை.

என்னால் எப்படி உன் இடத்திற்கு வரமுடியும்? நான் வரும் இராட்டினத்தின் வழியாக உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன் என்றது தவளை. பாம்பும் யோசித்தது.

நாமோ தினமும் உணவிற்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது இப்படி வலிய வந்து உணவிற்கு வழி செய்யும் தவளையின் கோரிக்கையை நாம் ஏன் மறுக்க வேண்டும்? என்று நினைத்தபடி தவளையுடன் அந்த கிணற்றுக்குள் சென்றது.

அந்த பாம்பும் கிணற்றுக்குள் அந்த கிழத்தவளைக்குத் தொல்லை கொடுத்து வந்த தவளைகளை எல்லாம் தின்று அழித்தது. கிழத்தவளையும் மகிழ்ச்சியுற்றது. ஆனால் அந்த மகிழ்ச்சி நெடுநாள் நீடிக்கவில்லை.

பாம்பு கிழத் தவளையைப் பார்த்து, உன்னுடைய எதிரிகள் எல்லாம் அழிந்து விட்டபடியால் என் பசிக்கு வேறு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்றது. கிழத்தவளையோ, நண்பரே நீங்கள் வந்த வேலை முடிந்து விட்டது . உங்கள் உதவிக்கு நன்றி. எனக்கு இனி உங்கள் உதவி தேவையில்லை என்றது.

ஆனால் பாம்போ கோபத்துடன், உன்னை நம்பித்தான் நான் இங்கு வந்தேன். இப்போது என்னுடைய இடத்தில் வேறு ஏதாவது வந்து நாட்டின் குடியேறியிருக்கும். தினந் தோறும் எனக்கு நீயே ஒரு தவ ளையை உணவாகக் கொடுக்க வேண்டும். இல்லை யேல் உன் கூட்டத்தில் இருப்பவர்களை நான் என் விருப்பப்படி பிடித்துத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்வேன் என்று அச்சுறுத்தியது. கிழத்தவளையும் பயந்து போய் தினந்தோறும் ஒரு தவளையை பாம்புக்குக் கொடுத்து வந்தது. கடைசியில் ஒருநாள் அது கிழத்தவளையின் மகனையும் தின்று தீர்த்தது.

இதைக்கண்டு அதிர்ச்சியுற்ற கிழத்தவளையின் மனைவி, நீங்கள் இந்தக் கொடியவனைக் கொண்டு வந்து நம் குழந்தையை மட்டுமில்லை, குலத்தையே அழித்து விட்டீர்கள். இனி நாமிருவர் மட்டும்தான் பாக்கி. நாமும் அழிந்து விடுவதற்கு முன்பு ஏதாவது சூழ்ச்சி செய்து அந்த பாம்பைக் கொன்று விடுங்கள், அல்லது நாமிருவரும் இங்கிருந்து தப்பித்துச் சென்று விட வேண்டும் என்று எச்சரித்தது. அந்த சமயத்தில் அங்கு வந்த பாம்பு தனக்குப் பசியாக இருப் பதால் ஏதாவது கொடு என்று கேட்டது.

உடனே கிழத்தவளையும், நண்பரே நாங்கள் இருக்கும் வரை நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் இப்போதே என் மனைவியை அனுப்பி வேறு கிணற்றிலிருந்து தவளைகளை இங்கே அழைத்து வரச் சொல்கிறேன் என்று மனைவியை அங்கிருந்து போகச் செய்தது.

சில நமிடங்கள் கழிந்த பின்பு, நீ எவ்வளவு நேரம்தான் பசியைப் பொறுத்துக் கொண்டிருப்பாய்? நானே வேகமாய்ப் போய்த் தவளைகளை அழைத்து வருகிறேன் என்றபடி இராட்டினத்தின் வழியே அக்கிணற்றை விட்டு வெளியேறியது.

இப்படித்தான் நாம் நம்முடைய சொல்லுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தீயவர்களோடு நட்புக் கொண்டால் அந்தத் தீயவர்கள் நம்மையும் சேர்த்து அழித்து விடுவார்கள்.


நட்புக் கூட நல்லவர்களோடுதான் இருக்க வேண்டும். இல்லையேல் இழப்பு நமக்குத் தான்.

## வர்ணம் தீட்டுவோம்வாங்க....





## அணிலே அணிலே ஓடி வா




அணிலே அணிலே ஓடி வா
அழகிய அணிலே ஓடி வா

கொய்யா மரம் ஏறி வா
குண்டு பழம் கொண்டு வா

பாதி பழம் உன்னிடம்
பாதி பழம் என்னிடம்

கூடிக் கூடி இருவரும்
கொறித்து கொறித்து தின்னலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



□ காருண்யன்

# விக்கிரகங்களைக் (கருங்) கல்லில் செய்வதன் நோக்கம்

கல்லில் பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று, நீர், நெருப்பு மற்றும் நிலம் ஆகியவை அடங்கியுள்ளன. மந்திர வேள்விகள், அர்ச்சனைகள் மூலமாக இறைவனின் ஆற்றலைக் கற்சிலைகளில் ஏற்றி நிலைப்படுத்துகிறார்கள்.

ஓம் என்ற மந்திர ஒலியுடன் அர்ச்சனைகள் செய்யப்படும்போது அந்த ஒலி விக்கிரகத்தில் பட்டு எதிரொலிக்கிறது. இதனால் காற்று மண்டலம் பெரும் அலைகளையும், ஒத்த தீர்வையும் பெறுகிறது. இதன் மூலமாக அயனியாக்கப்பட்ட மூலக்கூறுகள் அங்குள்ள பக்தர்களுக்குக் கிடைக்கின்றன. இது பக்தர்களின் உடல், உளநலன்களையும் மேம்படுத்துகிறது. விக்கிரகங்களுக்கு நாள்தோறும் தீர்த்தம், எண்ணெய், பால், தயிர், இளநீர், தேன் போன்ற பொருள்களால் அபிசேகம் செய்யப்படுகின்றது. இவ்வாறு செய்வதால் சந்நிதியில் உள்ள காற்று மண்டலத்தில் எதிர் மின்னோட்டம் அதிகமாகிறது.

**உற்சவ மூர்த்தியை செம்பில் செய்வதன் நோக்கம்**

செம்பு கடத்தும் ஆற்றல் உடையது. கருவறையில் (மூலஸ்தானத்தில்) சேமித்து வைத்துள்ள தெய்வீக ஆற்றலை நாம் பெறும் பொருட்டு, வீதி வழியே உலா வந்து காட்சி அளிக்கின்ற உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்து இருக்கின்றார்கள்.






**பெண்கள் நெற்றியில் குங்குமம் வைக்கும் திசையின் பயன்கள்**

பெண்கள் நெற்றியில் குங்குமம் வைக்கும் போது மேற்குத் திசைநோக்கி வைத்தல் கூடாது. கீழ் வரும் திசைகளில் குங்குமம் வைப்பதால் பல பயன்கள் ஏற்படுகின்றன.

கிழக்கு மாங்கல்ய பாக்கியம், மேற்கு தீராத நோய், ரோகம், தலைவலி, தெற்கு விரோதிகள் ஒடுங்குவார்கள், வடக்கு வம்ச விருத்தி, பூமிலாபம், பொருள் சேர்க்கை.

**சாப்பிடும்போது அமரும் திசையின் பயன்கள்**

கிழக்குப் பார்த்து அமர்ந்தால் ஆயுள் வளரும், மேற்குப் பார்த்து அமர்ந்தால் செல்வம் வளரும், தெற்குப் பார்த்து அமர்ந்தால் புகழ் வளரும், வடக்குப் பார்த்து அமர்ந்தால் வியாதி வளரும்.





**விளக்கேற்றும் திசைகளின் பயன்கள்**

கிழக்கு முகம்: கிரகதோம் நிவர்த்தி ஜாதக தோ நிவர்த்தி துன்பம் தீரும்.

மேற்கு முகம்: பகை நீங்கும்.

வடக்கு முகம்: திருமணத்தடை நீங்கும், பொருளாதார விருத்தி, சர்வமங்கலம், சுபீட்சம் ஏற்படும்.

தெற்கு முகம்: தெற்குத் திசை நோக்கி விளக்கேற்றுதல் கூடாது. பலவித கஷ்டங்கள் உண்டாகும்.

# அலட்சியத்தினால் நேர்ந்த உயிரிழப்புகள்

இந்தியாவையே உலுக்கி எடுத்துவிட்டது கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் உள்ள புட்டிங்கல் தேவி கோயிலில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடந்த வெடிவிபத்து. வாண வேடிக்கை நிகழ்ச்சியின்போது, வானை நோக்கிச் செல்ல வேண்டிய வெடி ஒன்று தரையிலேயே வெடித்துச் சிதறியிருக்கிறது. அதன் தீப்பொறிகள், வெடி பொருள்கள் வைக்கப்பட்டிருந்த அறையில் விழுந்ததால் அங்கிருந்த வெடிபொருள்கள் வெடித்துச் சிதறின. இந்தக் கொடூர விபத்தில் 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிறார்கள். 300 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருக்கிறார்கள்.

அலட்சியமும், அடுத்தவர்களின் பாதுகாப்பைப் பற்றிய அக்கறையின்மையும்தான் இந்த விபத்துக்கு முக்கியக் காரணங்களாக இருந்திருக்கின்றன: வாண வேடிக்கை நிகழ்ச்சிக்கு மாவட்ட நிர்வாகம் அனுமதி மறுத்திருந்தும், அதை மீறி வாண வேடிக்கை நடத்திய நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் செயல் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது. மாவட்ட நிர்வாகமே அனுமதி மறுத்திருந்த நிலையில், அந்த நிகழ்ச்சி நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பில் இருந்த பொலிசார் என்ன செய்துகொண்டிருந்தனர் என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

கேரளாவில் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், இந்தச் சம்பவத்தை வைத்து ஆதாயம் தேட அரசியல் கட்சிகள் முயலக் கூடாது. இந்தச் சம்பவம் தொடர்பாக, புட்டிங்கல் கோயில் நிர்வாகத்தினர், வாண வேடிக்கை நிகழ்ச்சியை நடத்த ஒப்பந்தம் செய்யப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவம் தொடர்பான நீதி விசாரணைக்கும் கேரள அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இதுபோன்ற நிகழ்ச்சிகளின்போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகளையும் உருவாக்கியிருக்கிறது கேரள அரசு. ஆனால், இந்த விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை என்பதுதான் சோகம்.

விதிமுறைகளை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை, தொலைதூரப் பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வது போன்ற விடயங்களில் ஒருபோதும் சமரசம் கூடாது. கொல்லத்தில் நடந்த வெடிவிபத்தைத் தொடர்ந்து, மத்திய அரசு எடுத்திருக்கும் உடனடி நிவாரண நடவடிக்கைகள், சம்பவ இடத்துக்கு உடனடியாகப் பாதுகாப்புப் படைகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் விரைந்தது போன்றவை இதுபோன்ற அசம்பாவிதங்களின்போது மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட முடியும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கின்றன.

இந்தியாவில் நடந்திருக்கும் இந்த விபத்து, நமக்கும் ஒரு பாடம் என்பதில் சந்தேகமில்லை. அந்த வகையில், அரசியல் நிகழ்ச்சிகள், மத வழிபாட்டு நிகழ்ச்சிகளின்போது பாதுகாப்பு விடயங்களில் உரிய நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுக்க வேண்டிய பொறுப்பு எல்லா அரசுக்கும் இருக்கிறது. ஏனெனில், மனித உயிர்கள் விலைமதிக்க முடியாதவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# சிம்புவின் படத்துக்கு "யூ" சான்றிதழ்



"வல்லவன்" படத்தில் இணைந்து நடித்த சிம்பு, நயன்தாரா மீண்டும் "இது நம்ம ஆளு" படத்தில் இணைந்து நடித்துள்ளனர். 2 வருடங்களுக்கு முன்னர் இந்தப்படம் தொடங்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் வெளிவராமல் முடங்கி இருந்தது. இறுதிக் கட்டமாக சிம்பு, நயன்தாரா பாடல் காட்சியைப் படமாக்க முயன்றபோதுநயன்தாராநடிக்கமறுத்துவிட்டார்.பிறகுஆண்ட்ரியாவுடன் அப்பாடல் படமாக்கப்பட்டது. பட வெளியீடு தொடர்பாக இயக்குனர் பாண்டிராஜ் பலமுறை தனது வருத்தத்தை வெளியிட்டு வந்தார். முன்னதாக தணிக்கையிலும் இப்படத்துக்கு என்ன சான்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது. அதேபோல் படத்துக்கு தணிக்கையில் "யு" சான்றிதழ் கிடைத்திருப்பதாக பாண்டிராஜ் தெரிவித்திருக்கிறார்.

**சிதறல்கள்**

ஒரு மனுசன் அதிகமா பொய் சொல்ல கூடிய ஆள் யாருனா காலிக்கிற பொண்ணு. அவள் கிட்ட தான் கல்யாணத்துக்கு அப் றம் பொய் சொன்னா பிச்சு புடுவா பிச்சு....

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 4 | | 2 |
| | | | 7 | | | | 6 | 1 |
| | 2 | | 1 | 5 | | | | 7 |
| | | 9 | 2 | | | | | |
| 4 | | | 6 | 3 | 7 | | | 9 |
| | | | | | 9 | 7 | | |
| 7 | | | | 4 | 1 | | 8 | |
| 2 | 3 | | | | 6 | | | |
| 5 | | 4 | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 6 | 1 | 4 | 8 | 2 | 5 | 9 |
| 5 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 | 7 |
| 8 | 2 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 | 4 |
| 7 | 4 | 3 | 2 | 8 | 1 | 5 | 9 | 6 |
| 6 | 5 | 1 | 4 | 9 | 3 | 7 | 8 | 2 |
| 4 | 3 | 7 | 8 | 1 | 9 | 6 | 2 | 5 |
| 2 | 9 | 8 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையானஎண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆகஉள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இரு பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மனைவி அமைவதெல்லாம்!!

எமதர்ம மகாராஜன் ஒருமுறை பூமிக்கு வந்தபோது அழகான ஒரு பெண்ணிடம் தனது மனதைப் பறிகொடுத்தான். அவள் மானுடப் பெண் என்றாலும் அவளை மணந்து சில காலமாவது வாழ வேண்டும் என்ற ஆசை அவருக்கு வந்து விட்டது. அந்த மானுடப் பெண்ணை மணந்து அழகான ஆண் பிள்ளைக்கு தகப்பனார் ஆனார் எமதர்மன். அவர் மணந்த பெண் நல்லவள் தான். என்றாலும் நாளாக நாளாக எமனுக்கு அவள் மீது சலிப்புத் தட்டியது. மேல் உலகம் போய் தப்பி விடலாமா என்று நினைக்க ஆரம்பித்தார். ஆனால் பிள்ளை மேல் இருந்த பாசத்தால் மகனை நிர்க்கதியாக விட்டுப் போக மனமும் வரவில்லை. தத்தளித்தார்.

மகன் கொஞ்சம் வளர்ந்ததும் மனம் விட்டு அவனிடமே பேசினார். அவனுடைய அம்மாவிடம் தனக்குள்ள பயத்தையும் விளக்கினார். .மகனே.. நீ சிறந்த வைத்தியனாக வேண்டும். சாகும் தருவாயில் இருப்பவரைக் கூட நீ காப்பாற்ற முடியும். எப்படித் தெரியுமா? ஒருவர் சாவடைவதாக இருந்தால் நான் அங்கு இருப்பேன். உனக்கு மட்டும் கண்ணுக்குத் தெரிவேன். நான் அங்கு இருந்தால் அவருக்கு வைத்தியம் செய்யாதே. நீ வைத்தியம் செய்து அவர் இறந்து போனால் உன் புகழ் குறையும். எனவே யாருக்கு வைத்தியம் செய்தாலும் நான் அங்கு இல்லையென்றால் தைரியமாக மருந்து கொடு. அவன் பிழைத்து எழுந்து கொள்வான். அதனால் உன் புகழ் மேலும் மேலும் பரவும் என்றார் எமன். மனைவியிடம் சொல்லிக் கொள்ளாமல் மகனை அணைத்து கண்ணீர் விட்டு எமதர்மன் நழுவி விட்டார். மகன் மருத்துவம் படித்து மகத்துவம் பெற்றான். அவன் வைத்தியம் செய்தால் எப்படியிருப்பவனும் பிழைத்துக் கொண்டான். ஒருவர் கூடச் சாகவில்லை. எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். யாருக்காவது வைத்தியம் செய்யப் போகும் போது எதிரில் அப்பாவை (எமனை)ப் பார்த்தால் கும்பிட்டுவிட்டு வெளியே வந்து விடுவான். இந்த வைத்தியன் கைவிட்டால் பிறகு சாவு தான் என்று ஊரே புகழ்ந்தது.

கொஞ்ச நாளில் அந்த ஊர் அரசரின் மகள் நோய் வாய்ப்பட்டாள். பலர் வைத்தியம் பார்த்தும் பலனில்லை. இவனை அழைத்தார்கள். எனது மகளைக் காப்பாற்றினால் அவளையே உனக்கு மனைவியாகத் தருகிறேன். ராஜ்ஜியத்தையும் தருகிறேன் என்றார் ராஜா. அவள் படுத்திருக்கும் அறைக்குள் போன வைத்தியனுக்கு அதிர்ச்சி. எமன் (அப்பா)நின்று கொண்டிருந்தார். வைத்தியம் செய்தால் பிழைக்க மாட்டாள். ஆனால் பிழைத்துவிட்டால் அழகான அந்த ராஜகுமாரி, ராஜ்ஜியம் எல்லாம் கிடைக்கும். இடைஞ்சலாக அப்பா குறுக்கே நிற்கிறார். எப்படி அவரை விரட்டுவது? பளிச்சென்று யோசனை பிறந்தது. வாசல் பக்கம் பார்த்து கத்தினான். அம்மா.. அப்பா உள்ளே இருக்கார். ரொம்ப நாளா அப்பாவைக் காணோம் காணோம்னு தேடினாயே.. இங்க இருக்கார்.. என்று அலறினான். அவ்வளவுதான் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று எமன் ஓட்டமாக ஓடிவிட்டார்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.



படித்ததில் பிடித்தது




**மேடம்:** உங்களின் நற்செயல் பிறரால் விமர்சிக்கப்படலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். வருமானம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**இடபம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணியில் ஈடுபடுவீர்கள். இலாபம் உயரும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** தன்மானத்துக்குச் சோதனை ஏற்படலாம். தொழில், வியாபாரம் மந்தகதியில் இருக்கும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு கூடும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** மனதில் சந்தோம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

**சிங்கம்:** விரும்பாத விடயத்தில் இருந்து ஒதுங்குவது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக் இருக்கும். பிள்ளைகளின் நற்செயல் பெருமை தேடித் தரும்.

**கன்னி:** மனதில் தைரியம், மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**துலாம்:** உங்களின் யோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்கள் ஆடம்பர நாட்டம் கொள்வர்.

**விருச்சிகம்:** செயல்களில் கவனச் சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற போட்டியைத் திறம்படச் சமாளிப்பீர்கள். மிதமான வருமானம் கிடைக்கும். பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**தனுசு:** முக்கியமான பணியை மறக்கும் சூழல் ஏற்படலாம். தொழிலில் அளவான உற்பத்தியும், விற்பனையும் இருக்கும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**மகரம்:** சமூகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சியால் வருமானம் கூடும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** உங்களின் நற்செயலைப் பிறர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களுக்குச் செல்லக் கூடாது.

**மீனம்:** சிறு பணியையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் காண்பீர்கள். சேமிக்க வாய்ப்புண்டு. பெண்கள் உறவினர் மத்தியில் கௌரவத்துடன் திகழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தேவையான பொருள்கள்**

மாங்காய் - 1
வெல்லம் - 100 கிராம்
உப்பு - 1 தேக்கரண்டி
மஞ்சள் பொடி - ஒரு சிட்டிகை
அரிசி மா - 2 தேக்கரண்டி
கடுகு - 1 தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 2

## மாங்காய் பச்சடி

**செய்முறை :**

மாங்காயைத் தோலுடன் பெரிய துண்டுகளாக நறுக்கவும். சட்டியில் ஒரு ரம்ளர் தண்ணீரை விட்டு, மாங்காயுடன் பச்சை மிளகாய், உப்பு, மஞ்சள் பொடி இவற்றைப் போட்டு வேக விடவும்.

மாங்காய் வெந்ததும் வெல்லத்தைப் போட்டு, வெல்லம் கரைந்து சேர்ந்தபின், அரிசி மாவைக் கரைத்து விட்டு நன்கு கொதித்தபின் கீழே இறக்கிக் கொள்ளவும்.

அதில் எண்ணெய் ஊற்றி கடுகு போட்டு மாங்காய் பச்சடியில் தாளித்து ஊற்றவும்.





## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 400 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 500 | 400 | 600 | 800 | 600 | – | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 400 | 450 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | 400 | 350 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 450 | 400 | 250 |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | – | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 200 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 350 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 400 | 300 | 250 | 300 | 500 | 250 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 400 | 300 | – |

## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

- சோப்புத் தண்ணீர் கொண்டு காஸ் அடுப்பைத் துடைக்கும்போது ரியூபையும் துடையுங்கள். இதனால் ரியூப் நெடுநாள் உழைக்கும். சுத்தமாகவும் இருக்கும்.
- வீட்டில் மரச் சாமான்களுக்கு உபயோகிக்கும் பெயிண்டை முறத்தில் தடவி காய வைத்தால் நீண்ட நாள்கள் மரம் புதுசு போல இருக்கும். பூச்சிகளும் அரிக்காது.
- செருப்பின் மேல் பாகத்துத் தோலின் அடிப்பாகத்தில் மெழுகுவர்த்தியை நன்றாகத் தேய்த்து, பிறகு அணிந்து கொண்டால் செருப்பு கடிக்கவே கடிக்காது.
- துணி பீரோவை சுத்தம் செய்யும் போது முதலில் பீரோ தட்டுக்களில், பயன்படுத்திய கொசுமேட்டை ஐந்தாறு பரப்பி அதன் மேல் பேப்பர் போட்டுத் துணியை அடுக்கினால் ஒரு வருடம் வரை பூச்சிகள் நெருங்காது.
- கருவேப்பிலைச் செடிக்குப் புளித்த தயிர் அல்லது மோர் விட்டால் நன்கு செழிப்பாக வளரும். தயிர் பாத்திரத்தின் உள்ளே தண்ணீர் விட்டுக் குழப்பி அந்நீரையும் விட்டு வரலாம்.

**நாளை**
**சித்திரை-04**
ஞாயிற்றுக்கிழமை 17.04.2016
தீதி: ஏகாதசி பி.இ.04.07 வரை
நட்சத்திரம்: மகம்
மு.இ.10.26 வரை
ராகுகாலம்: 04.34-06.04 வரை
சுபநேரம்: 09.04-10.34 வரை
ஏகாதசி விரதம்



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 50 | 60 | 60 | 60 | 20 | 30 |
| கத்தரி | 120 | 60 | 80–100 | 80 | 80 | 40 | 50 | 50 |
| கரட் | 100 | 80 | 80–200 | 100 | 120 | 120 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 60 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 100 | 100 | 80 | 40 | 60 | 60 |
| பாகல் | 120 | 100 | 120 | 100 | 100 | 100 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 80 | – | 80 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 90 | 90 | 70 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 80 | 70 | 80 | 90 | 60 | 120 | 80 | 65 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 25 | 50 | 15 | 35 |
| தக்காளி | 120 | 100 | 100 | 140 | 90–100 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை | 10 | 30 | 40 | 30 | 40 | 20 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 30 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 150 | 100–160 | 100 | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 50 | 60 | 50 | 50 | 40 | 20 | 160 |
| கோவா | 50 | 80 | 60 | 60 | 80 | 100 | 50 | 40 |
| வெண்டி | 80 | 60 | 80 | 60 | 100 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 140 | 110 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 38 | 50 | 40–50 | 35 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 250 | 350 | 350 | 200 | 320 | 200 | 250 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 80 | 100 | 120 | 140 | 120 | 70 | 80 |
| இராசவள்ளி | 140 | – | 140 | 160 | 160 | – | 120 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 350 | 300–500 | 250 | 300 | 300 | 300 | 300 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |




## சில்க் சல்வார்

நீண்ட சில்க் சல்வார்கள் அறிமுகமாகியுள்ளன. மேல் கழுத்துடன், வெல்வெட் வேலைப்பாட்டுடன், உடலுக்க இதமான துணியில் இவை வடிவமைக் கப்பட்டுள்ளன. தனித்த நிறங்களில், நாகரிகமாக வடிவமைக்கப்பட்ட கலாசார சல்வார்களாகும். இதன் விலை 6,000 ரூபாவில் இருந்து 7,000 ரூபா ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்




# சம்சுங்கின் மில்க் மியூசிக்

## மற்றுமோர் உதயம் இது

ஒன்லைன் மூலம் சிறந்த பாடல்களைக் கேட்டு மகிழும் வசதியைத் தரும் முன்னணி நிறுவனங்களின் சேவைகளில் சம்சுங்கின் மில்க் மியூசிக் (Milk Music) சேவையும் ஒன்றாகும். சில மாதங்களுக்கு முன்னர் இருந்து சில நாடுகளில் இந்தச் சேவையைச் சம்சுங் நிறுவனம் நிறுத்தி வருகின்றது.

எனினும் சீனாவில் தற்போது மில்க் மியூசிக் சேவையை அந்த நிறுவனம் அறிமுகம் செய்து வைத்துள்ளது.

இதில் உள்ளூர்ப் பாடல்கள் உட்பட ஒரு மில்லியன் வரையான பாடல்களைக் கேட்டு மகிழும் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இருந்தும் இந்தச் சேவையை சம்சுங் நிறுவனத்தின் பிந்திய தயாரிப்புக்களான Samsung Galaxy S7, Galaxy S7 Edge \ u®D Galaxy A9 Pro ஆகிய சாதனங்களின் ஊடாக மட்டுமே கேட்டு மகிழ முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



# டொயோட்டா நிறுவனத்தின் நவீன ரக வாகனம்

வாகன உற்பத்தியில் உலக மக்களின் நன்நம்பிக்கையை வென்றதும், ஜப்பானைத் தளமாகக் கொண்டு இயங்கும் நிறுவனமுமான டொயோட்டா Ubox எனும் நவீன ரக வாகனம் ஒன்றை வடிவமைக்கவுள்ளது.

இதன் வடிவம் உட்பட இதற்கான தொழில்நுட்பக் கட்டமைப்பு என்பவற்றை அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள கிளீம்சன் பல்கலைக் கழகத்தின் சர்வதேச மத்திய நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள் வடிவமைத்துள்ளனர்.

இவ் வாகனமானது கார்களின் அடுத்த தலைமுறையாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த வாகனத்தின் வடி வம், மற்றும் தொழில்நுட்பத்தை விளக்கும் வீடியோ ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (த)



# சணச அபிவிருத்தி வங்கியின் 88ஆவது கிளை சுன்னாகத்தில்

வணிகம்

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சியின் புதிய கிளையானது கடந்த 11ஆம் திகதி சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. சணச அபிவிருத்தி வங்கியின் சுன்னாகம் கிளையானது வாடிக்கையாளர்களுக்கு அதிக செயற்திறன் மிக்க, நட்பான சேவையை அதிநவீன வசதிகளுடன் வழங்குவதற்காக இல. 126, கே கே எஸ் வீதி, சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டு ள்ளது.

சணச அபிவிருத்தி வங்கியானது பிறந்த குழந்தைகளிலிருந்து மூத்த குடிமக்கள் வரை, தனது அனைத்து வாடிக்கையாளர்களுக்குமான பரந்த சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தச் சேவைகள் அனைத்தும் வாடிக்கையாளர்களின் வசதிக்கேற்ப லக்தரு சிறுவர் சேமிப்பு, ஜவய, உத்தமி, உபஹார, தக, ஸ்வர்ணகிரண, ரண்மினி அடகு சேவை, லீசிங், எஸ்.எம்.ஈ பிளஸ் எனும் பெயர்களின் கீழ் காணப்படுகின்றன.

சுன்னாகம் கிளையானது சணச அபிவிருத்தி வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி பொது முகா மைளார் நிமல் ஹப்புஆராச்சியினால் சுன்னாகம் கிளை முகாமையாளர் கே.ஐ.எல். சர்மா மற்றும் சணச அபிவிருத்தி வங்கியின் சில உயர் மட்ட நிர்வாக அதிகாரி களின் பங்கு பற்றலுடன் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் பெண்கள் கைத்தொழில் வர்த்தக சம்மேளன நிறுவனர் செல்வராஜாவும் கலந்து சிறப்பித்தார். (த)

# ஸ்மார்ட் ஷொப் காப்புறுதித் திட்டம் அறிமுகம்



பெயார்பக்ஸ் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ் ஜெனரல் லிமிட்டெட் யூனியன் ஸ்மார்ட் ஷொப் காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்துள் ளது. பரிபூரண கடை காப்புறுதித் திட்டமாக இது அமைந் துள்ளதுடன், இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வியாபார உரிமையாளர்களுக்குப் பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்கள் அமைந்திருப்பது மட்டுமல்லாமல், பல நாடுகளிலும் இந்த நிலை காணப்படுகிறது.

சர்வதேச புள்ளி விவரங்களின் பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களின் பங்களிப்பு அபிவிருத்தியடைந்த நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில் 50 சதவீதமாக அமைந்துள்ளதுடன், உலகளாவிய ரீதியில் 95 சதவீதம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களைக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் மதிப்பீடுகளின் படி, இலங்கையின் 80 சதவீதமான வியாபாரங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபாரங்களில் காணப்படு கின்றன. நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் இவை 50 சதவீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றன.

சிறிய மற்றும் நடுத்தர அளவு வியாபாரங்கள் எதிர்நோக்கும் இடர்களையும் பிரத்தியேக இடர்களையும் காப்பீடு செய்யும் வகையில் யூனியன் ஸ்மார்ட் ஷொப் அமைந்துள்ளது. இதன் மூலமாக சொத்துக்களில் ஏற்படும் சேதங்கள், பணம், பிரத்தியேக விபத்து, தினசரி வைத்தியசாலைக் கொடுப்பனவு மற்றும் தொழிலாளர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் பொதுப் பொறுப்புக்கள் போன்றன காப்பீடு செய்யப்படுகின்றன. யூனியன் அஷ்யூரன்ஸ் ஜெனரலின் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி சஞ்ஜீவ் ஜா கருத்துத் தெரிவிக்கையில், காப்புறுதி சேவை வழங்குநர் எனும் வகையில், இந்தத் தொழில் முயற்சியாண்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் காணப்படும் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. தற்போது நாடு முழுவதையும் சேர்ந்த எமது 43 கிளைகளில் இந்தத் தீர்வைக் கொள்வனவு செய்ய முடியும் என்றார். (த)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநிலம்

தூண்டுவதை அடியோடு நிராகரிக்கின்றோம். வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்ட வரைவை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம். அதற்கு எதிராகவே நாங்கள் செயற்படுவோம்.

இலங்கை ஒற்றையாட்சி நாடாகும். ஒற்றையாட்சி அடிப் படையில் நியாயமான தீர்வை வழங்க எதிர்ப்புத் தெரி விக்கமாட்டோம். அதனைப் புரிந்து கொண்டு பிரிவினை வாதத்தைத் தூண்டாமல் ஒற்றையாட்சி அடிப்படையில் தீர்வைப் பெற வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முயற்சிக்கவேண்டும் - செயற்பட வேண்டும் - என்றார். (த-வ-5)

## மே 2 முதல்

வெளியிட்டுள்ளது. அத்துடன், தொலைத்தொடர்புசேவைகள், தொலைத் தொடர்புத்துறை கருவிகள் மற்றும் இயந்திரங் களின் இறக்குமதி மற்றும் விநியோகம், தொலைத் தொடர் புத் துறைக்கான உயர்வலுக் கருவிகள், சுகாதார சேவை களுக்கும் இனிமேல் பெறுமதிசேர் வரி அறவிடப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (த-வ-5)

## தமிழர்

அறிக்கை வெளியிட்டிருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட் டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே, பிரிட்டன் வெளி விவகார இணை அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர், இராணுவத்தின் வச முள்ள தனியார் காணிகள் சிலவற்றை உரிமையாளர் களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். எனி னும், இன்னும் அதிகளவிலான காணிகள் ஒப்படைக் கப்பட வேண்டியுள்ளன.

காணிகள் கையளிக்கப்பட்டதை பிரிட்டன் வரவேற்கிறது. எனினும் இன்னும் அதிகம் செய்ய வேண்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்குச் சென்றிருந்த போது, இலங்கை அரசுடனான சந்திப்புகளில் காணிகளை மீள ஒப்படைப்பது குறித்து கேள்விகளை எழுப்பியிருந்தேன். அத்துடன், நல்லிணக்க வாக்குறுதிகளை நிறைவேற்று வதற்கு, பிரிட்டன் உதவத் தயாராக இருப்பதாகவும் கூறி யிருந்தேன்.

காணிகளை மீள ஒப்படைப்பதை நாம் தொடர்ந்து ஊக்கு விப்பதுடன், வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பிரிட்டன் தொடர்ந்தும் உதவிகளை மேற்கொள்ளும் என் றும் பிரிட்டனின் வெளிவிவகார அலுவலக இணை அமைச் சர் ஹயூகோ ஸுவையர் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

## திருகோணமலை

அவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை உறுதிப்படுத் தப்பட்டது.

விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள், சந்தேகத் தின் பேரில் பின்னர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இருப் பினும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இந் தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, 2009 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதி பதி மகிந்தவிடம் அறிக்கையை கையளித்திருந்தது.

இதன் பின்னரும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத நிலை யில், ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரிலும், கொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜி கரின் தந்தை இந்த விடயத்தை பிரஸ்தாபித்திருந்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும், கொல்லப்பட்ட மாண வர்களுக்கு நீதி கிடைக்காத நிலையிலேயே, சர்வதேச மன்னிப்புச் சபையினால் இந்தக் கவனவீர்ப்புப் போராட் டம் அமெரிக்காவில் நடத்தப்பட்டுள்ளது. (த-வ-5)

## அமெரிக்காவின்

கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் கொழும்பு ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை குறித்து முழுமையாக இன்னமும் ஆரா யப்படவில்லை. அறிக்கை குறித்து முழுமையாக ஆராய்ந்து பாதுகாப்புச் செயலாளருடனும் பேச்சு நடத்தியதன் பின் னர், குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

## படிப்படியாகக்

டிருந்தது. புதன்கிழமை 35.1 பாகை செல்சியஸாகவும், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 35.2 பாகை செல் சியஸாகவும் இருந்தது. வெப்பத்தின் தாக்கம் இரவு வேளையிலும் எதிரொலித் துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 29.7 பாகை செல்சிய ஸாகவும், புதன்கிழமை இரவு 28.6 பாகை செல்சிய ஸாகவும், நேற்று முன்தினம் வியாழக்கிழமை 27 பாகை செல்சியஸாகவும் வாசிப்பு பதிவாகியுள்ளது.

கடந்த சில தினங்களாக உச்சத்திலிருந்த வெப்பநிலை படிப்படியாக குறைய ஆரம்பித்துள்ளதாக சுட்டிக்காட்டிய வளிமண்டலவியல் திணைக்களத்தினர், இனிவரும் நாள்களில் வெப்பம் குறைவாகவே இருக்கும் என்று குறிப்பிட்டனர். சூரியன் மத்திய கோட்டிலிருந்து தூரச் செல்லத் தொடங்கியிருப்பதால் வெப்பம் குறைவடையும் என்று அவர்கள் கூறியுள்ளனர். (த-வ-5-ரி4)

## கைதாகிய

முன்னாள் போராளியின் தாயார், இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரின் வீட்டில் நின்றிருந்த மோட் டார் சைக்கிளையும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் கொண்டு சென்றுள்ளதாக, முன்னாள் போராளியின் தாயார் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட பின்னர், யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவிக்கையில், உடனடியாகவே இந்த முறைப்பாட்டினை ஆணையாள ருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவரது அறிவுறுத்தலுக்கு அமைவாக நடவடிக்கை மேற் கொள்ளப்படும். இந்த மாதத்தில் ஆணைக் குழுவுக்கு கிடைக்கப்பெற்ற கைதுதொடர்பில், இது மூன்றாவது முறைப்பாடாகும். ஏனைய இரு முறைப் பாடுகளிலும் கைதுக்குரிய ஆவணங்கள் வழங்கப்பட் டுள்ளன - என்றார்.

(த-வ- 5-ரி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி மெக்டலின் பிரகாசராசா



நாரந்தனையைப் பிறப்பிட மாகவும் யாழ்ப்பாணம் மற்றும் வெள்ளவத்தை யை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி மெக்டலின் பிரகாசராசா 13.04.2016 புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற பிரகா சராசா அவர்களின் அன்பு மனைவியும் இளங்கோ, சுமங்கலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சூரியகுமாரன், ஆன் ஆகியோரின் மாமியாரும் மிருதுளன், அஷ்வின், மஞ்சூரிக்கா, ஜஸ்மின் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.


அன்னாரின் பூதவுடல் கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (16.04.2016) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரையும் மறுநாள் (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2.45 மணியளவில் நல்லடக்க ஆராதனைகள் நிறைவேற்றப்பட்டு பி.ப 3.45 மணியளவில் கல்கிசை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**7 2/7, கொலிங்வூட் பிளேஸ்,**
**வெள்ளவத்தை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

011 236 1020

### திருமதி சரஸ்வதி தன்மாவரதர்



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சரஸ்வதி தன்மாவரதர் 14.04.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தன்மாவரதர் (Ex.Chief Train Controller - Anuradhapura ) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலச் சந்திரன்(Lanka Ceylon ), பாலகுமாரன் (Aangernayer Union Assurance ), பாலதயாளன் (Rupavahini Corp, The Hifi Center), பாலராசன்( Spectrum, Taxas USA), சீதாலஷ்மி, பாலேந்திரன்( UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் சகுந்தலாதேவி, காலஞ்சென்ற சுலோச்சனா, கெங்கா(Teacher St.Thomas College - Mount Lavinia), சிவகாமசுந்தரி(USA ), சிவநிதி( UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்சன்( Icone Developers), ஜெனனி (Wayamba University ), பிரியதர்சன்(பம்பலப் பிட்டி இந்துக் கல்லூரி), பாலினி(சைவமங்கையர் வித்தியாலயம் - வெள்ளவத்தை), யாதேவ்(மருத்துவ பீடம் - யாழ் பல்கலைக் கழகம்), அபிராம்(UNSW - Australia ), சாரங்கன் (புனித பரிதோமாஸ் கல்லூரி - கல்கிசை), றொஷான்(USA), கிரிசான் (UK), நிருத்தனா(UK) ஆகியோரின் அப்பம்மாவும் காலஞ் சென்றவர்களான லட்சுமிதேவி, விஸ்வநாதன் மற்றும் சிறீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வாமதேவா மற்றும் செல்வராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பஞ்சாட்சரம், பஞ்சலட்சுமி, ஜெயலட்சுமி, செல்வலட்சுமி ஆகியோரின் பெரியம்மாவும் மற்றும் கேதார கௌரி, சுமதி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.04.2016) சனிக்கிழமை மு.ப 10 மணிமுதல் மாலை 6மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**22 2/1, Moor Road,**
**Wellawatte.**


**தகவல்:**
**த.பாலகுமாரன் 077 301 3756**
**த.பாலச்சந்திரன் 077 368 8152**
**த.பாலதயாளன் 071 627 724**

(c 20894)
(14.17.18)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை நித்தியானந்தன்

(ஓய்வுபெற்ற DOA/ QS, Water works Department)



கொழும்பைப் பிறப்பிட மாகவும் ஆஸ்திரேலி யாவை (Brisbane) வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நித்தியானந்தன் (ஓய்வு பெற்ற (DOA/ QS, Water works Department) 12.04.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி செல்லத்துரை- சிவபாக்கி யம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவஞானசம் பந்தன்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராதாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சாருமதி மற்றும் சியாமளரதி (ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற கிரிராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சௌந்தராம்பிகை, நிற்சிங்கம், தையல்நாயகி, சிவன டியார், சிவானந்தவல்லி, கேதாரதாஸ் காலஞ் சென்ற ஆனந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருணண், சியாமளன், பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஞானகௌரி, ஞர்னரமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் (Brisbane) ஆஸ்திரேலியாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: **பொறியியலாளர்,**
**மு. தில்லைநாதன்(சகலன்- நல்லூர்.)**
**தொடர்பு: 021 222 5510**
**00 617 3843 2356(ஆஸ்திரேலியா)**

(68232)
(12.18)

### திருமதி மங்கையற்கரசி குமாரசாமி

(ஓய்வு பெற்ற மருத்துவத் தாதி)



யாழ்.நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியாவை வதிவிடமா கவும் சாவகச்சேரி, வறணி வைத்தியசாலைகளில் தாதியாக வும் கடமையாற்றிய திருமதி மங்கையற்கரசி குமாரசாமி 11.04.2016 திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனக சபை குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற புஸ்பமலர் மற்றும் பவளமலர்(வாணி - கனடா), ஜெயமலர்(குஞ்சா - ஆஸ்திரேலியா), அரியமலர்(ராஜி - ஆஸ் திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர் களான இராசையா, விநாயகமூர்த்தி மற்றும் சிவலோகநாதன் (கணேஸ் - ஆஸ்திரேலியா), சிவநேசன்(ரமணி - ஆஸ்திரே லியா ) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிரிதரன், சிவரூபி (தாவடி - உழவர் வீதி), சண்முகராசா, அனுசியா(கிளிநொச்சி), சந்திரகோபால் - யசோதா(முருங்கன்), பரதன் - இந்துமதி (ஆஸ்திரேலியா), ராஜ்குமார் - கௌசல்யா(கனடா), சிவகுமார் - மதுமதி(கனடா), பரணிதரன் - துஷ்யந்தி(கனடா),தரணிதரன் - காயத்திரி(கனடா), சந்திரமோகன் - சிவசாந்தி (ஆஸ்திரேலி யா), சிவசத்தியா(ஆஸ்திரேலியா), சிவாணி (ஆஸ்திரேலியா), சிவசங்கரி(ஆஸ்திரேலியா), சங்கவி(ஆஸ்திரேலியா) ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் யாழினி, சாரங்கன், லக்சன், ராஜ் குமார், வசீகரன், ஐங்கரன், இந்துஜன், துர்க்கா, வசந்த ராஜ்,லாவணியா, மாறன், சேரன், ஆர்த்தி, கவின், காவியா, சக்தி, யோதி, கதிர், செழியன், சஞ்சீவ், ஓவியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். அதே நாள் அன்னா ரது நினைவு நிகழ்வுகள் தாவடி, உழவர் வீதியில் உள்ள சிவரூபி கிரிதரனது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**1202, திருநகர் தெற்கு,**
**கிளிநொச்சி.**

**தகவல்:**
**சண்முகராசா அனுசியா**
**மற்றும்**
**பேரப்பிள்ளைகள்**

(K 13)
(14.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நீங்கா நினைவுடன்

சாமஸ்ரீ சேவை ரெத்தினம்

### அமரர் கந்தையா கந்தவேள்

(HNDA, BA, MA நிர்வாக உத்தியோகத்தர் (Supra)
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம் யாழ்ப்பாணம்)



சோறூட்டி தாலாட்டி தோளில் எமை தூங்க வைத்து
மோட்டார் வண்டியில் சுற்றி முழுவதும் எமக்குக் காட்டி
கேட்டதெல்லாம் யோசித்து பாசமாய் எமை அணைத்து
முதல் வந்த முத்தென்றும் 'குருனை' என் குட்டியென்றும்
கொஞ்சுவீர்களே அப்பா!ஆறு வயதுக்குள்
அனைத்தும் முடிந்ததப்பா கண்ணெறி பட்டதுவோ எல்லாம்
கனவாகிப் போனதுவே காணும் இடமெங்கும்
அப்பாவின் அன்புருவம் ஆறு மனிக்கு ஏங்குகின்றோம்
அப்பா வருவீர்களென்று 'ஆசைக்குஞ்சுகள்' நாம்
பண்ணிய பாவம் என்ன ?ஆண்டவா! அத்தனை பிறவியிலும்-எம்
அப்பாவை எமக்கு கொடு ஆயுசு நூறுடன் என்றும் நினைவுடன்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### முத்தையா வெள்ளைச்சாமி

யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா வெள்ளைச்சாமி நேற்று (15.04.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முத்தையா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராக்கம்மாவின் அன்புக் கணவரும், கணேசன், முத்துலட்சுமி, கந்தசாமி (ரமணன் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்), கதிரேசன், சுதாகரன் (நீலாம் பரி உணவகம்), ஜெயலட்சுமி (தனுஸ் கபே), இலங்கேஸ்வரன், நகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், கந்தசாமி,தங்கராசா, புண்ணியநாதன், ருக்மணி, லட்சுமி, மீனாட்சி, சிவலட்சுமி, செல்வி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

48/01, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
சுதாகரன் (077 60 95917)

தகவல்:
குடும்பத்தினர்.

### வேலையாள்கள் தேவை

கொழும்பு நகரில் நிரந்தரமாக வேலை செய்வதற்கு பெயின்ட் வேலையாள்கள், உதவியாளர்கள் தேவை.

077 230 9164

### நவக்கிரி எல்லாளன்

விளையாட்டுக் கழகம் நடத்தும்

மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

இடம் : நீர்வேலி சவாரித் திடல்
காலம் : 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 1.30 மணிக்கு போட்டிகள்
ஆரம்பமாகும்



பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
எல்லாளன் விளையாட்டுக் கழகம்.

(J/384)(10/17)

### கண்ணீர் அஞ்சலி



கடந்த (14.04.2016) வியாழக்கிழமை
கனடாவில் இறைபதம் அடைந்த

**அழகப்போடி பெரியதம்பி**

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்
அங்கத்தவர்கள், நண்பர்கள்,
(J/387) 16/2, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.


## கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி, உருத்திரபுரம் எள்ளுக் காட்டுப் பகுதியில் 3 கிலோ 500 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பகுதியிலிருந்து கொழும்புக்கு ரயிலில் கொண்டு செல்வதற்காக, நேற்று மாலை 6.30 மணியளவில் ஓட்டோவில் கொண்டு சென்ற வேளை, இரகசியத் தகவல்ஒன்றின் அடிப்படையில் பொலிஸார் ஓட்டோவைசோதனையிட்ட போது கஞ்சா வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து ஓட்டோ சாரதியையும், அவருடன் சென்ற மற்றையவரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர். இதில் ஒருவர் உருத்திரபுரம் எள்ளுக் காட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்மற்றயவர் பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

(வ-ரி 3)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
18 . 11 . 1979

இறப்பு
28 . 04 . 2015

அமரர் **ஜெயரட்ணம் ஜெயகாந்**

திதி: தசமி

ஓராண்டு கரைந்தோடி விட்டது
கண்ணீரோ காய மறுக்கிறது – காந்தா
நோயென்ற போர்வை மூடிய மாயந்தான் – என்னே
புரிந்தும் புரியாது தவிக்கிறோம் நாமிங்கு
நீ சென்ற பாதையெங்கும் தேடுகின்றோம்
காணாது கலங்குகின்றோம் – காந்தா
உன் ஆத்ம சாந்திக்காக வண்ணை வெங்கடேஸ்வர
பெருமான் பாதம் நித்தம் நித்தம் தொழுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆண்டாவளவு,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(மண்டைதீவு 5ஆம் வட்டாரம்)

உன் நினைவில் வாடும்,
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்தரிப்பு நிலைய நிழற்குடை அமைக்க பயணிகள் கோரிக்கை

சாவகச்சேரி–தனங்களப்புச் சந்தியில் பொது மக்களின் நன்மைகருதி பஸ்தரிப்பு நிலைய நிழற்குடையொன்று அமைக்கப்பட வேண்டும் என அந்தப் பகுதி மக்களால் கோரப்பட்டுள்ளது.

தனங்களப்புச் சந்தி யாழ்ப்பாணம், மன்னார் வீதி, சாவகச்சேரி தனங்களப்பு வீதிகள் சந்திக்கும் இடத்திலேயே இதனை அமைக்க மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தியில் முன்னர் படையினரால் தற்காலிகமாக நிழற்குடையொன்று பனை ஓலையால் வேய்ந்து அமைக்கப்பட்டிருந்தது. பின் னர் அது சேதமடைந்த நிலையில் மேலும் பொது மக்கள் இணைந்து மீளவும் பனை ஓலைகளால் நிழலுக்காக தற்காலிக மாக வேயப்பட்டுள்ளது.

தற்பொழுது வெயில் காலமாகையால் சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பெண்கள், குழந்தைகள், நோயாளர்கள், வயலுக்கு வருபவர்கள், பாடசாலை மாணவர்கள் என காலையில் பெருமளவு மக்கள் அந்த நிழற் குடையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே நிரந்தர நிழற்குடையொன்றை அமைத்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (த-ஐ-131)

### சுவிஸில்

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், சுவிஸில் அடைக்கலம் கோரியுள்ளவர்களின் எண்ணிக்கை, 45 வீதத்தினால் வீழ்ச்சியடைந் துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் காலாண்டில், 8 ஆயிரத்து 315 பேர் சுவிஸில் அடைக்கலம் கோரி விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி பராசக்தி சண்முகம்

( ஓய்வு பெற்ற நெசவுக் கைத்தொழில் போதனாசிரியர் )



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரம், வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் வண்ணார் பண்ணையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பராசக்தி சண்முகம்(இரத்தினம் - ரீச்சர்) 15.04.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் (ஆசைப்பிள்ளை ஆசிரியர்) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சௌந்தரநாயகி, தையல்நாயகி(இராசம்) மற்றும் நாகரட்னம், நாகலிங்கம் (செல்வம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

**23, நாவலடி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.** (J/379) (14.17.18)

**தகவல்: குடும்பத்தினர்.
021 222 0574 (யாழ்)
00190 555 42751 (கனடா)**

## திருமதி பாக்கியம் மருதப்பு



புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராசபாதை வீதி,திருநெல்வேலியை (கோப்பாய் பொலிஸ் நிலையம் அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் மருதப்பு நேற்று (15.04.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதப்புவின்(புங் / பல நோக்கு கூட்டுறவு சங்கம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், நித்தியகல்யாணி (பிரான்ஸ்) மற்றும் குணபாலன், றஞ்சினி(ஜேர்மன்), காலஞ்சென்ற யமுனா மற்றும் லலிதா (யா/ செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தராணி (கொழும்பு), காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் ஹேமா (பிறப்பு.இறப்பு விவாகப்பதிவாளர் திருநெல்வேலி), சிவகுமார்(ஜேர்மனி), குலேந்திரன் (அச்சுவேலி ஆஸ்பத்திரி), சற்குணராஜா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராசபாதை வீதி, திருநெல்வேலி.**

**தகவல்
ம. குணபாலன் (மகன்)
077 405 2045**

## மரண அறிவித்தல்கள்

### தனபாலசிங்கம் வசீகரன்

(பழைய மாணவன் ஹாட்லிக் கல்லூரி)

(quantity Surveyor, Crown Engineering pvt Ltd)



V.M. றோட், பருத்தித்துறையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் வசீகரன் நேற்று (15.04.2016) வெள்ளிக்கிழமை அகால மரண மடைந்துவிட்டார்.

அன்னார் தனபாலசிங்கம் - ஜீவறோகினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், உதயகரனின் அன்புச் சகோதரனும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04. 2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**V.M. றோட், பருத்தித்துறை.
077 625 9721**

**தகவல்: குடும்பத்தினர்.**

## புவனேஸ்வரி அரியரத்தினம்



அல்வாய் மேற்கு, திக்கத்தை பிறப்பிடமாகவும் துர்க்காபுரம் தெல்லிப்பழையை வசிப்பிட மாகவும் கொண்ட புவ னேஸ்வரி அரியரத்தினம் நேற்று (15.04.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அரியரத்தினத்தின் அன்பு மனைவியும் ராஜ்குமார், சாந்தினி, சசிக்குமார், ரமேஸ்குமார் (சவுதி), குமுதா, ரஜிந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேஸ்குமார் (குவைத்), இராசேந்திரன் (சத்தியா பல்பொருள் வாணிபம்-அளவெட்டி), மதன் (சவுதி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிதா, சியாமளா, அனுசியா ஆகியோரின் அன்பு மாமியும் தனுஷன், சாளினி, டக்ஷனா, டிலக்சனா, டிலக்சிகா, சர்மி, சிந்துஜன், பிரகாஷ், தினுயா,லகீசன், ஹன்சிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் தர்மலிங்கம், கமலாதேவி, விஸ்வரத்தினம் (டென்மார்க்) செல்வமலர், இந்திராதேவி (டென்மார்க்), ஆகியோரின் அன்புச் சகோதரியும் கார்த்திகா(டென்மார்க்), ராதிகா, நிவேதிகா (பிரான்ஸ்), அகல்யா(யாழ் பல்கலைக்கழகம்), கரன் (டென்மார்க்), கவிதா (லண்டன்), பிரியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் தர்ஷன், தனுஷன், ரூபன் (லண்டன்), தபீந்திரன் (யாழ் பல்கலைக்கழகம்), தர்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் கிஸ்ணா, கிசோர், கிஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

**தகவல்
குடும்பத்தினர்.
077 196 3454**

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் சற்குணம்

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 22.08.1934 | 11.04.2016 |



யாழ். ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சற்குணம் அவர்கள் 11.04.2016 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. திருமதி சுப்பிர மணியம் தம்பதிகளின் அன்பு மகனும், திரு. திருமதி செல்லையா தம்பதிகளின் அன்பு மருமகனும், பொற்கொடி அவர்களின் அன்புக் கணவரும், விஜயகுமார் (சுவிஸ்), பாலகௌரி (லண்டன்), சுரேஸ்குமார் (சுவிஸ்), செந்தில்குமார் (லண்டன்), சர்மிளா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கேதீஸ்வரி, பூபாலசிங்கம் (சுவிஸ்), உலகநாதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேமலதா(சுவிஸ்), ரவீந்திரன் (லண்டன்), சியாலினி (சுவிஸ்), சசிகலா (லண்டன்), சாந்தகுமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், புவனேஸ்வரி, ராயேஸ்வரி, சபாலிங்கம், இரத்தினசிங்கம், துரைராஜசிங்கம், மகாலிங்கம், அன்ன லிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌத்திரா, விஸ்னா, எழில், கரன், பவீன், சமீர், இசாந், தருண், டிலன், டிலக்ஸ், டிக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி செம் பாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோகுலம், அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(J/385) (10,17)

## கந்தையா செல்வரத்தினம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையாசெல்வரத்தினம்நேற்று(15.04.2016)வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா- இராசம்மா தம்பதியின் அன்பு மருமகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் நந்தகுமாரி (ஆசிரியை– யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்),நந்தகுமார்(பிரான்ஸ்) காலஞ்சென்ற ஜெயகுமாரி மற்றும் ரஜித குமாரி (பிரதேச செயலகம் சாவகச்சேரி) செல்வகுமாரி கிருத்திகா (வட்டக்கச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேம்குமார் தவநிதி பிரபாகரன் சுஜிகரன் செந்தில்குமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிதரன் கிருபரன் தர்சன் தனுஷன் சுகிர்தன் நியாஸ் ஹிம்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பேரின்பநாயகத்தின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற யோக ராசா மற்றும் குமாரமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராசமணியின் அன்பு அண்ணாவும் பரமேஸ்வரியின் அன்பு அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04. 2016)ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, கொடிகாமம்**

**தகவல்: குடும்பத்தினர்
077 558 1443**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஏப். 16

**இளைஞர் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழக்த்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்இக்பால் அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதவுள்ளது.

**யுனைற்ரெட் வி.கழகத் தொடர்**

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக்கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யுனைற்ரெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் அடம்பன் ஐக்கிய அணியை எதிர்த்து பணங்கட்டுக்கொட்டு சென். ஜோசெப் அணி மோதவுள்ளது.

**அறிவொளி வி.கழகத் தொடர்**

பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் விள்ளயாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23-108)





## மருதநிலா - 786 இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 16

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து 786 அணி மோதவுள்ளது. யங்ஸ்ரார் வி.கழக மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு குறித்த இறுதியாட்டம் நடைபெறும். (ம-23)





# றொனால்டோவின் ஆட்டத்தால் அரையிறுதியில் ரியல் மட்ரிட்

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் நேற்று நடந்த வோல்ப்ஸ்பேர்க் அணிக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் ரியல் மட்ரிட் அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஐரோப்பாவில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட், வோல்ப்ஸ்பேர்க் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ றொனால்டோவின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. 15ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்த றொனால்டோ, அடுத்த 2 நிடத்தில் மற்றொரு கோலையும் பதிவுசெய்தார். இதனால் முதல் பாதியில் ரியல் மட்ரிட் 2:0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியின் 77ஆவது தனது ஹற்றிக் கோலை றொனால்டோ பதிவுசெய்ய முடிவில் ரியல் மட்ரிட் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

## கரவெட்டி பிரதேச கால்பந்தாட்டம்

கரணவாய், ஏப். 16

கரவெட்டி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய இளைஞர் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் இளைஞர் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்தி இளைஞர் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் இளைஞர் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிமார் கோவிலடி சிறிஅம்பாள் இளைஞர் கழகத்தை எதிர்த்து கலட்டி இளைஞர் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் கரவை இளைஞர் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் இளைஞர் கழகமும் மோதவுள்ளன.

நாளை காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் இளைஞர் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா இளைஞர் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் அண்ணா சிலையடி இளைஞர் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை அன்பாலயம் இளைஞர் கழகமும், நவிண்டில் கலைமதி இளைஞர் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் இளைஞர் கழகமும், அல்வாய் பாரதி இளைஞர் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி மைக்கல் இளைஞர் கழகமும் மோதவுள்ளன. (ம-1[illegible])

# பிரதேச செயலகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரும் கபடித் தொடரும்

கரணவாய், ஏப். 16

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினர் நடத்தும் பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட துடுப்பாட்டத் தொடர் மற்றும் கபடித் தொடர் என்பன இன்று சனிக்கிழமையும்நாளைஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் காரைநகர் பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியும், கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்த ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும், யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து நெடுந்தீவு பிரதேச செயலக அணியும் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணியும் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறும் பெண்களுக்கான கபடித் தொடரில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து நெடுந்தீவு பிரதேச செயலக அணியும் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணியும் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து காரைநகர் பிரதேச செயலக அணியும் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (ம-108-422-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெக்ரா இன்று களமிறங்கார்

ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெறவுள்ள ஹைதராபாத் - கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் நெக்ரா ஹைதராபாத்தைப்பிரதிநிதித்துவம் செய்யமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஹைதராபாத்-பெங்களூர் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் நெக்ராவுக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இதனால் அவர் அந்த ஆட்டத்தின் பாதியிலேயே விலகினார். தசைப்பிடிப்பு இன்னும் குணமடையாததால்,அவர் இன்றைய ஆட்டத்திலும், நாளை மறுதினம் இடம்பெறவுள்ள மும்பைக்கு எதிரான ஆட்டத்திலும் களமிறங்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஞானவைரவர் அணியின் கால்பந்தாட்ட தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 16
நயினாதீவு ஞானவைரவர் ஆலய சித்திரை பரணி திருவிழாவை முன்னிட்டு தீவக கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நயினாதீவு ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் புதன்கிழமை நயினாதீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 22 கழகங்கள் பங்குபற்றுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)



# வெற்றிக்குத் திரும்பியது டெல்லி
# சொந்த மண் பலம் கைகொடுக்க

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற டெல்லி-பஞ்சாப் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 8 இலக்குகளால் வெற்றி பெற்றது டெல்லி.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. பஞ்சாப்பின் ஆரம்ப வீரர்களாக முரளி விஜய் மற்றும் வோக்ரா. முதல் பந்துப்பரிமாற்றத்தையே அச்சுறுத்தலாக ஆரம்பித்தார் சகீர்கான். ஓர் ஓட்டத்துடன் முரளி விஜய் ரண்அவுட் ஆனதுதான் தாமதம் பஞ்சாப்பின் துடுப்பாட்ட வரிசை ஆட்டம் கண்டது. வோக்ரா ஒரு முனையில் அச்சுறுத்தினாலும்,மறு முனையில் எந்தவொரு வீரரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. 13 ஓட்டங்களுடன் மிச்செல் மார்ஷை பவிலியனுக்கு அனுப்பிய மிர்சா, தனது சுழலை முன்வரிசை வீரர்களிடையே தொடர்ந்தும் நிலைப்படுத்தி மில்லரை 9 ஓட்டங்களுடனும் மக்ஸ்வெலை ஓட்டமெதனையும் பெறாமலும் இருக்கைக்குத் திருப்பினார். பத்துப் பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் பஞ்சாப் 51-4. சகீர்கானின் வேகமும் நேற்று நன்கு எடுபட்டது. 32 ஓட்டங்களுடன் வோக்ரா ஆட்டமிழக்க டெஸ்ட் பாணியில் இன்னிங்ஸை கட்டமைத்தார் அக்சர் பட்டேல். அவர் 22 பந்துகளை எதிர்கொண்டு 11 பந்துகளையே எடுத்திருந்தார். 19 பந்துப்பரிமாற்றத்தின் நிறைவில் 99-9 என்ற நிலையில் இருந்தது பஞ்சாப். இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் சாகு ஒரு பவுண்டரியையும் சிக்சரையும் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 111-9.
பந்துவீச்சில் டெல்லியின் சார்பாக மிர்சா 4 இலக்குகளையும், சகீர்கான், மொறிஸ், யாதேவ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக்களமிறங்கியது டெல்லி. ஆரம்ப வீரர்களாக ஐயர் மற்றும் குயின்டன் டி ஹொக். நடுவரின் தவறான தீர்ப்பால் ஐயர் ஆட்டமிக்க வேண்டியதாயிற்று. இருப்பினும் ஆட்டத்தில் பதற்றத்தை உணராது ஹொக்குடன் இணைந்து அணியைக்கொண்டு சென்றார் சாம்சன். மேலதிக இலக்கை இழக்காது 50 ஓட்டங்களை எட்டியது டெல்லி. வழக்கம் போல் ஹொக் அடித்தாடி 38 பந்துகளில் தனது அரைச்சதத்தை எட்டினார். அணியின் ஓட்டம் 100ஆக இருந்த பொழுது 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சாம்சன். சாம்சன் ஆட்டமிழந்த பொழுது 43 பந்துகளில் 12 ஓட்டங்கள் பெறப்பட வேண்டும் என்றிருந்தது. சிக்சருடன் ஆட்டத்தை முடித்தார் நெகி.
பந்துவீச்சில் பஞ்சாப்பின் சார்பாக சன்டீப் சர்மா, அக்சர் பட்டேல் இருவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம)

## சான்றிதழும் பயிற்சி வழங்கலும்

கிளிநொச்சி, ஏப். 16
நடப்பு வருட தேசிய மட்ட இளையோர் சதுரங்கத் தொடர்களுக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டோருக்கு பயிற்சி வழங்குதலும், சான்றிதழ் பெறத்தகுதி பெற்ற எண்பது வீர,வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளன.
கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வை கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. மட்டுமல்லாமல் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளோருக்கான பதிவுகளும் இடம்பெற்றுள்ளதுடன்,அதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளதால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து வீர,வீராங்கனைகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக இலங்கை சதுரங்கச் சம்மேளனம் அறிவித்துள்ளது. (ம)



# சம்பியனானது செம்மலை உதயசூரியன்

யாழ்ப்பாணம், ஏப். 16
செந்தமிழ் விளையாட்டுக்கழகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் செம்மலை உதயசூரியன் அணி சம்பியனானது.
செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில்,செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச்சம்பியனானது.
சிறந்த வீரனாக செம்மலை உதயசூரியன் அணியின் வேணுதாஸ் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக செல்வபுரம் சந்திரன் அணியின் நிகாந்தன் தெரிவானர். தொடரில் அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரராக சந்திரன் அணியின் நிக்சன் தெரிவானார். (ம-23)

## இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கொள்ளையர்களால் கொலை

இங்கிலாந்தின் இளம் கிரிக்கெட் வீரரான அட்ரியன் ஜோன் கொள்ளையர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கிரிக்கெட் உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
அட்ரியன் இங்கிலாந்தில் கிரிக்கெட் அக்கடமி ஒன்றுக்காக விளையாடி வந்தவர். எதிர்காலத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக விளையாடத் திட்டமிட்டிருந்த அட்ரியன் விடுமுறைக்காக மேற்கிந்திய தீவுகளில் உள்ள டிரினிடாட் சென்றிருந்தார்.
இந்த நிலையில் கடந்த 10ஆம் திகதி இரவு அங்குள்ள சான் ஜுவான் என்ற பகுதியில் காரில் சென்று கொண்டிருந்த அட்ரியனை வழி மறித்த கொள்ளையர்கள், அவரின் அலைபேசி, பணம் என்பவற்றை பறித்து விட்டு விரட்டியுள்ளனர். அப்போது ஒரு கொள்ளையன் அட்ரியனின் காரை நோக்கிச் சுட்டதில் அவரது தலையின் பின் பகுதியில் குண்டுபாய்ந்தது. இதில் அவர் சம்பவ இடத்திலே சாவடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவத்துக்கு கெயில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். (ம)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியூஸ் ஒருவரே தலைவர் ; இலங்கை கிரிக்கெட் சபை அதிரடி



அனைத்து வகைத் தொடர்களுக்கும் இனி ஒரு அணித்தலைவர் என்ற மாற்றத்தை இலங்கை கிரிக்கெட் சபை கொண்டு வந்துள்ளது. இதன்படி டெஸ்ட், ஒருநாள், ரி-20 என மூன்று விதமான ஆட்டங்களுக்கும் மத்தியூஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் சுமதிபால இந்தத்தகவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இனி இலங்கை அணியின் டெஸ்ட், ஒரு நாள் மற்றும் ரி-20 தலைவராக மத்தியூஸ் செயற்படுவார். அதேபோல் சந்திமல் துணைத்தலைவராக செயற்படுவார். இவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தலைவராகச் செயற்படுவார்கள். ஒரு தலைவர் சிறந்த துடுப்பாட்ட வீரராகவோ, பந்து வீச்சாளராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை, அணியை நன்றாக வழிநடத்தத் தெரிந்தால் போதும். இதற்கு உதாரணமாக மேற்கிந்தியத் தீவுகளைக் குறிப்பிடலாம் . மத்தியூஸும் அந்த வகையில் சாதிப்பார் என்ற நம்பிக்கையுள்ளது என்றார். (ம)

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும்
சரவணபவன் அறக்கட்டளை
இணைந்து நடத்தும்
சித்திரைப் புதுவருட விழா – பண்டத்தரிப்பு 2016

பிரதம விருந்தினர்
மாண்புமிகு. இரா.சம்பந்தன் (பா.உ)
(எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு)

சிறப்புவிருந்தினர்
கௌரவ.மாவை.சோ.சேனாதிராசா (பா.உ)
(தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

கௌரவவிருந்தினர்
கௌரவ.ஈ.சரவணபவன் (பா.உ)
(தலைவர், உதயன் குழுமம்)

காலம்: 16.04.2016 சனிக்கிழமை
இடம்: பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானம்

மரதன் ஓட்டம்
(ஆண் & பெண்)
காலை 6.30 மணிக்கு,
ஆரம்பம் :
பண்டத்தரிப்பு
இந்துக் கல்லூரியிலிருந்து

மாலைநேர கலை நிகழ்ச்சிகள்
மாலை 3.30 மணிக்கு,
- கிராமியநடனம் – போட்டிநிகழ்ச்சி
- பரிசளிப்புவைபவம்

சிறப்பு மாலை நிகழ்வு
“தேசியத்தின் சிறந்த இசைக் கலைஞர்கள்” பங்குகொள்ளும்
“இன்னிசை இசைநிகழ்வு”

விளையாட்டு நிகழ்வுகள்
- தாச்சிப் போட்டி (ஆண் & பெண்)
- கபடிப் போட்டி (ஆண் & பெண்)
- கயிறு இழுத்தல் (ஆண் & பெண்)
- தலையணைச் சண்டை
- கிறீஸ் மரம் ஏறுதல்
- தயிர்முட்டி உடைத்தல்
- சங்கீதக் கதிரை
- யானைக்கு கண் வைத்தல்
- முதியோர் நிகழ்வு (60வயதிற்கு மேற்பட்டோர்)
- சிறுவர் நிகழ்வு (13வயதிற்கு உட்பட்டோர்)

இணை. ஒழுங்கமைப்பு : உதயவாழ்வு வலி.மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்
மேலதிகவிபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு: 077 053 6379 ஊடக அனுசரனை : உதயன்

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.